
www.padippakam.com

16 - 30 செப்டம்பர் 1997 □ ரூ. 3.50

'தேசிய'த்திடம் திராவிடத்தின் சரணாகதி

# புதிய ஜனநாயகம்



திரைப்படத் தொழிலாளர் குடும்பம் தற்கொலை

## கொலைகாரப் படைப்பாளிகள்

www.padippakam.com

# கழிவு நீரோடையாக பவானி ஆறு

தமிழகத்தை இன்றும் வளமாக்கி வரும் நதி பவானி. பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் விளைந்து பயனளிப்பது பவானி நீரால்.

ஆனால் நாடு முன்னேற எனக் கூறி இந்த ஆற்றின் கரைகளில் உருவான, உருவாகும் ஆலைகளால் பவானி நதி நீர் நஞ்சாக மாறி வருகிறது. வளமான விளை நிலங்கள் பாலையாகும் அபாயம்; குடிக்கவும் நீரின்றி பரிதவிக்கும் பல இலட்சம் மக்கள்.

இவற்றுக்குக் காரணமான பெரிய இரசாயனத் தொழிற்சாலைகள்:

1. செர்வால், 2. விஸ்கோஸ், 3. சுதர்சன் பேப்பர் மில், 4. கே.ஜி. டெனிம், 5. சிறுவாணி டெக்ஸ்டைல், 6. வைஷ்ணவிதேவி டெக்ஸ்டைல்ஸ், 7. சக்தி சுகர்ஸ், 8. கோயம்புத்தூர் காட்டன் கம்பெனி, 9. வி.ஜே. என்ஜினியரிங், 10. சாரதா டெர்ரி புராடக்ட்ஸ், 11. யுனைடெட் பிளீச்சர்ஸ்

சேசாயி பேப்பர் மில் ஈரோடு பகுதியில் காவிரிக் கரையிலும் சக்தி சுகர்ஸ் சத்தியமங்கலம் பகுதியில் பவானி ஆற்றின் கரையிலும் அமைந்துள்ளன. இந்த நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரினால் பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம் பாழ்பட்டு பாதிப்படைந்தவர்கள் ஏராளம்.

### விஸ்கோஸ் ஆலையால் உயிரிழந்தோர், பாதிக்கப்பட்டோர்

மரப்பட்டையிலிருந்து செயற்கை இழை தயாரிக்கும் தொழிற்சாலையாகத் துவங்கி, பின் மரக்கட்டையிலிருந்தே செயற்கை பருத்தி, செயற்கை இழைகளைத் தயாரிக்கும் விஸ்கோஸ் ஆலை மேட்டுப்பாளையமருகே 6 கி.மீ. தூரத்தில் உள்ளது.

மரக்கூழ் தயாரிக்கும் போது மரப்பட்டைகளிலிருந்து பிரியும் துத்தநாகம், கந்தகம் போன்ற நச்சுப் பொருட்கள் பவானி ஆற்றில் கழிவு நீராகக் கலக்கிறது. வீரியமிக்க விஷமான துத்தநாகம் கலந்த நீர் சுத்திகரிக்கப்பட்டாலும், விஷத்தன்மை மாறுவதில்லை. கந்தகம் கலந்த நீர் கந்தகத் தன்மை பெற்று அதைப் பயன்படுத்தும் மக்களுக்கு குடல், வயிறு சம்பந்தமான நோய்களைத் தருகிறது. ஆலை தொடங்கியது முதல் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த தொழிலாளர்கள் சுமார் ஆயிரம் பேர்.

இப்படி விஸ்கோஸ் தொழிற்சாலையால் பாதிக்கப்பட்ட மக்கள் சுமார் 45 இலட்சம் பேர். இதனால் இன்றைக்கு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு, ஆலையை மூட வேண்டிய சூழல் உருவாகி வருகிறது.

இத்தகு துயரமான, வேதனையான, கசப்பான அனுபவங்களைக் கண்டும் கூட இந்த அரசு புதிதாக 'செர்வால்' தொழிற்சாலைக்கு அனுமதி அளித்துள்ளதால் மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

### செர்வால்

இது மரக்கட்டையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை.

காகிதத்தோடு கந்தகம், துத்தநாகம் போன்ற நச்சுக் கழிவுகளும் உற்பத்தியாகி, அவை பவானி ஆற்றில் கலக்க இருக்கிறது. இதுவும் விஸ்கோஸ் போலவே கொடிய விளைவுகளை ஏற்படுத்தும்.

பவானி ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதியான தேக்கம்பட்டி கிராமத்திற்கு அருகிலுள்ள தேவனாபுரம் என்ற இடத்தில் சுமார் 70 ஏக்கரில் இந்த ஆலை அமைந்துள்ளது. இப்பகுதி மக்கள் முழுமையாக விவசாயத்தை நம்பி உள்ளனர். இதை முற்றாக ஒழித்து விவசாயிகளை ஓட்டாண்டியாக்கப் போகிறது செர்வால்.


இதில் ஆகப்பெரிய கொடுமை என்னவென்றால் ஆலை அமைந்துள்ளது 'பஞ்சமி' நிலத்தில். தாழ்த்தப்பட்டவர்கள் தவிர வேறு யாரும் வாங்க இயலாத பஞ்சமி நிலத்தில் ஆலை அமைக்க கேடுகெட்ட இந்த அரசும் அனுமதியளித்துள்ளது.

இந்த ஆலையால் மேட்டுப்பாளையம் நகரும் அதைச் சுற்றியுள்ள 170 கிராமங்களும் நேரடியாக பாதிக்கப்படும். பவானி ஆறே நஞ்சாவதால் இதனால் பயனடையும் சுமார் 500 கிராமங்களும், குடிநீர் பெறும் திருப்பூர் நகரும், அன்னூர், சோமனூர், அவிநாசி நகரங்களும் பாதிக்கப்படும் அபாயமுள்ளது.

### சுதர்சன் பேப்பர் மில்

மேட்டுப்பாளையம், விஸ்கோஸ் ஆலைக்குச் செல்லும் வழியில் மோத்தேபாளையம் அருகிலுள்ளது 'சுதர்சன் பேப்பர் மில்'. செர்வால் போல் இங்கும் நச்சுக் கழிவுகள் வெளியேறி, விவசாய விளைநிலம் பாதிக்கப்பட்டதோடு குடிநீரும் இல்லாமற் போனது.

இந்த ஆலையைச் சுற்றியுள்ள ஜடையம்பாளையம், ஆலாங்கொம்பு பகுதி நிலத்தடி நீர் பயன்படுத்தவே இயலாது என ஜடையம்பாளையம் பஞ்சாயத்து அறிவித்துள்ளது. இதையே அரசும் விளம்பரம் மூலம் தெரிவித்துள்ளது.



ஆலைக் கழிவால் நிலத்தடி நீர் மாசு பட்டுப் போனதால், ஜடையம் பாளையம் கிராம மக்கள் குடிநீர் கேட்டு நடத்திய சாலை மறியல் போராட்டம்.

### கே.ஜி. டெனிம்

'சுதர்சன் பேப்பர் மில்'லுக்கு பின்புறம் உள்ள கே.ஜி. டெனிம் தொழிற்சாலையில் சாயமேற்றும் தொழில் நடைபெறுகிறது. இதனால் கண்ணீர் விடும் விவசாயிகளின் எண்ணிக்கை மிக நீளம்.

கிரஷர் ஆர்.கே. பழனிச்சாமி என்பவர் பணபலமிக்க கே.ஜி. குரூப்பின் பினாமி. இவரைக் கடந்த பஞ்சாயத்து தேர்தலில் ஜடையம்பாளையம் பஞ்சாயத்து தலைவராக்கியது கே.ஜி. டெனிம். இதற்காக கே.ஜி. டெனிம் பல லட்சங்களை வாரியிறைத்தது.

### எதிர்ப்புக் குரல்களின் உண்மை முகம்

மேட்டுப்பாளையம் பவானி நீர் மற்றும் நிலத்தடி நீர் பாதுகாப்பு சங்கம் என்ற அமைப்பு 10 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. இதன் முன்னணியாளர்களின் யோக்கியதை கீழே:

இதனுடைய இன்றைய தலைவர் டி.டி. அரங்கசாமி ம.தி.மு.க. கட்சிக்காரர். தீவிரமாகப் போராடுவதாக காட்டிக் கொண்டவர். கடந்த தேர்தலில் ம.தி.மு.க. கட்சியிலிருந்து எம்.எல்.ஏக்கு நின்று பெற்ற ஓட்டுகள் 7000 தான். தற்போது மக்கள் என்ன ஆனாலும் எனக்கென்ன என ஒதுங்கிக் கொண்டார்.

ஜனதா தளம் கட்சிக்காரரான பாண்டுரங்கன் 'செர்வால்' நிறுவனத்திற்கு நிலம் வாங்கித்தரும் தரகன். ஆனாலும் சாயப்பட்டறைகளை எதிர்ப்போம் என மறுபுறம் வீரவசனம் பேசி வருபவர்.

முன்னாள் ஆசிரியரான ஆலங்கொம்பு கந்தசாமி இந்த அமைப்பை முதலில் உருவாக்க முயன்றவர் என தனக்குத் தானே புகழாரம் சூட்டிக் கொள்பவர்; உண்மையில் இவர் விஸ்கோஸ் நிறுவனத்தின் தரகன்.

வலது கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நகராட்சி உறுப்பினராக உள்ள சி. ராமச்சந்திரன் ஒரு தேர்ந்த அரசியல் வியாபாரி. கே.ஜி. டெனிம் நிறுவனத்திற்கு எதிராக ஒரு வார்த்தைகூடப் பேசாத இவர், அதனிடம் பணம் பெற்றுக் கொண்டு வைஷ்ணவிதேவி - சிறுவாணி டெக்ஸ்டைல்ஸ்களை மூட வேண்டும் என மேட்டுப்பாளையம் நகரில் 48 நாட்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்.

ஏற்கனவே கூறப்பட்ட ஆர்.கே. பழனிச்சாமி கே.ஜி. டெனிம் நிறுவன கைக்கூலி.

இனியும் மக்கள் இந்த மோசடிக்காரர்களின் பின்னே அணிதிரளாமல் புரட்சிகர அமைப்புகளில் திரண்டால் மட்டுமே பவானி ஆற்றைப் பாதுகாக்க முடியும்.

● பாரதி முருகேசன், கோவை.

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 12

**இதழ்: 19 - 21**

16 ஆக. '97 - 30 செப் '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# போலி சுதந்திரத்துக்குப் பொன்விழா!

சுதந்திரம் என்பதன் உண்மையான அர்த்தத்தை மூடி மறைத்து, சிதைத்து, திசை திருப்புவதற்கான இன்னொரு வாய்ப்பாக இந்த 50-ஆம் ஆண்டு சுதந்திர தினப் பொன்விழாக் கொண்டாட்டத்தை ஆளும் வர்க்கங்களும் அவற்றின் அரசியல், கொள்கை விளக்கப் பிரச்சாரகர்களும் பயன்படுத்தி வருகின்றனர். ஒரு நாடு அல்லது தேசம் அரசியல், பொருளாதாரம், பண்பாடு, அரசு தந்திரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் அந்நிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதே சுதந்திரம் என்பதன் பொருள். அப்படி விடுதலை அடைந்த பிறகு அந்த நாடு அல்லது தேசம் அனைத்துத் துறைகளிலும் தற்சார்புடன் முன்னேறுவது பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் கொள்வதாகப் பொருள்படும். ஒவ்வொருவரும் தமது தேவையை அறிவதும் - அடைவதும் இன்னொருவகை சுதந்திரம்; ஆனால் இப்போது பொன்விழா கொண்டாடப்படுவது இந்த சுதந்திரத்திற்காக அல்ல. நாடு ஆங்கிலேய காலனி ஆட்சியில் இருந்து விடுதலை பெற்று 50 ஆண்டுகளாகி விட்டதாகக் கூறிக் கொண்டு நடப்பதாகும்.

ஆகவே, இங்கே பரிசீலிக்கவேண்டியது இந்தியச் சுதந்திரம் என்பது அந்நிய ஆதிக்கம் இல்லாததா? தற்சார்புடையதா? என்கிற பிரச்சினை தான். ஆனால் சுதந்திர தினப் பொன்விழாவையொட்டி நடத்தப்படும் அதிகாரபூர்வ விவாதங்கள் எல்லாம் இந்தக் கேள்வியை தவிர்த்துவிட்டு, பொதுவில் நாடு முன்னேறி இருக்கிறதா? முன்னேற்றத்தின் பலன்கள் பரவலாக மக்களைச் சென்றடைந்ததா? என்கிற பிரச்சினையைச் சுற்றியே நடக்கிறது. இந்தக் கடைசிக் கேள்விகளை எழுப்பி அவற்றிற்கான பதிலாக, அரசியல், பொருளாதாரம், தொழில்நுட்பம் - அறிவியல் கல்வித்துறையில் கடந்த 50 ஆண்டுகளில் கண்ட வளர்ச்சியை எடுத்துச் சொல்லிப் பிரமிக்க வைக்கின்றனர்.

இதை நிரூபிக்கும் முகமாகப் பின்வரும் பட்டியலைச் சான்றுகளாக வைக்கின்றனர். பக்கத்து நாடான பாகிஸ்தானில் பலமுறை இராணுவ ஆட்சி வந்தபோதும், இந்தியாவில் 50 ஆண்டுகளாக நாடாளுமன்ற ஜனநாயகம் நிலவுகிறது; இந்த நாடு பிளவுபடாமல் ஒன்றுபட்டிருப்பதே பெரிய சாதனை. தொழில் துறையில் கீழை நாடுகளின் முதல் வரிசையில் உள்ளோம். விவசாயத்தில் பசுமைப் புரட்சி நடத்தி, உணவு உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தி நிலையை அடைந்துள்ளோம். அணுகுண்டு வெடிக்குமளவுக்கு அணுசக்தித் துறையில் முன்னேறி இருக்கிறோம். மேலை நாடுகளே தேடிவந்து வேலை வாய்ப்புத் தருமளவு திறமை வாய்ந்த அறிவியல், தொழில்நுட்ப, விவசாய வல்லுநர்களையும் மருத்துவ, பொறியியல் நிபுணர்களையும் உருவாக்கி இருக்கிறோம். தரமான கல்வி நிறுவனங்கள் அமைத்திருக்கிறோம். ஏவுகணைகள் உட்பட நவீன ஆயுதங்களையும், திறமையான பயிற்சி பெற்ற வீரர்களையும் கொண்ட உலகிலேயே நான்காவது பெரிய இராணுவத்தைப் பெற்றுள்ளோம். உலகத் தரத்துக்கு சமமான சினிமா, பத்திரிக்கை, வானொலி - வானொளி ஆகிய மக்கள் தொடர்பு அமைப்புகளை நிறுவியுள்ளோம்.

இப்படி ஒரு பிரிவினர் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகின்றனர். இன்னொரு பிரிவினர் நாட்டின் மீதும் மக்கள் மீதும் பற்று - பாசம் கொண்டவர்களாகப் பாவித்துக் கொண்டு, என்னதான் மேற்கண்டவாறு முன்னேறினாலும், நமது மக்களுக்கு இன்னும் சமூக நீதி - சமூக சமத்துவம் கிடைக்கவில்லை என்று வாதிடுகின்றனர். நமது நாட்டில் இன்னமும் 30, 40 சதவீதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுகின்றனர். கல்லாமையும் வேலை இல்லாமையும் தாண்டவமாடுகின்றன. நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவு, உடை, இருப்பிடம் வழங்குவதை உத்திரவாதப்படுத்தவில்லை. அரசியலில் குறிப்பாக, அரசியல் கட்சிகள் - தலைவர்களிடையே இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் தலைவிரித்தாடுகின்றன. சினிமா - வானொளியில் கலாச்சாரச் சீரழிவு மலிந்து விட்டது. சாதி - மத வேறுபாடுகளும், கலவரங்களும் பெருகிவிட்டன. எங்கும் கொலை கொள்ளை கிரிமினல் குற்றக் கும்பல்கள் ஆதிக்கம் நிறைந்துவிட்டது - இப்படிப் பல சான்றுகள் முன் வைக்கின்றனர்.

இந்தியா ஒரு சமதர்ம - சோசலிச சமுதாயத்தைக் கொண்டிருக்கவில்லை. சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட இங்கே, சமூக ஏற்றத் தாழ்வுகளும், சமூக அநீதிகளும் நீடிக்கவே செய்யும். இந்த நாட்டின் இயற்கை வளம், மனித வளத்தோடு ஒப்பிடும் போது வளர்ச்சி - முன்னேற்றம் பெரிதாக இல்லை. இருப்பினும், புள்ளிவிவர ஆதார மோசடிகளை ஒதுக்கி வைத்து விட்டுப் பார்த்தால் கூட, கணிசமான தொழில், விவசாய வளர்ச்சி ஒரு ஆமை வேக முன்னேற்றத்தில் இருப்பது உண்மைதான்.

www.padippakam.com

ஆனால் எவ்வளவு தூரம் சமூக ஏற்ற தாழ்வுகள் அகற்றப்பட்டுள்ளன; நாடு எந்த அளவு வளர்ச்சி - முன்னேற்றம் கண்டுள்ளது என்பதல்ல பிரச்சினை. கண்டுள்ள வளர்ச்சி - முன்னேற்றம்கூட எந்த அளவுக்குச் சுயசார்புடையது, அந்நிய ஆதிக்கம் இல்லாதது என்பதுதான். அப்படிப் பார்த்தால், குண்டூசி - சவரக் கத்தி முதல் பற்பசை - ரூபாய் நோட்டு அச்சிடுவதுவரை அனைத்தும் அந்நிய - ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ், பன்னாட்டுத் தொழில் கழகங்களைச் சார்ந்துதான் நடக்கின்றன. அதிலும் குறிப்பாக கடந்த ஒரு பத்தாண்டாக, உலக மேல்நிலை வல்லரசுகளின் மேலாதிக்கக் கருவிகளான உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக நிறுவனம் ஆகியவற்றின் நேரடி மேற்பார்வையிலும், திட்டமிடுதலின் கீழ்தான் நாடே இயங்குகிறது.

மின் உற்பத்தி, தகவல் தொடர்பு உட்பட அடிப்படைச் சேவைத் துறைகள் முதல் வங்கி - காப்பீடு ஆகிய சேவைத் துறைகள் வரை அனைத்தையும் தனியார்மயமாக்கி, அந்நியக் நிறுவனங்களுக்குத் திறந்துவிட வேண்டும். ஐந்து நட்சத்திர நுகர் பொருள் உற்பத்தி - விற்பனைக்கும், முதலீட்டுக்கும் அந்நிய நிறுவனங்களுக்குத் தாராள அனுமதி வழங்க வேண்டும். கட்டாய உணவுப் பொருள் இறக்குமதி, கல்வி - மருத்துவம் - சுகாதாரம் ஆகிய மக்கள் நலத் திட்டங்களை நிறுத்துவது, கொள்ளை இலாபம் தராத ஆலைகளை மூடித் தொழிலாளர்களை வேலையை விட்டு விரட்டுவது, பண்பாட்டுப் படையெடுப்புக்கு முழு அனுமதி, பாலியல் சுற்றுலாவுக்கான விபச்சார - சூதாட்ட விடுதிகளைத் திறப்பது எல்லாம் அந்நிய ஆணைப்படி, சர்வ கட்சி ஒத்துழைப்புடன் நடக்கின்றன. பாரம்பரிய மருத்துவம், உயிரியல் கூறுகள் உட்பட இனி அடகு வைப்பதற்கு எதுவுமே இல்லை என்கிற அளவு நாடே மறுகாலனியாக்கப்படுகிறது. இப்படி சுதந்திரம் என்பதே அர்த்தமற்றதாகவும் கேலிக்கூத்தாகவும் உள்ள நிலையில் பொன்விழா ஒரு கேடா?

**பிழை திருத்தம்**

*சென்ற இதழ் (எண்: 17-18) தலையங்கத்தில், ''இந்திய 'சுதந்திர'த்தின் பொன் விழா ஆண்டில்'' எனக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, ''இந்திய 'சுதந்திர'த்தின் வெள்ளி விழா ஆண்டில்'' எனத் தவறுதலாகக் குறிப்பிட்டுள்ளோம். எங்களது கவனக் குறைவால் நேர்ந்து விட்ட இப்பிழைக்கு சுய விமர்சனம் ஏற்றுக் கொள்கிறோம்.* ஆசிரியர் குழு

# வீரப்பன் விவகாரம் -வேறு கோணத்திலிருந்து

கர்நாடக வனத்துறை ஊழியர்கள் ஒன்பது பேரை வீரப்பன் பிணைக் கைதிகளாகப் பிடித்தது முதல் இன்றைய நிலை வரை எல்லா தகவல் தொடர்புச் சாதனங்களிலும் வீரப்பன் பற்றிய செய்திகள் மிக பரபரப்பாக, சூடாக வெளியாகியுள்ளன.

காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் எழுந்து வருகின்றன. ஒரு கொள்ளைக்காரன், கொலைகாரன், கடத்தல்காரனுக்கு இரு மாநில அரசுகள் பணிவதா என தினசரிகளில் தலையங்கங்கள் தீட்டப்பட்டன.

ஆனால் எந்த பத்திரிகையும் வீரப்பனைப் பற்றிய முழு உண்மைகளை எழுதவில்லை. வீரப்பன் யானைகளைக் கொன்று தந்தங்களைத் திருடினான். காடுகளிலுள்ள சந்தன மரங்களைச் சட்டவிரோதமாக வெட்டினான். இவற்றை விற்பதற்கு நவீன 'ஷோரூம்'கள் வைத்தானா? பின் இவற்றை எப்படி விற்றான்? யார் இவனிடமிருந்து தந்தங்களையும், சந்தனக் கட்டைகளையும் வாங்கிக் கடத்தியது? அவர்களை ஏன் இரு மாநில அரசுகளால் கைது செய்ய முடியவில்லை?

வீரப்பன் தனி நபரல்ல. ஒரு பெரும் வலைப் பின்னலின் ஒரு கண்ணி. சாதாரணமாக யானைகளைக் கொன்று, தந்தங்களைத் திருடி விற்றவனுக்கு வனத்துறை அதிகாரிகளின் கூட்டு கிடைத்தது. தந்தம் விற்பதைவிட, சந்தன மரக் கடத்தலில் கோடி கோடியாகச் சம்பாதிக்கலாம் என்று வழிகாட்டப்பட்டது.

சந்தனக் கட்டைகளைக் கடத்த அதிகாரிகள், அரசியல்வாதிகள், மந்திரிகள் வரை கூட்டணி உருவானது. கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு என மூன்று மாநில அதிகாரிகள், அரசியல்வாதிகள், மந்திரிகளின் கூட்டு இல்லாமல் வீரப்பன் தனிநபராக இவ்வளவையும் செய்ய சாத்தியமேயில்லை.

வியாபாரம் என்றால் மோசடியும் கூடவே இருக்கும். இதில் பிரச்சினை உருவான போது எதிரிகளை வீரப்பன் கொன்று பழிதீர்த்துக் கொண்டான். அது சட்டப் பிரச்சினை ஆனது. வீரப்பனைப் பிடிப்பதற்காகச் சிறப்பு அதிரடிப் படைகள் அனுப்பப்பட்டன. வீரப்பனைப் பிடிக்க வேண்டிய காவல் துறை அதிகாரிகளே வீரப்பனுக்கு தகவல் தருபவர்களாகவும் இருந்தனர். விளைவு! காட்டுக்குள் சென்ற அதிரடிப்படை அதிகாரிகள், காவல் துறையினர் வீரப்பனால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

1990 மே மாதம் ஒரு நேர் காணலில் கர்நாடக மாநில ரிசர்வ் போலீஸ் ஐ.ஜி கூறியது: ''வீரப்பனை நாங்கள் நெருங்கி வளைத்துள்ளோம். அவன் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டுள்ளான்.'' தமிழக டி.ஜி.பி. துரை ஜூன் '90இல் ''வீரப்பனுடன் ஒரு சிலரே எஞ்சியுள்ளனர். தப்பிச் செல்லும் எல்லா வழிகளையும் அடைத்து விட்டோம். விரைவில் உயிருடனோ பிணமாகவோ பிடிப்போம்; அல்லது சரணடையச் செய்வோம்'' என்றார். 1993-லிருந்து கூடுதல் டி.ஜி.பியாக இருந்த 'சூரப்புலி' தேவாரம் அடித்த சவடால்களும் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்த கர்நாடக, தமிழக அதிரடிப் படையினரின் அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. அப்பாவிப் பெண்கள் மீதான பாலியல் பலாத்காரங்கள் என்ன? ஆடு, கோழிகள் திருடி, தின்று தீர்த்ததென்ன? விசாரணை என்ற பெயரில் அப்பாவி மக்கள் மீதான சித்

பிணைக் கைதிகளை வி[illegible]விக்க வீரப்பனுடன் பேச்சு வார்த்தை நடத்தும் நக்கீரன் இதழின் ஆசிரியர் கோபால்.



நன்றி: நக்கீரன்

www.padippakam.com

திரவதைகளென்ன? வீரப்பன் ஆட்களை மோதலில் சுட்டுக் கொன்றோம் என ஆடு, மாடு மேய்த்த ஏழைகளைக் கொன்ற கொடுமைகள் எத்தனை? வீடு புகுந்து தேடுதல் வேட்டை எனச் சூறையாடிய கொடுமைகள் எத்தனை?

இப்படி அதிரடிப் படையினரின் வெறிச் செயல்களின் போது வீரப்பன் கும்பல் பதிலடி தந்து, அதன் மூலம் தனது கிரிமினல் நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பித்துக் கொண்டது.

வீரப்பனின் கூட்டாளிகள் என்று சொல்லி கர்நாடக மாநிலச் சிறைகளில் அப்பாவித் தமிழர்கள் சுமார் 119 பேர் குண்டர் தடைச் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம், தடா எனப் பல்வேறு வழக்குகளில் கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர்.

ஆனால் வீரப்பன் கும்பலுடன் நெருங்கிப் பிணைந்து கொள்ளையடித்த உயர்மட்ட அதிகாரிகள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள், ஆதிக்க சக்திகள் மீது சிறு துரும்புகூட விழவில்லை.

1990 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே, அ.தி.மு.க.வின் முக்கியத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான முத்துச்சாமி, முன்னாள் அதிமுக எம்.எல்.ஏ.க்கள் நெகமம் கந்தசாமி, நாச்சிமுத்து, ஹன்னூர் முன்னாள் காங்கிரசு எம்.எல்.ஏ. ராஜ கௌடா, பெண்ணாகரம் முன்னாள் போலி கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ. நஞ்சப்பன் எனப் பலரும் வீரப்பனுடன் கூட்டு வைத்திருந்ததாகப் பலராலும் வெளிப்படையாகப் பேசப்பட்டு வந்தது.

1991-இல் இரு மாநிலத் தேர்தல்களில் காங்கிரசு, அ.தி.மு.க. கட்சிகளுக்காக வீரப்பன் கும்பல் பிரச்சாரம் செய்தது மட்டமல்ல; பெருந் தொகையும் செலவழித்துள்ளது. கை சின்னத்திற்கு ஓட்டுப் போடவில்லை என்றால், கைகளை வெட்டி எறிவேன் என வீரப்பனே பகிரங்கமாக மிரட்டியுள்ளான். இன்றைக்கு தி.மு.க. ஆதரவாளன் எனக் காட்டிக் கொள்கிறான்.

மாதேஸ்வர மலையில் 'கிரானைட்' கல் வெட்ட அரசு அனுமதியளித்த போது, 1986 முதல் 1996 வரை வீரப்பன் ஆட்கள் 'குவாரி' உரிமையாளர்களிடம் பறித்த பணம் சுமார் ஒரு கோடி. 'குவாரி' உரிமையாளர்கள், சட்டப்படி அனுமதித்த நிலத்தையும் தாண்டி 'கிரானைட்' வெட்டி எடுத்து கொள்ளையடித்ததில் இத்தொகை அற்பம்தான்.

இப்படி அதிகாரிகள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள் எனச் சகலரும் கூட்டு வைத்திருந்ததால்தான் வீரப்பன் சிறையிலிருக்கப் பயப்படுகிறான். ஆட்டோ சங்கர் போன்று உண்மைகளைக் குழி தோண்டிப் புதைக்கச் சட்டப்படி நடவடிக்கை எனத் தூக்கிலேற்றிவிடுவார்கள் என அஞ்சுகிறான். எனவே வீரப்பனைத் தண்டிப்பதற்கான தார்மீக பலம் இக்கிரிமினல்களுக்கில்லை.

அதனால்தான் வீரப்பன் பொதுமன்னிப்பு, முடியாத கட்டத்தில் இரண்டே ஆண்டு தனிச்சிறை, வசதிகள், மறுவாழ்வுக்கு பணம் என நிபந்தனை விதிக்கிறான். வீரப்பன் விதிக்கும் நிபந்தனைகளைக் கௌரவமாக ஏற்றுக் கொள்ளும் கட்டத்தில்தான் இரு மாநில அரசுகளும் உள்ளன. மாறாக வீரப்பனைப் பிடிப்பது என்பது நடப்பது போல இல்லை.

★☆★

**வீ**ரப்பனுக்கு பொது மன்னிப்பு வழங்க முடியாது என இரு அரசுகளும் கூறிவிட்ட போதும், பொதுவாகப் பலரிடமும் பொது மன்னிப்பு வழங்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. பூலன் தேவி உட்பட சம்பல் கொள்ளைக்காரர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கவில்லையா எனக் கேட்கின்றனர். சம்பல் கொள்ளையர்களை பா.ஜ.க., காங்கிரசு என எல்லாக் கட்சிகளும் ஆதரித்து, தமது கட்சியில் சேர்த்தது மட்டுமின்றி, அவர்களில் பலரும் 'மாண்புமிகு' மக்கள் பிரதிநிதிகளாகவும் உலா வருகின்றனர்.

பூலன் தேவியுடன் வீரப்பனை ஒப்பிடுவதே தவறு. வாழும் உரிமை பறிக்கப்பட்டு, கும்பல் பாலியல் வன்முறைக்கு ஆளாகி, ஊரெங்கும் நிர்வாணமாக இழுத்துச் சென்று சித்திரவதை செய்து, சாதி ரீதியாக இழிவுபடுத்திக் காட்டிற்குள் விரட்டப்பட்டு, கொள்ளைக்காரியாக மாற்றப்பட்டவர், பூலன் தேவி.

ஆனால் முழுக்க தனது சுயநலனுக்காக, யானைகளைக் கொன்று தந்தம் கடத்தி, பின் சந்தனக் கடத்தல், 'குவாரி' முதலாளிகளிடம் பணம் என கோடிக் கணக்கில் மக்கள் சொத்தைச் சூறையாடியவன்தான் வீரப்பன்.

வீரப்பன் முகவைமயாளரைப் போலச் செயல்படும் ''நக்கீரன்'' கோபால், பின்வரும் மூன்று காரணங்களை முன் வைத்து வீரப்பனுக்காக வாதாடுகிறார்.

1. வீரப்பனைப் பிடித்து பேரும் பணமும் விருதும் வாங்க வேண்டும் என்கிற கடும் போட்டி தமிழக, கர்நாடகப் போலீசுக்குள்ளேயும், அவற்றுக்கு இடையேயும் நிலவுகிறது. ஏற்கனவே வீரப்பனாகப் பார்த்து, பிணையாட்களை விடுதலை செய்த சம்பவங்களில்கூட, தாமே விடுவித்ததாக போலீசார் உரிமை பாராட்டினர். யாராவது வீரப்பனைப் பிடிக்கும் நிலை வந்தால், போட்டிப் போலீசார் வீரப்பனுக்குத் தகவல் கொடுத்துத் தப்பிப்போக விடுகின்றனர். இதனாலேயே வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை.

2. இதுவரை நாடு முழுவதும் கிரிமினல்களைப் பிடிக்க அரசு செலவிட்டது சுமார் 150 கோடி ரூபாய்தான். ஆனால் இதுவரை வீரப்பனைப் பிடிக்கமட்டும் 800 கோடி ரூபாய் செலவாகியுள்ளது.

3. வீரப்பனைப் பிடிக்கும் நடவடிக்கை என்ற பெயரில் இருமாநில அதிரடிப்படையினரும் அப்பாவி மக்களைக் கொன்று, பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து, சொத்துக்களைச் சூறையாடி பல வெறிச் செயல்களைப் புரிந்து வருகின்றனர். இனி மேலும் வீரப்பனைப் பிடிப்பது சாத்தியமில்லாத நிலையில் அதிரடிப்படையின் அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்தவும், வீரப்பனின் பிரச்சினைக்கு முடிவு கட்டவும் அவன் சரணடைவதை ஏற்க வேண்டும்.

''நக்கீரன்'' கோபாலின் இந்த வாதத்தில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

அதே சமயம் வீரப்பன் போன்ற கிரிமினல் குற்றக் கும்பல்கள் நாடெங்கும் உருவாவதற்குக் காரணமாக இருந்துவிட்டு அவ றைக் கையாள்வது எப்படி, வேட்டையாடி தண்டிப்பதா, பொது மன்னிப்பு வழங்குவத என்று வாதப்பிரதிவாதங்கள் நடத்தி கொண்டிருக்கிறது இன்றைய அரசிய அமைப்பு. இந்தக் கிரிமினல் கும்பல்கள் இந்த அரசியல் அமைப்பு-இரண்டுமே ஒ நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

பொது மன்னிப்போ, வேறு சலுகை களோ கொடுத்து வீரப்பன் சரணடைந்தா அந்தப் பகுதியில் அதிரடிப்படையின் அட் ழியங்கள் நிற்கலாம். ஆனால் சமூக சேவை ''நியாயமான'' தொழில், அரசியல் என்று புகுந்து, வீரப்பனின் மறைமுக அட்டூழியங் கள் தொடரும். அதையே அரசியல் அமைப் பும் விரும்பி ஏற்கும். இல்லையானால் வீரப் பனைத் தேடுவதாகச் சொல்லி அதிரடிப்ப டையின் அட்டூழியங்கள் தொடரும். இவற் றில் எந்த அட்டூழியம் மேலானது என்று எடை போட முடியுமா? இல்லை இரண்டு வகை அட்டூழியங்களுமே தவறானவை, ஒரே தன்மையுடையவை - மக்கள் விரோதமானவை என்று இரண்டையுமே முறியடிக்க முயல்வதா?

• பாரி

## ரவுடி இராச்சியத்திற்கு எதிராக...

**ம**துரை ஜெய்ஹிந்த்புரம் என்றாலே ரவுடிகள் இராச்சியம் நடக்குமிடம் என மக்களிடையே இன்னும் பயம் நிலவுகிறது.

இங்கு நேதாஜி தெரு இறுதியிலுள்ள தேவர் நகரில் மாவீரன் பகத்சிங் படிப்பகம் 10.8.97-இல் தொடங்கப்பட்டது. இப்படிப்பகம் பு.மா.இ.மு. வழிகாட்டலில் பகுதி இளைஞர்களால் நடத்தப்படுகிறது.

கோவில் வசூல் கொள்ளை நடத்தும் சமூக விரோதிகள் சிலர், தங்களது ரவுடித்தனத்தைக் காட்ட 15.8.97 இரவு 11 மணிக்கு படிப்பகத்தையும், எதிரிலிருந்த தேநீர்க் கடையையும் அடித்து நொறுக்கினர். தேநீர்க் கடைக்காரர் கொடுத்த புகாரின் பேரில் இரவே பிரபல ரவுடி பாலகிருஷ்ணனும் அவனது கூட்டாளி செந்திலும் கைது செய்யப்பட்டனர். மறுநாளே பிணையில் வர இயலா வழக்குகளில் சிறையிலிடப்பட்டனர்.

16.8.97-இல் பு.மா.இ.மு. தோழர்கள் திரண்டு சென்றுப் பாலகிருஷ்ணன் வீட்டருகே உள்ள சமூக விரோதிகள் சிலரைப் பிடித்து, மக்கள் முன் நிறுத்தி விசாரித்துத் தண்டித்தனர். அவர்களிடம் தண்டத் தொகையாக ரூ. 250/- வசூலித்து, படிப்பகம் சரி செய்யப்பட்டுச் செயல்படத் துவங்கியது.

17.8.97 மாலை அப்பகுதியில் 5 இடங்களில் சமூக விரோத ரவுடிகளை எதிர்த்து, பு.மா.இ.மு. சார்பில் தெரு முனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

பு.மா.இ.மு.,
மதுரை.

www.padippakam.com

## திரைப்படத் தொழிலாளர் குடும்பங்கள் தற்கொலை

# கொலைகாரப் படைப்பாளிகள்

பெற்ற பிள்ளைக்குப் பால் வாங்கக் காசில்லாததால் மனமுடைந்து தீக்குளித்து மாண்டு போனாள் தேவி என்ற இளம் பெண். அவளது தற்கொலையைக் காணப் பொறுக்காத கணவன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டான். அவர்களது 6 மாதக் கைக்குழந்தையும், 1½ வயதுக் குழந்தையும் அநாதையாய் நிற்கின்றன. தற்கொலை செய்து கொண்ட கணவன், சரவணன் ஒரு ''லைட்மேன்''. திரைப்படத் தொழிலாளி.

திரைப்பட முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்தில் களப்பலியான அந்த இருவரது உடல்களையும் சுமந்தபடி ஊர்வலமாகச் சென்றனர் 10,000 ஃபெப்சி தொழிலாளர்கள். இறுதி ஊர்வலம் அமைதி ஊர்வலமாகச் செல்லவில்லை. பட முதலாளிகளுக் கெதிரான முழக்கங்களை எழுப்பியபடி கொட்டும் மழையில் சென்றார்கள் தொழிலாளர்கள். நடிகர் கமலஹாசன் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

இரண்டு மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து வரும் இந்தப் போராட்டத்தில் பட முதலாளிகளின் இலாப வெறிக்கும், 'படைப்பாளி'களின் தொழிலாளர் விரோதத் திமிருக்கும் ஆகஸ்டு 27-ஆம் தேதி வரை பலியாகியிருக்கும் உயிர்கள் எட்டு.

துளசிராமன் என்ற தயாரிப்பு உதவியாளர் மாரடைப்பால் இறந்தார்; நாராயணன், முனுசாமி என்ற தச்சுத் தொழிலாளிகள் விசமருந்தித் தற்கொலை செய்து கொண்டனர்; நரேந்திரன் என்ற ஓட்டுனரின் மனைவி மாலினியும், இராசேந்திரன் என்ற ''டெக்னீசியனின்'' மனைவி ரேவதியும் தீக்குளித்து இறந்தனர்; சுப்பாராவ் என்ற லைட்மேன் தற்கொலை செய்து கொண்டார்.

பிணங்களுக்கு உரிமை கொண்டாடியே கட்சி வளர்த்த கருணாநிதியின் கருத்தும் அதுதான்.

தொழிலாளிகளின் இரத்தத்தை உறிஞ்சி, பன்றிகளைப் போன்று கொழுத்துத் திரியும் 'படைப்பாளி' வர்க்கத்தில் யாரும் இந்த இரண்டு மாதங்களில் பட்டினியால் செத்ததாகத் தகவல் இல்லை. பாரதிராஜாவின் திமிர்த்தனமான அறிக்கைக்குப் பிறகும், பட முதலாளிகள் யாரும் இத்தகைய 'இயற்கை' மரணத்திற்கு ஆளாக்கப்படாமல் இருப்பதைத் தொழிலாளிகளின் பெருந்தன்மை என்றுதான் சொல்லவேண்டும்.

பாரதிராஜாவின் சவடால்களையும், கள்' கும்பலும் கருணாநிதியின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராகத் தொடுத்திருக்கும் யுத்தம். இதில் படைப்பாளிகளின் பலிபீடத்தில் இதுவரை காணிக்கையாக்கப்பட்டிருக்கும் உயிர்கள் எட்டு.

பட்டினிச் சாவுகளைத் தடுப்பதற்குத் தங்களாலியன்ற அளவுக்கு முயற்சி செய்துள்ளன. ஃபெப்சியும் அதன் உறுப்புச் சங்கங்களும். லைட்மேன் யூனியன், அலங்காரக் கலைஞர்கள் சங்கம், துணை நடிகர் சங்கம், தயாரிப்பு உதவியாளர் சங்கம் ஆகியவை தங்கள் உறுப்பினர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாயும், 10-15 கிலோ அரிசியும் தருகின்றன. நடனக் கலைஞர்கள் சங்கம் 1500 ரூபாயும், சண்டை நடிகர்கள் சங்கம் 2000 ரூபாயும் தம் உறுப்பினர்களுக்குக் கடனாகத் தருகின்றன. துணை நடிகர் சங்கத்தில் அன்றாடம் 400 பேருக்கு மதியச் சாப்பாடு அளிக்கப்படுகிறது. தொழிலாளிகள் வீட்டுப் பண்டம்-பாத்திரங்களும், தாலிகளும் கோடம்பாக்கம் மார்வாடி அடகுக் கடைகளில் நிரம்பி வழிகின்றன.

மாதச் சம்பளம், சட்ட ரீதியான பணிப்பாதுகாப்பு, தொழிற்சங்க உரிமைகள் போன்ற எதுவும் இல்லாத 'அன்றாடங் காய்ச்சி'களான திரைப்படத் தொழிலாளர்கள், அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட தொழிலாளர்களை விஞ்சுமளவு ஓர் உறுதிமிக்க போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். அரசு, காவல்துறை, நீதிமன்றம், பத்திரிகைகள், பணபலம் ஆகிய அனைத்தையும் தங்கள் பக்கம் வைத்திருக்கும் பட முதலாளிகளால் இந்தக் கணம் வரை தொழிலாளர் ஒற்றுமையை உடைக்க முடியவில்லை.



தற்கொலை செய்து கொண்ட சரவணன் - தேவி; பெற்றோரை இழந்து அநாதரவாகிப் போன அவர்களது இரு குழந்தைகள்: படைப்பாளி என்றால் ஆக்கப்பூர்வமானவன் என்பதை பாரதிராஜா கும்பல் முதலில் புரிந்து கொள்ளட்டும்.

மலரினும் மென்மையான உணர்வு கொண்டவர்களும், எளிதில் உணர்ச்சி வயப்படக்கூடிய கலைஞர்களுமான படைப்பாளிகளும், அவர்களின் தலைவர் பாரதிராஜாவும், 'வள்ளல்' விஜயகாந்தும் இந்த மரணங்களுக்காக இரக்கப்படவில்லை; இந்தப் பட்டினிச் சாவுகளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தவும் இல்லை. ''இயற்கையான மரணங்களைப் பட்டினிச் சாவுகளாகச் சித்தரித்து விளம்பரம் தேடுகிறது ஃபெப்சி தொழிற்சங்கம்'' என அறிக்கை விட்டார் பாரதிராஜா.

மன்சூர் அலிகான், ராதாரவி போன்ற ஜந்துக்கள் அவ்வப்போது குரைப்பதையும் பெரும் முக்கியத்துவம் தந்து பிரசுரிக்கின்றன பத்திரிகைகள்; அடிக்கடி அவர்களைப் பேட்டி எடுக்கிறது சன் டி.வி. ஆனால் கொட்டும் மழையில் பத்தாயிரம் தொழிலாளர்கள் நடத்திய அந்த பிரம்மாண்டமான இறுதி ஊர்வலமும் பட்டினிச் சாவுகளும் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன.

இது ஒரு யுத்தம். பண முதலைகளும், அவர்களை நத்திப் பிழைக்கும் 'படைப்பாளி

தயாரிப்பில் இருக்கும் 100 படங்கள் பாதியில் நிற்கின்றன. ''எடுத்து முடித்தவரையுள்ள படச்சுருளைக் கழுவமாட்டோம்; 'பிராசசிங்' செய்ய மாட்டோம்'' என்று சென்னையில் உள்ள பிரசாத், ஜெமினி, விஜயா கலர் லாப் தொழிலாளர்கள் உறுதியாக நிற்பதால், மணிரத்தினத்தின் நேருக்கு நேர் படம் உள்ளிட்ட 17 படங்கள் கழுவப்படாமல் நிற்கின்றன.

ஃபெப்சி தொழிலாளர்களை வைத்து வேலை செய்யமாட்டோம் என்று திமிராக


படிப்பகம்

கும் பட முதலா
/ படைப்பாளி
தொழிலாளிக
(தற்போது பாதி
நிற்கும் படங்க
5 மட்டும்) வைத்தி
ம் சம்பள பாக்கி
இலட்ச ரூபாய்.
த வேலைக்குக்
கொடுக்காமல்
ாற்றும் இந்த யோக்
சிகாமணிகள்தான்
மிழ்த் தொழிலாளிக
்க்காக நீலிக் கண்ணீர்
டிக்கிறார்கள்.

தமிழ்த் திரையுல
ில் தற்போது நடந்து
கொண்டிருப்பது தொழி
லாளர்களின் வேலை நிறுத்தமல்ல. பட முதலாளிகளின் கதவடைப்பு. ராமன் - அப்துல்லா படப்பிடிப்பில் நிகழ்ந்த பிரச்சினையைக் காரணம் காட்டி, ''படைப்பாளிகளும், படைப்புத் தொழிலுக்குச் சம்பந்தமில்லாத தொழிலாளிகளும் ஒரே சங்கத்தில் (அதாவது ஃபெப்சியில்) இருக்க முடியாது'' என்று சொன்னார்கள் இயக்குநர்கள். ''இது கட்டமைப்பிலேயே உள்ள கோளாறு (Structural anomaly)'' என்று கூறிய பாலு மகேந்திரா, ''படைப்பாளிகளான தங்களுக்குத் தனிச் சங்கம் வேண்டுமென்பது தான் கோரிக்கை'' என்றார்.

ஃபெப்சியிலிருந்து விலகி படைப்பாளிகள் சங்கம் அமைக்கப்பட்டது; பிறகு அது தமிழ்ப் படைப்பாளிகள் சங்கமாக மாறியது.

தாங்கள் வெளியேறியது மட்டுமின்றி, தொழிலாளர்களையும் உடைத்துக் கருங்காலி சங்கம் வைக்க வேண்டும் என்று திட்டம் போட்டார்கள் பட முதலாளிகள். எனவே கருணாநிதியுடன் பேச்சு வார்த்தைக்குப் போகும் போது, ''தமிழ் படைப்பாளிகள் - தொழிலாளிகள் கூட்டமைப்பு'' என்று மீண்டும் பெயர் மாற்றம் செய்தார்கள்.

ஃபெப்சி தொழிலாளிகள் யாரும் கருங்காலி சங்கத்திற்கு வராததால், புதிதாக ஆள் சேர்த்தார்கள். 30,000 பேர் சேர்ந்து விட்டதாக அறிவித்தார்கள். 30,000 பேரை வைத்து ஒரு படம் கூட உருப்படியாக எடுக்க முடியாமல் அம்பலப்பட்டுப் போனார்கள்.

''தங்களுக்கு எந்தச் சங்கம் விருப்பமோ, அதில் தொழிலாளி இருந்து கொள்ளட்டும்; வேலையைத் துவங்குவோம்'' என்றார்கள்.

வெளி மாநிலங்களில் படப்பிடிப்பு நடத்த முயன்று தோற்றார்கள். கமலஹாசனும், குஞ்சுமோனும் ஃபெப்சி தொழிலாளர்களை வைத்துப் படத்தை முடித்ததால் ஆத்திரமடைந்தார்கள். நெருக்கடியான நிலையில், ''யாமிருக்க பயமேன்'' என்று பட முதலாளிகளுக்கு ஆதரவு கொடுத்தார் கருணாநிதி.

ஃபெப்சி தொழிலாளர்கள் மீது அடுக்கடுக்காகப் பொய்வழக்குகள் போடப்பட்டு, கைது செய்யப்பட்டனர்; ஃபெப்சிக்கு ஆதரவு தந்து கமலஹாசனுடன் வந்த நடிகர்கள் மிரட்டப்பட்டனர். 'படைப்பாளி'களுக்கு அடியாளாக காவல்துறையை அனுப்பி வைத்து, எப்படியாவது படப்பிடிப்பை நடத்த உதவி செய்தார் கருணாநிதி.

''நீங்கள் உங்கள் விருப்பம்போல படைப்பாளிகள் சங்கம் தனியே வைத்துக் கொள்ளுங்கள்; தொழிலாளர்கள் அவர்களுக்கு விருப்பமான ஃபெப்சியில் இருந்து கொள்ளட்டும். படப்பிடிப்பைத் துவங்கலாம். படைப்பு தொடர்பான பிரச்சினைகள் எழுந்தால், அதற்கென ஒரு குழு அமைத்து அதில் தீர்த்துக் கொள்ளலாம்'' என்ற சமரசத் தீர்வை ரஜினி போன்றோர் முன் வைத்திருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

இதுதான் பாலுமகேந்திரா முதன் முதலில் எழுப்பிய கோரிக்கை. ஆனால் இந்தத் தீர்வுக்குக்கூட உடன்பட மறுத்து, ''எங்கள் கருங்காலி சங்கத்தில் சேரும் தொழிலாளிக்குத் தான் வேலை'' என்று திமிராகப் பேசுகிறார்கள், 'படைப்பாளிகள்' என்று தம்மை அழைத்துக் கொள்ளும் பட முதலாளிகள்.

பட முதலாளிகளின் திமிருக்கு முக்கியமான காரணங்கள் மூன்று: 1. கருணாநிதி அரசு படைப்பாளிகளுக்கு அடியாள் வேலை பார்க்கிறது. 2. பட்டினி கிடக்கும் தொழிலாளிகள் பணிந்தே தீருவார்கள் என்ற நம்பிக்கை. எனவே, பட்டினிச் சாவுகள் அதிகரிக்க அதிகரிக்க இவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். 3. ஃபெப்சியுடன் சமரசம் செய்து கொண்டு பாதியில் நிற்கும் படங்களை எடுத்து முடித்தாலும், அதை வாங்குவதற்கு விநியோகஸ்தர்கள் ஒன்றும் காத்துக் கிடக்கவில்லை.

தொழிலாளிகளின் உறுதிக்குக் காரணம் ஒன்று மட்டும்தான். புதிய சம்பள உயர்வு

**தமிழ்த் திரையுலகில் தற்போது நடந்து கொண்டிருப்பது திரைப்பட முதலாளிகளின் கதவடைப்பு. பண முதலைகளும், அவர்களை நத்திப் பிழைக்கும் 'படைப்பாளிகள்' கும்பலும், கருணாநிதியின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராகத் தொடுத்துவரும் யுத்தம்.**



கருங்காலி படைப்பாளிகள் - தமிழ்ப்பட முதலாளிகள் - கருணாநிதி கூட்டணியை எதிர்த்து, ஃபெப்சி தலைவர் விஜயன் (முன் வரிசையில் இடமிருந்து இரண்டாவது) மற்றும் பொதுச் செயலாளர் பால்ராஜ் (விஜயனின் இடது பக்கத்தில்) தலைமையில் திரைப்படத் தொழிலாளர்களின் உண்ணாவிரதப் போராட்டம்.

ஒப்பந்தத்தில் தமிழ்ப் பட முதலாளிகள் கையெழுத்திட மறுக்கிறார்கள் என்பது இரண்டாம் பட்சப் பிரச்சினை தான். ஃபெப்சியை உடைத்துவிட்டால், அடுத்த கணம் முதல் தாங்கள் எப்படி நடத்தப்படுவோம் என்பதைத் தொழிலாளிகள் அறிவார்கள்.

இலட்சக்கணக்கில் சம்பளப் பாக்கியை ஏமாற்றிவிட்டு படத்தை வெளியிட முயற்சிக்கும் முதலாளிகள், முணுக்கென்றால் தொழிலாளியை அடிக்கக் கை ஓங்கும் இயக்குனர்கள், கார் ஓட்டுநரை நாய் குளிப்பாட்டச் சொல்லும் நட்சத்திர நடிகைகள்... என படைப்பாளிகளின் சுயரூபத்தை தொழிலாளிகள் பலவிதங்களிலும் அனுபவித்துப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். பட்டினியால் செத்தாலும் தொழிலாளி பணிய மறுப்பதற்குக் காரணம் இதுதான்.

கதாநாயகியாக்குகிறேன் என்று படுக்கையறைக்குப் பயன்படுத்திக் கொண்டு கசக்கி எறியப்படும் பெண்களைப் போல, கதையைத் திருடிக் கொண்டு விரட்டிவிடப்படும் கதாசிரியர்களைப் போல, கருத்தைத் திருடிக் கொண்டு கழற்றி விடப்படும் உதவி இயக்குனர்களைப் போல, தொழிலாளிகளின் உழைப்பையும், தன்மானத்தையும் திருடலாம் என்பதுதான் பட முதலாளிகள் / 'படைப்பாளி'களின் ஆசை.

''நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல'' என்று சில முற்போக்கு படைப்பாளிகள் 'நிரூபிக்க' முயற்சிக்கலாம். பட முதலாளி வர்க்கத்தின் நோக்கமும், யோக்கியதையும் அதுதான். தங்களது நேர்மையை நிரூபிக்க விரும்பும் படைப்பாளிகள் நிற்க வேண்டியது, முதலாளிகளின் அணியில் அல்ல.

இந்தப் போராட்டத்தில் தொழிலாளிகள் வென்றாலும் தோற்றாலும் முதலாளிகளின் கனவு ஈடேறாது. பட்டினியால் துடிதுடித்து இறந்த தங்கள் சகோதரர்கள், அநாதைகளாக்கப்பட்ட அவர்களுடைய குழந்தைகள், அடகுக் கடையில் தொங்கும் தன் மனைவியின் தாலி, பிள்ளையின் பசி போக்க தாங்கள் சுமந்த சிமெண்டுக் கலவை, துணை நடிகர் சங்கத்தில் தான் வாங்கித் தின்ற சோற்றுப் பொட்டலம், வறுமை தோற்றுவித்த குடும்பச் சச்சரவுகள், குழந்தைகளின் ஏமாற்றம் தோய்ந்த முகம், கடன்காரனின் ஏச்சு.... இன்னும் அனைத்தும், ஒன்று விடாமல் அவர்கள் நினைவில் கல்வெட்டாய்ப் பதிந்திருக்கும்.

முதலாளிகள் விரும்புவதைப் போன்ற ''அடிமைச் சாம்ராச்சியத்தை'' அவர்கள் உருவாக்க முடியாது. ஒட்டிக் கொண்டிருக்கும் அடிமைச் சிந்தனைகளை உதிர்த்த, வர்க்க வெறுப்பும், கோபமும் கொண்ட புதிய தொழிலாளியைப் பழைய படைப்பாளிகள் சந்திக்க வேண்டியிருக்கும்.

• மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

# கேசரிஜி, அத்வானிஜி, ஜோதிபாசுஜி, ................ கருணாநிதிஜி!

முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு என்று தீர்மானித்து விட்டார் மு. கருணாநிதி. எஞ்சியிருந்த தமிழின உணர்வு, தமிழ் மொழிப் பற்று, பகுத்தறிவு, திராவிடம், மாநில சுயாட்சி, டெல்லி ஆதிக்க எதிர்ப்பு முதலான தி.மு.க.வுக்கே உரித்தான தனித் தன்மைகள் அனைத்தும் இன்று காலிப் பெருங்காய டப்பாவாகிவிட்ட நிலையில், தி.மு.க. ஒரு 'தேசிய'க் கட்சியாக பரிணமிக்கத் தொடங்கிவிட்டது. குறிப்பாக, 'சுதந்திர' பொன்விழா நிகழ்ச்சிகள் இதை நிரூபித்துக் காட்டி விட்டன.

டெல்லியில் நடைபெற்ற சுதந்திரப் பொன் விழாப் பேரணியில் கலந்து கொள்ளும் தமிழகத் தியாகிகளுக்கு வழியனுப்பும் விழாவில், ''தியாகிகளால் உருவான இந் நாட்டின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் என்றென்றும் காத்து, இந்தியாவின் வலிமையை மேலும் வலுப்படுத்துவோம்'' என்று முழங்கினார், மு.க.

'சுதந்திர' நாள் உரையில், ''நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை காத்து, தமிழன் கொற்றம் சிறக்கப் பணியாற்றுவோம்'' என்று அறைகூவல் விடுத்துள்ளார். ''தி.மு.க.வுக்கும் சுதந்திர தினத்துக்கும் அதிக ஈடுபாடு உள்ளது. 25-வது ஆண்டு வெள்ளி விழாவை முதல்வராக இருந்து கொண்டாடியது போல, பொன்விழாவையும் கொண்டாடும் வாய்ப்பையும் பெற்றேன்'' என்று பெருமிதம் கொள்கிறார். 'சுதந்திர' நாள் உரையில் பாரதி, காந்தி மற்றும் 'சுதந்திர'ப் போராட்ட வீரர்களை நினைவு கூர்ந்த அவர், தியாகிகளைப் பற்றிய வரலாற்றை எழுதப் போவதாகவும் அறிவித்தார்.

சிதம்பரனார் இழுத்த செக்கைத் தேடிக் கண்டுபிடித்து காட்சியகத்தில் வைத்தது; தில்லையாடி வள்ளியம்மையாருடன் இணைந்து பணியாற்றிய நாராயணசாமி, நாகப்பன் ஆகிய தியாகிகளின் பெயரால் தொகுப்பு வீடுகள் அமைத்தது; முன்னாள் அமைச்சர் கக்கனுக்கு முழு உருவச் சிலை; சுதந்திரப் போராட்ட மேடை நாடகக் கலைஞர் விசுவநாததாசின் சிதிலமடைந்த இல்லத்தைப் புதுப்பித்து அரசுடமையாக்கியது என்று தேசிய உணர்வுடன் தமது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பட்டியலிட்டதோடு, தியாகிகளுக்கான ஓய்வூதியத்தையும் உயர்த்தியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அண்ணா சதுக்கத்தில் தி.மு.க. தொண்டர் அணியிடம் 1050 மீட்டர் நீளமுள்ள பிரம்மாண்டமான ஒரே தேசியக்கொடியை கருணாநிதி வழங்க, அதைப் பிடித்துக் கொண்டு அவர்கள் ஊர்வலமாக வந்து, ரிப்பன் மாளிகையில் நடந்த விழா மேடையிலிருந்த அவரது மகன் மேயர் ஸ்டாலினிடம் கொடுத்தனர். திராவிட உணர்வு, தேசிய நீரோட்டத்தில் சங்கமித்து விட்ட உண்மையை இது வெளிப்படுத்திக் காட்டியது.

ஆரிய உணர்வு, திராவிட உணர்வு என்ற பேதம் இப்போது இல்லை என்று மு.க. முன்பே ஒரு நேர்காணலில் தெரிவித்திருந்ததோடு, திராவிட இயக்கத்தினராலேயே இது சாத்தியமாயிற்று என்றார். திராவிட இயக்கம் ஆரம்பிக்கக் காரணமாக இருந்த உணர்வுகள், இந்த 50 ஆண்டு காலத்தில் வற்றி வறண்டு போய் பிழைப்பு வாதத்தில் மூழ்கி விட்டதையும், திராவிட இயக்கத்தின் ஓர் அங்கமான தி.மு.க. தேசிய நீரோட்டத்தில் கலந்து விட்டதையுமே அது காட்டியது.

இதன் உச்சகட்டமாக, சுதந்திர தினத்தன்று கருப்புக் கொடி ஏற்றினாலோ, காட்டினாலோ அரசு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரித்தார். 'தேசிய' வாதிகளே ஆச்சரியப்படுமளவுக்கு ஆகஸ்டு 15 அன்று கருப்புக் கொடி ஏற்றிய தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் மற்றும் புரட்சிகர அமைப்புகள் மீது அடக்குமுறையை ஏவினார். அதற்கு முன்பாக, சுதந்திரப் பொன்விழாவின் போது தமிழ் தீவிரவாத இயக்கங்கள் முக்கிய இடங்களில் குண்டு வெடிப்புகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகப் பயபீதியூட்டி, தமிழகம் முழுவதும் தேடுதல் வேட்டையையும் வாகனச் சோதனைகளையும் போலீசைக் கொண்டு நடத்தினார்.

எந்தவொரு போராட்டத்தையும் மிருகத்தனமாக ஒடுக்கி, பிரிவினைவாத-பயங்கரவாத பீதியூட்டி அடக்குவது, ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து 'அமைதி'யை நிலைநாட்டுவதென்பதுதான்
பாசிச காங்கிரசும் பார்ப்பன பா.ஜ.க.வும் ஜனதாவும் போதிக்கும் தேசியத்தின் சட்டம்-ஒழுங்கு. அன்று, இந்த நோக்கங்களை விசுவாசமாக நிறைவேற்றிய பார்ப்பன பாசிச ஜெயாவை தேசியக் கட்சிகளும், தேசியப் பத்திரிகைகளும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடின. இன உணர்வு கொண்ட ஜனநாயகவாதியாகக் காட்டிக் கொள்ளும் மு.க. மீதும் அவரது கழகத்தின் மீதும் தேசியவாதிகளுக்கு இந்த விவகாரத்தில் நீண்ட காலமாக சந்தேகம் இருந்து வந்தது. அதைப் போக்கும் வகையில், பாசிச ஜெயாவை விட ஒரு படி மேலே, போய் தேசிய அடிமைச் சேவகம் செய்யத் துணிந்து விட்டார் கருணாநிதி.

கடந்த ஆகஸ்
கூட்டமைப்புகளின்
களே வியக்கும்
ஒடுக்கினார். பே
ஏதோ படையெடு
போல, தி.மு.க. அர
இப்பேரணிக்குப் பெ
யும், முழு அளவ
கொண்ட 16 முன் நிபந்
உயர்நீதி மன்றம் விதித்
ரவை நிறைவேற்றுவதாக
ஏறத்தாழ 5000 பேர் பங்
லத்துக்கு பத்தாயிரத்துக்
போலீசார் குவிக்கப்பட்ட
போதாமல் அண்டை மாநில
மத்திய அதிரடிப் படையிலிரு
சார் குவிக்கப்பட்டனர். வெ
ருந்து ஊர்வலத்துக்கு வந்த வா
ருக்கு வெளியிலேயே தடுத்து நிறு
பங்கேற்ற மக்கள் கடுமையான சே
குப் பிறகே ஊர்வலத்தில் அனுமதி
னர். ஊர்வலப் பாதையிலுள்ள
போலீசாரால் அடைக்கப்பட்டு, வ
யில் ஈடுபடுவோரை அடையாளங்
அழியாத மையைப் பீச்சியடிக்கும் தன்
வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்ட
பாசிச ஜெயா ஆட்சியில் கூட, ஊர்வல
ளுக்கு இப்படி கெடுபிடிகள் விதிக்கப்பட்ட
கிடையாது. இனி எந்தவொரு தாழ்த்தப்ப
டோர் பேரணியையும் தி.மு.க. அரசு இத்த
கைய கெடுபிடிகளைக் கொண்டு ஒடுக்கும்;
எதிர்த்தரப்பினரின் ஊர்வலங்களுக்கும்
இதை விரிவுபடுத்தும் என்பதில் சந்தேகமில்லை. •

தி.மு.க.வின் 'தேசிய' விசுவாசத்தைப் பறைசாற்றும் 1050 மீட்டர் நீளமுள்ள தேசியக் கொடியின் ஒரு பகுதி.



அறிவித்
ளிகள்
கள்,
ளுக்கு
யில்
ளுக்கு
ருக்கு
75
செய்
கூலி
ஏம
திய
தப்
ளு
வ



படிப்பகம்

www.padippakam.com

திமுகவின் தேசிய உணர்வையும், போராட்டங்களை ஒடுக்க கையாளும் புதிய உத்தியையும் தேசியவாதிகளும், தேசிய பத்திரிகைகளும் உச்சி முகர்ந்து பாராட்டுகின்றன. தி.மு.க.வின் பிரிவினைவாதப் போக்கையும், சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையையும் முன்பு கடுமையாகச் சாடிவந்த மு.க.வின் பரம எதிரியான துக்ளக் ''சோ'' கூட, இப்போது தி.மு.க. அரசை மனந்திறந்து பாராட்டுகிறார். இந்தப் புகழ்ச்சியில் மயங்கிப் போய், ''தேசிய அளவிலான ஒரு பொதுக் காரணம் இருந்தாலொழிய பந்த்-முழு அடைப்புப் போராட்டத்தைக் கட்சிகள் நடத்துவது கூடாது; தொழிற்சங்கங்களும் இதனைச் சிந்திக்க வேண்டும்'' என்று உபதேசிக்கிறார், கருணாநிதி.



*பயங்கரவாத - பிரிவினைவாத பீதியூட்டி, ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து 'தேசிய' ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதில், காங்கிரசு, பா.ஜ.க., அ.தி.மு.க. பாசிஸ்டுகளுக்கு தானும் சளைத்தவரல்லர் எனக் காட்டி வருகிறார், கருணாநிதி.*

ஏற்கனவே ஈழப் பிரச்சினையிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்ட தி.மு.க., ஈழத்தில் நடக்கும் இனப் படுகொலையைக் கண்டித்து நடந்த கடையடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தர மறுத்தது; தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவதைக் கண்டிக்கக் கூட முதுகெலும்பின்றிக் கிடக்கிறது. காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையைப் பெறுவதற்கான திராணியின்றி, வெற்றுச் சவடால்களுடன் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே குறியாக உள்ளது.

தி.மு.க.வின் தலைமை இப்படி தேசிய அடிமைச் சேவகம் செய்து ஆதாயமடைவதையே அரசியல் திறமையாகப் பாராட்டிக் கொள்ளலாம். ஆனால் தமிழினம் இத்துரோகத் தனங்களை நீண்ட காலம் சகித்துக் கொண்டு இருக்காது.

• மனோகரன்

# கருணாநிதி - கள்ளச்சாராய கிரிமினல் உடையாரின் கூட்டுச்சதி!

தென்னிந்திய தொழிற்சங்க வரலாற்றில் ''பக்கிங்காம் அண்ட் கர்நாடிக் மில்'' எனப்படும் பி & சி மில் தனித்துவம் பெற்றது. ஆங்கிலேயன் ஆட்சியிலேயே போராடி உரிமை பெற்றது அதன் சென்னை தொழிற்சங்கம் (எம்எல்யு).

20 ஆயிரம் தொழிலாளர் வேலை பார்த்த அங்கு, இன்று ஐயாயிரம் பேர் மட்டுமே வேலையில் உள்ளனர். சாராயம் காய்ச்சி, அடியாள் வைத்துச் சொத்து சேர்த்த கிரிமினல் உடையாரின் பினாமி 1987-இல் ஆலை நிர்வாகப் பொறுப்பேற்றதிலிருந்து கதவடைப்பு என்பது வழமையான ஒன்றாகி விட்டது.

ஆலையைத் திறக்கக் கூறிய நீதிமன்ற உத்தரவோ குப்பைக் கூடையில். முதல்வர் முன்னிலையில் போட்ட ஒப்பந்தமும் கழிப்பறைக் காகிதமாயின. சாராயம் காய்ச்சும் கிரிமினல் கும்பலுக்கு ஆலை நிர்வாகமும் தெரியாது; ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் ஆற்றலும் தெரியாது.



அதனால்தான் 7.7.'97 அன்று நடந்த ஆலைவாயிற் கூட்டத்தில் தனது அடியாட்களை ஏவிக் கலவரத்தைத் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

ஆலை திறப்புக் குழுவின் முதல் படியாக 7.7.'97 அன்று எம்.எல்.யு. செயலர் தீனன் தலைமையில் வாயிற் கூட்டம் நடந்தது. கூட்டத்தின் போது ஒரு பிரிவு தொழிலாளர்கள் பேருந்து மறியலில் ஈடுபட்டனர். அதில் ஊடுருவிய சாராய உடையாரின் கிரிமினல் அடியாள்படை பேருந்தின் மீது கல் வீசித் தாக்குதலில் இறங்கியது.

சங்கச் செயலாளர் தீனன் தடுத்தார். அதையும் மீறி அடியாள் கும்பல் பேருந்துகளை நொறுக்கியது. நிர்வாகத்துடனான கள்ளக் கூட்டு, ஒப்பந்தப்படி போலீசு தொழிலாளர் மீதும் பொது மக்கள் மீதும் தடியடி நடத்தி விரட்டியடித்தது. அவர்கள் சிதறி ஓடும் போது 3 பேருந்துகள் அடியாட்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். அதனை எதிர்த்து மறியல் செய்த பெண்களும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் 163 பேர் மீதும் 5 பிரிவுகளில் பிணையில்லா வழக்குத் தொடுத்து, வேலூர் சிறையில் அடைத்தது தி.மு.க. அரசு. தற்போது 1 மாதத்திற்குப் பின் பிணையில் வந்துள்ளனர்.

இச்சம்பவத்தைச் சாக்காக வைத்து சாராய உடையார் கிரிமினல் கும்பல், திரும்பவும் ஆலையை மூடிவிட்டது. நீதிமன்ற உத்தரவுப்படி கொடுத்து வந்த அரைகுறை ரேசனையும் நிறுத்தி தொழிலாளர்கள் வயிற்றிலடித்துள்ளது.

ஏற்கனவே தொழிலாளிகள் ஓராண்டாக வேலையின்றி அல்லலபட்டனர். முதல்வர் முன்னிலையில் ஒப்புக் கொண்டபடி 1.4.'97 லிலிருந்து 3 மாதத்தில் ஆலையைத் திறப்பதற்காக இயந்திர பராமரிப்புப் பணியினைச் சம்பளமின்றி 1500 தொழிலாளிகள் செய்து வருகின்றனர். ஆயினும் ஆலையைத் திறக்காமல் இழுத்தடிக்கிறது நிர்வாகம்.

அத்தொழிலாளிகள்தான் 1. சட்டவிரோதமாகக் கூடினர், 2. ஆலை மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர், 3. பொது அமைதியைக் குலைத்தனர், 4. அரசு அதிகாரிகளைச் செயல்பட விடாமல் தடுத்தனர் என்ற பொய்க் குற்றச் சாட்டுகளில் சிறையிடப் பட்டுள்ளனர். வசனகர்த்தா கருணாநிதி, கள்ளச் சாராய கிரிமினல் உடையார் கும்பலின் கூட்டுச் சதியில் சிறப்பானதொரு நாடகம் அரங்கேறியுள்ளது.

சட்டப்படி அனுமதி பெற்ற 9.7.'97 ஆலை வாயிற் கூட்டங்களுக்கும், 10.7.'97 கோட்டை நோக்கிப் பேரணிக்கும் காவல் துறை அனுமதியைத் திரும்பப் பெற்று, தடை செய்தது. பின்னர் 15.7.'97ல் பேரணிக்கு மட்டும் அனுமதி தந்தது. கடந்த நவம்பரில் வசன கர்த்தா கருணாநிதி, ஆலை திறக்கப்படவில்லை என்றால் அரசு நிர்வாகத்தை ஏற்கும் என வீர வசனம் பேசினார். இன்று காட்சி மாறியுள்ளது. அரசு நிர்வாகத்தை ஏற்க இயலாது என புதிய வசனம் அரங்கேறியுள்ளது.

இன்னொரு புறம் ஏஐடியுசி, சிஐடியு உட்பட எல்லா பிழைப்புவாத தொழிற்சங்கங்களும் இன்று ஆலை திறந்தால் அதற்கான புகழ் குசேலருக்குப் போய்விடுமே யென தனி ஆவர்த்தனம் வாசிக்கின்றனர். ஒப்புக்கு கூட்டங்களில் வந்து பேசிச் செல்கின்றனர்.

அரசு ஆலையை ஏற்று நடத்தக் கோரும் போராட்டங்களை, அரசைப் பணிய வைக்கும் முறையில் நடத்தாத வரை, இவை அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காகப் பயனற்றுப் போகும்.

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,
சென்னை


படிப்பகம்

www.padippakam.com



## 'பெரிய' மனிதர்களின் கிரிமினல் வாரிசுகள்

அரசுயர் பதவி வகிக்கும் அதிகார வர்க்கத்தினர் மற்றும் பிரபல அரசியல்வாதிகள் - அமைச்சர்களின் வாரிசுகள் நடத்தும் ரௌடித்த னங்கள் அண்மைக் காலமாக உ.பி. மாநிலத்தில் அதிகரித்து வருகி றது. கடந்த ஜூலை மாதத்தில், துப்பாக்கி ஏந்திய மெய்க்காவலர்கள் புடைசூழ தலைநகர் லக்னோவிலுள்ள தாஜ் ஓட்டலில் நுழைந்த அந்த இளைஞன், வயிறுமுட்டக் குடித்துவிட்டு அங்கு கஜல் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்த பாடகியிடம் பிரபல இந்தி சினிமாப் பாடல்க ளைப் பாடுமாறு மிரட்டி ரகளை செய்தான். துப்பாக்கியுடன் மிரட்டிய தால் வேறு வழியின்றி அப்பாடகியும் அவ்வாறே பாடினார். பின்னர் அப்பாடகியின் முகத்தில் ரூபாய் நோட்டுகளை வீசியெறிந்து விட்டு அந்த இளைஞன் வெளியேறினான். இந்த ரௌடித்தனத்தைச் செய்த வன் அகிலேஷ் யாதவ். மத்திய பாதுகாப்பு அமைச்சரான முலயம்சிங் யாதவின் மகன்!

இதே போல கிளார்க் ஓட்டலில், குடிபோதையில் வந்த சஞ்சீவ் சுந்தாரி என்ற இளைஞனின் தலைமையிலான கும்பல் ரகளை செய்தபோது ஓட்டல் ஊழியர்கள் அவர்களைப் பிடித்து போலீசில் ஒப்படைத்தனர். இந்த ரௌ டிக் கும்பலின் தலைவன் உ.பி. பாரதீய ஜனதா அமைச்சரான மட்வார்சிங் சுந் தாரியின் மகனாவான்.



முலயம்சிங் யாதவின் மகன் அகிலேஷ் யாதவ் (வண்டி ஓட்டுபவர்): கிரிமினல் வாரிசு

கூடுதல் போலீசு தலைமை இயக் குனர் காயிந்த்தின் மகன் விஜய், உ.பி. மாநில பாரதீய ஜனதா தலைவர் கல் ராஜ் மிஸ்ராவின்மகன் அமித் மிஸ்ரா ஆகியோர் கடந்த ஆண்டில் ஒரு பெண்ணை மானபங்கம் செய்ய முயன்று பின்னர் கைதாயினர். பாதிக் கப்பட்ட அப்பெண் ஆளுநரின் ஆலோசகரான டி.கே. ஆர்யாவின் மக ளாவார். இதனாலேயே இந்த விவகா ரம் வெளியே தெரிந்து கைது நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டது. இல லையென்றால், இந்த விவகாரம் வழக் கம் போலவே மூடி மறைக்கப்பட்டிருக்கும் என்று போலீசாரே ஒப்புக் கொள்கின்றனர். பெரிய மனிதர்களின் கிரிமினல் வாரிசுகள் மீது வழக் குப் பதிவு செய்யும் போலீசு அதிகாரிகள் பந்தாடப்படுவதும் பழி வாங்கப்படுவதும் உ.பி.யில் சர்வ சாதாரணமாகி விட்டதென்று போலீசாரே புலம்புகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு முன்னாள் கவர்னரின் மகன், கவர்னர் மாளிகையில் பணியாற்றும் பெண் ஊழி யர்களிடம் முறைகேடாக நடந்து கொண்ட போது கையும் களவுமாகப் பிடிபட்ட போதிலும் கூட போலீசாரால் நடவடிக்கை எடுக்க முடிய வில்லை. இதே போல பல உயரதிகாரிகளின் வாரிசுகள் பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டுள்ள போதிலும் இன்று வரை அவர்கள் மீது எந்த நடவடிக்கையுமில்லை.

உ.பி.யில் இந்து வெறியர்களுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி நடத்தும் மாயாவதியின் அரசு, எதிர்க்கட்சி தொண்டர்கள் மீது பயங்க ரவாத குண்டர் சட்டத்தை ஏவி பழிவாங்குகிறது. ஆனால் 'பெரிய' மனிதர்களின் கிரிமினல் வாரிசுகள் மீது மட்டும் அச்சட்டம் பாய்வ தில்லை. என்ன செய்வது? 'தலித்' ஆட்சியானாலும் அது வர்க்க சார்புடையதுதானே!

## "பந்த்" போராட்டத் தடை - சட்டபூர்வமாக வரும் பாசிசம்

கடந்த ஜூலை மாத இறுதியில் கேரள உயர்நீதி மன்றம் "பந்த்" எனப்படும் கடையடைப்புப் போராட்டங்கள் சட்டவிரோதமானவை என்று தடை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. கேரள முதலாளிகள் சங்கம் தொடுத்த வழக்கை விசாரித்த நீதிபதிகளின் குழு, இத்தகைய போராட் டங்களால் பெருமளவு பொருளாதார இழப்பும், அன்றைய வாழ்க் கைப் பாதிப்பும் ஏற்படுவதாகக் காரணங்காட்டி, பந்த் போராட்டத்துக் குத் தடை விதித்து ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித் துள்ளது. பேச்சுரிமை, அமைப்பு ரீதியாகத் திரளுவது, எதிர்ப்பைத் தெரிவிப்பது முதலான சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமைக ளையே இதன் மூலம் நீதிமன்றம் பறித்துக் கொண்டுள்ளது. நாகரீக - ஜனநாயக சமுதாய அமைப்புக்கே சவாலாக அமைந்துள்ள இக்கொ டிய தீர்ப்பை நாடெங்கிலுமுள்ள தரகுப் பெருமுதலாளிகள் மட்டு மின்றி, ஜனநாயகவாதிகளாகக் காட்டிக் கொள்ளும் பல ஓய்வுபெற்ற நீதிபதிகளும் வரவேற்றுள்ளனர்.

கேரளா வழியில் அனைத்து மாநிலங்களிலும் கடையடைப்புப் போராட்டத்துக்குத் தடைவிதிக்கக் கோருகிறது, கல்கத்தா பெருமுத லாளிகள் சங்கம். சட்ட வல்லுனரும், உச்சநீதி மன்ற நீதிபதியுமான சாந்தி பூஷன், "அடிப்படை உரிமையைப் பறிப்பதாக இருந்தாலும் இத்தீர்ப்பை நான் வரவேற்கிறேன். சட் டபூர்வ ஜனநாயக உரிமை மட்டுமின்றி இத்தகைய கட்டுப்பாடுகளும் நாகரீக சமுதாயத்திற்கு அவசியமானது" என் கிறார். போலிக் கம்யூனிஸ்டுகளால் மாபெரும் ஜனநாயகவாதியாகச் சித்த ரிக்கப்படும் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியான கிருஷ்ண அய்யர், "நான் எப்போதுமே பந்த்-திற்கு எதிரானவன் தான்" என்று தனது உண்மைச் சொரூ பத்தை வெளிக்காட்டியுள்ளார்.

போராட்டத்தின் உயர்ந்த வடி வங்களுள் ஒன்றாக கடையடைப்பை நடத்துவதற்குப் பதிலாக, சாதாரண எதிர்ப்பையே கடையடைப்புப் போராட்டத்தின் மூலம் காட்டுவதாக ஓட்டுக் கட்சிகள் இப்போராட்டத்தைச் சிறுமைப்படுத்தி விட்டன. தமது குறு கிய நலன்களுக்காக இப்படி போராட் டங்களை நடத்துவதன் விளைவாக போராட்டம், வேலை நிறுத்தம் என் றாலே மக்கள் வெறுப்படைவதாக நிலைமை மாறிவிட்டது. இந்த இழிநி லைக்கு ஓட்டுக் கட்சிகள்தாம் பொறுப்பேற்க வேண்டும். அதே சம யம், ஓட்டுக் கட்சிகளால் ஏற்படும் பாதிப்புகளைக் காட்டி, மக்களின் அடிப்படை உரிமைகளையே பறித்துக் கொள்ளும் அயோக்கியத்த னத்துக்கு நாட்டு மக்கள் ஒருபோதும் துணை போக முடியாது. சட்ட பூர்வமாகவே பாசிசத்தைத் திணிக்கும் இத்தகைய முயற்சிகளை உழைக்கும் மக்கள் விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டும்.

## ஊழல் எதிர்ப்பு அவதாரம் — ஐ.எம்.எப்.பின் புதிய உத்தி

ஏழை நாடுகளை "உதவி", "கடன்" எனும் வஞ்சக வலையில் சிக்கவைத்து ஆதிக்கம் செலுத்தி வரும் சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்), இந்நாடுகளில் ஊழல் அரசுகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்களில் தானும் பங்கேற்று, நல்லாட்சியை நிறுவ முனையப் போவதாக அண்மையில் அறிவித்துள்ளது. அதாவது, ஒரு ஏழை நாட்டில் ஊழல் பெருத்து விட்டதாகக் கூறிக் கொண்டு அந்நாட்டுக் கான கடன், உதவிகளை ஐ.எம்.எப். இனி நிறுத்திவிடும். தனக்கு விசுவாசமாக இல்லாத அரசுகளை ஊழல் எதிர்ப்பு பூச்சாண்டி காட்டி மிரட்டிப் பணிய வைக்கும். இதுவரை திரைமறைவிலிருந்து ஏழை நாடுகளை அச்சுறுத்தி வந்த ஐ.எம்.எப்., இனி வெளிப்படையாகவே இந்நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டு ஆட்டுவிக்கும். ஊழலை ஒழிப்பது, நல்லாட்சியை நிறுவுவது என்ற பெயரில் ஏழை நாடுகளை மிரட்டிப் பணிய வைக்கும் புதிய உத்தியாகவே ஐ.எம்.



படிப்பகம்

www.padippakam.com



எப், இத்திட்டத்தை அறிவித்துள்ளது.

ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள கென்யா எனும் சின்னஞ்சிறு நாடு ஐ.எம்.எப்.பின் இச்சதித்திட்டத்திற்கு அண்மையில் பலியாகியுள்ளது. கென்யாவில் மேல் மட்டங்களில் ஊழலும் மோசடியும் பெருத்துவிட்டதாகக் கூறிக்கொண்டு, 220 மில்லியன் டாலர் (ஏறத்தாழ 6000 கோடி ரூபாய்) அளவுக்கான கடனுதவியை ஐ.எம்.எப். திடீரென நிறுத்தியது. அதைத் தொடர்ந்து பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டு அந்நிய முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். இதனால் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமாகி நாடும் மக்களும் அராஜகத்தில் சிக்கினர். கடைசியில், ஊழல் எதிர்ப்பு லட்சியம் போய், நாட்டை திவாலாக்கும் லட்சியம்தான் கென்யாவில் நிறைவேறியது. இந்த நோக்கத்தோடுதான் ஊழல் எதிர்ப்பு அவதாரத்தை ஐ.எம்.எப். எடுத்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் ஐ.எம்.எப், ஏழைநாடுகளின் எதிரி அல்ல; அதன் நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் உதவும் நண்பன் என்ற கருத்தை ஏழைநாட்டு மக்களிடம் பரப்பவது; ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களையும் புரட்சியாளர்களையும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவது; உள்நாட்டு ஊழலைப் பிரதானப்படுத்தி ஏகாதிபத்திய ஆதிக்கத்தை மூடிமறைப்பது என்பதே அதன் உள்ளார்ந்த நோக்கமாகும். இதற்காக தனது எடுபிடிகளான தன்னார்வக் குழுக்களை இப்பணியில் ஈடுபடுத்தும். இன்று சுற்றுச் சூழல் பாதுகாப்பு, பெண்ணியம், தலித்தியம் பேசிவரும் தன்னார்வக் குழுக்கள், ஐ.எம்.எப். கட்டளைப்படி நாளை ஊழல் எதிர்ப்பு இயக்கங்களை மேற்கொள்ளும்.



இழந்த நிலத்தை மீட்க மரபுவழி ஆயுதங்களுடன் கோயா மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்

## கோயா மக்களின் உரிமைப் போராட்டம்

ஆந்திராவில் கோயா பழங்குடியின மக்கள் பறிக்கப்பட்ட தமது நிலங்களை மீட்க நடத்திவரும் போராட்டத்தையடுத்து, சந்திரபாபு நாயுடு அரசு கடும் அடக்குமுறையை அம்மக்கள் மீது ஏவிவிட்டுள்ளது. வேட்டையாடுவதிலும் மூலிகை மருத்துவத்திலும் புகழ்பெற்ற கோயா மக்கள், மேற்கு கோதாவரி மாவட்டத்தில் போலவரம், புட்டயாகுட்டம் வட்டாரத்தில் வாழ்கின்றனர். இம்மக்களது பூர்வீக நிலங்கள் பழங்குடி அல்லாதோரால் படிப்படியாக அபகரிக்கப்பட்டு, இன்று கோயா மக்கள் நிலமற்ற ஏழைகளாகப் பரிதவிக்கின்றனர். இது தவிர, புறம்போக்கு காட்டு நிலங்களும் பழங்குடி அல்லாதோரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தமது பூர்வீக நிலங்களைத் தம்மிடமே ஒப்படைக்கக் கோரியும், பழங்குடி அல்லாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றக் கோரியும் கோயா மக்கள் சிறியதும் பெரியதுமாக பல போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

நில அளவை செய்து நிலங்களைத் திரும்ப ஒப்படைக்குமாறு அரசு உத்திரவிட்டுள்ள போதிலும், இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பழங்குடியினரின் பூர்வீக நிலமும், புறம்போக்கு காட்டு நிலங்களுமாக ஜீலுகுமில்லி வட்டாரத்தில் ஏறத்தாழ 9000 ஏக்கருக்கு மேல் உள்ள நிலையில், வெறும் 300 ஏக்கர் மட்டுமே பழங்குடியினரின் பூர்வீக நிலமாக நில அளவை கணக்கு காட்டப்பட்டுள்ளது. பழங்குடியினர் அல்லாதோர் ஆக்கிரமித்துள்ள நிலங்களில் புகையிலை பயிரிடப்படுவதால், ஆதாயம் கருதி புகையிலை விவசாயிகள் - வியாபாரிகளும், அதிகார வர்க்கமும் கூட்டுச் சேர்ந்து இம்மோசடியைச் செய்து கோயா மக்களை ஏய்த்து வருகின்றன.

தாம் தொடர்ந்து வஞ்சிக்கப்படுவதை உணர்ந்து, ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் போராட்டத்தில் கோயா மக்கள் இறங்கினர். இப்போராட்டத்தின் போது ஏற்பட்ட மோதலில் பழங்குடி அல்லாத ஒருவர் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து கோயா பழங்குடியினர் வாழும் பகுதிகளில் துணை இராணுவப் படைகள் குவிக்கப்பட்டு அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இப்பகுதி முழுவ 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, கோயா மக்கள் வில்-அ ஏந்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் 2,000-க்கும் மேற்பட்ட பொய் வழக்குகள் போடப்பட்டுள்ள இருப்பினும், அடக்குமுறையைத் துச்சமாக மதித்து, கோயா மக் தொடர்ந்து போராடி வருகின்றனர். இவர்களது போராட்டத்தை '' தி'' எனப்படும் தன்னார்வக்குழு தலைமையேற்று வழி நடத்தி வ றது. இத்துரோகத் தலைமையை முறியடித்து, புரட்சிகர தலைமை கீழ் அணிதிரளுவதன் மூலம் மட்டுமே கோயா மக்கள் த போராட்ட வெற்றியைச் சாதிக்க முடியும்.

## ஏகாதிபத்திய நாடுகளின் இரும்புப் பிடியில் இந்தியா

இந்தியச் சந்தையை தேசங்கடந்த தொழிற் கழகங்களுக் கூடுதலாகத் திறந்துவிட வேண்டுமென் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தி நாடுகள் உலக வர்த்தக நிறுவனம் (WTC மூலம் புதிய மிரட்டல்களை அண்மையி விடுத்துள்ளன. கடந்த ஜூன் மாதம் ஜெ வாவில் நடந்த உ.வ. நிறுவனக் கூட்டத்தில் இறக்குமதி தொடர்பான அளவு ரீதியான க டுப்பாடுகளை இந்தியா முற்றாக நீக்க வேண் டுமென அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஆஸ்திரேலியா, கனடா, சுவிட்ச லாந்து மற்றும் நியூஜிலாந்து ஆகிய நாடுகள் முறையிட்டன. இதற்கு 9 ஆண்டு கால அவ காசமும் பின்னர் 6 ஆண்டு கால அவகாசமும் தருமாறு இந்தியா கெஞ்சிப் பார்த்தும் இந்நா டுகள் ஏற்கவில்லை.

கடந்த ஏப்ரல் மாதத்தில் 1997 முதல் 2002 வரை ஐந்தாண்டுகளுக்கான ஏற்றுமதி-இறக்குமதிக் கொள்கையை இந்தியா அறிவித்தது. மொத்தம் இறக்குமதியாகும் 3200 இனங்களில் 500 இனங்களுக்கான கட்டுப்பாடுகளை இந்தியா முற்றாக நீக்கியது. ஆனால் இது போதாது; இன்னும் கூடுதலான இனங்களுக்கு கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென அமெரிக்கா தலைமையிலான பணக்கார நாடுகள் கோருகின்றன. இந்தியா எவ்வளவு இனங்களுக்குக் கட்டுப்பாடுகளை நீக்குகிறது என்பதைப் பார்த்து, அதற்கேற்ப நெருக்கடிகளைக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவே 1996 டிசம்பரிலிருந்து இவ்வாண்டு ஜூன் மாதம் வரை உ.வ. நிறுவனத்தின் கூட்டத்தை அமெரிக்கா தள்ளி வைத்தது.

தற்போதைய ஏற்றுமதி - இறக்குமதி கொள்கையின்படி 2700 இனங்களுக்கு இந்தியா இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இவை முக்கியமாக பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள், யூரியா, ஜவுளி, விவசாய உள்ளீடு பொருட்கள், நுகர் பொருட்கள் எனும் ஐந்து பெரும் வகைகளில் அடங்கும். ஏற்கனவே சர்க்கரை, பருத்தி, செய்தித்தாள் காகிதம் முதலானவற்றை கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்து கொள்ள இந்தியா தாராள அனுமதி அளித்துள்ளது. இதே போல விவசாயம் மற்றும் நுகர்பொருள் துறையில் மேலும் பல இனங்களுக்கு கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென பணக்கார நாடுகள் நிர்பந்திக்கின்றன.

கடன் பாக்கியைத் திருப்பிச் செலுத்த சாதகமான நிதி நிலைமை இல்லாததைக் காட்டி, உ.வ. நிறுவனத்தில் அகதிகளைப் போலுள்ள ஏழை நாடுகள் இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவதில் கால நீட்டிப்பை இதுவரை பெற்றுவந்தன. ஆனால் கடந்த ஜூன் மாதக் கூட்டத்திற்குப் பிறகு நிலைமை மாறிவிட்டது. அமெரிக்கா தலைமையில் பிற பணக்கார நாடுகள் ஒன்று சேர்ந்து இந்தியா மீது குற்றம் சாட்டியுள்ளதோடு, உ.வ. நிறுவனத்தின் தகராறு தீர்ப்புக் குழு மூலம் விசாரிக்கக் கோரியுள்ளன. ''ஏறத்தாழ ரூ. 80,000 கோடி அந்நியச் செலாவணி இருப்பு வைத்துள்ள இந்தியா, இனிமேலும் காலநீட்டிப்பு சலுகை


படிப்பகம்

www.padippakam.com



ற முடியாது'' என்று அந்நாடுகள் வாதிடுகின்றன. இந்தியாவை
ஏழை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை ஆகி
வை கூட இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் போது, இந்தியா
ரியும் தாமதப்படுத்துவதை ஏற்க முடியாது என்கின்றன.

இந்தியாவோ, அந்நியச் செலாவணி இருப்பு பற்றி இந்நாடுகள்
பும் கணக்கு தவறானதென்றும், இது நிலையற்ற - விரைவில் மாறக்
டிய இருப்பு என்றும், அந்நிய முதலீட்டாளர்கள் தேவைப்படும்
ாது திரும்பப் பெற்றுக் கொள்ளும் தொகைதான் என்றும் வாதிட்
பார்த்தது. ஆனால் உ.வ. நிறுவனத்தில் இந்நாடுகள் மட்டுமின்றி
எம்.எப். கூட இந்த வாதத்தை ஏற்க மறுத்துவிட்டன. புதிய பொரு
தாரக் கொள்கையால் அந்நியச் செலாவணி இருப்பு உயர்ந்துள்ள
க நாட்டு மக்களிடம் வேண்டுமானால் ஆட்சியாளர்கள் கதையளக்
ாம். ஆனால் ஏகாதிபத்திய எஜமானர்களிடம் அது எடுபடுமா?

ஒன்று, கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த வேண்டும்; அல்லது
.வ. நிறுவனத்தின் தகராறு தீர்ப்புக் குழுவின் முடிவை ஏற்க வேண்
ம் எனும் மீள முடி
ாத இரும்புப் பிடி
ல் இந்தியா சிக்கிக்
காண்டுள்ளது.

தை எதிர்த்து உ.வ.
றுவன வரம்புக
நக்கு உட்பட்டு இந்
யா முறையீடு செய்
லாம். அதன் மூலம்
ட்டுப்பாடுகளைத்
ளர்த்த ஓராண்டு
ால அவகாசத்தை
ட்டுமே பெற முடி
பும். வேறொன்றும்
செய்ய முடியாது.

இந்தியா
இவற்றை ஏற்க மறுத்
தால், இதே
போலவே அமெரிக்கா தலைமையிலான நாடுகளும் இந்தியாவிடம்
நடந்து கொள்ளும். அதாவது, இந்தியா இறக்குமதிக்கான கட்டுப்பா
டுகளை விதித்துள்ளதைப் போலவே இந்நாடுகளும், இந்தியாவிலி
ருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்
கும். அத்தகைய நிலைமை ஏற்பட்டால், இந்தியாவின் வர்த்தகமே
முடங்கிவிடும். ஏனெனில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில்
56%-க்கு மேல் இந்நாடுகளுக்குத்தான் போகின்றன.

உலக வர்த்தக நிறுவனத்தின் மூலம் அமெரிக்கா தலைமையி
லான ஏகாதிபத்திய நாடுகள் விதித்துள்ள இப்புதிய அச்சுறுத்தலை
எதிர் கொள்ள முடியாமல் ஐ.மு. அரசு தடுமாறி நிற்கிறது. இம்மிரட்
டலை எதிர்ப்பதாகக் கூறும் போலிக் கம்யூனிஸ்டுகள், மக்களைத்
திரட்டிப் போராடக்கூட திராணியற்றுக் கிடக்கின்றனர். உலக வர்த்தக
நிறுவனம் எனும் சவுக்கைக் கொண்டு ஏகாதிபத்திய நாடுகள், இந்தி
யாவை ஒரு வாழைப்பழ குடியரசாக வேகமாக மாற்றி விடுகின்றன.

## பன்னாட்டு நிறுவனங்களின் வரி ஏய்ப்பு மோசடிகள்

அன்னிய முதலீடுகளை வரவேற்று நாட்டை தொழில் மய
மாக்குவோம் என்று அளவிலா சலுகைகளை வாரியிறைத்த இந்திய
ஆட்சியாளர்கள், இப்பன்னாட்டு நிறுவனங்களின் வரி ஏய்ப்பு, சுங்கத்
தீர்வை மோசடிகளைக் கண்டு விழிபிதுங்கி நிற்கிறார்கள். பாரன்
எனும் பன்னாட்டு நிறுவனம் ரூ. 28 கோடிக்கு மேல் சுங்கத் தீர்வை
மோசடி செய்து இப்போது விசாரணை நடந்து வருகிறது. தென்
கொரிய பன்னாட்டு நிறுவனமான டேஓ, வருமான மற்றும் விற்பனை
வரி மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
நெஸ்லே நிறுவனம் ரூ. 35 லட்சத்துக்கும் மேலாக சுங்கத் தீர்வை
மோசடி செய்துள்ளது. ஜப்பானின் சோனி நிறுவனம் ரூ. 43 கோடிக்கு
வரி ஏய்ப்பு செய்துள்ளதாக டெல்லி சுங்கத் தீர்வை அலுவலகம்
நோட்டீசு கொடுத்துள்ளது. இதே போல ரீபக், நிக் முதலான காலணி
நிறுவனங்களும், அகாய், பிலிப்ஸ் டி.வி நிறுவனங்களும் வரி மோசடி
களில் சிக்கியுள்ளன.

இப்பன்னாட்டு நிறுவனங்கள், மூலச் சாதனங்களை மட்டும்
இறக்குமதி செய்து, துணைச் சாதனங்களை இந்தியாவில் உற்பத்தி
செய்து அவற்றை ஒருங்கிணைத்து பொருட்களாக விற்பனை செய்வ
தாகக் கூறிக்கொண்டு ஏராளமான வரிச்சலுகைகளைப் பெறுகின்றன.
ஆனால் மூலச்சாதனங்களோடு துணைச் சாதனங்களையும் சேர்த்து
இறக்குமதி செய்து சுங்கத் தீர்வை மோசடியில் ஈடுபடுவதுதான்
தொடர்ந்து நடக்கிறது. இந்தியாவில் துணைச் சாதன உற்பத்தி நடப்ப
தில்லை. சாதனங்களை ஒருங்கிணைத்து பொருத்தி விற்பனை செய்வது
தான் நடக்கிறது. இந்த வகையில் சோனி, அகாய், சாம்சங், பிலிப்ஸ்
முதலான நிறுவனங்கள் பலநூறு கோடி சுங்கத் தீர்வை மோசடி செய்
துள்ளன. இதுவும் போதாதென்று 10,000 ரூபாயில் புதிய டி..வி. தரும்
திட்டத்தை அறிவித்து இந்நிறுவனங்கள் விற்பனை வரி ஏய்ப்பு செய்
துள்ளன. சில நிறுவ
னங்கள் டெல்லி
அருகே சிறு உற்பத்தி
யாளர்களிடமிருந்து
தொலைக்காட்சிப்
பெட்டிகளை வாங்கி
அவற்றின் மீது தமது
முத்திரையைப்
பதித்து விற்பனை
செய்து மோசடியில்
ஈடுபடுகின்றன.




அன்னிய முதலீ
டுகளால் தொழிலும்
வேலை வாய்ப்பும்
பெருகும்; வரிகள்,
தீர்வைகள் மூலம் அர
சுக்கு கூடுதலாக வரு
வாய் பெருகும் என்
றெல்லாம் ஆட்சியாளர்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர். ஆனால்
அத்தனையும் மோசடி என்பதை பன்னாட்டு நிறுவனங்களின் வரி
ஏய்ப்பது அயோக்கியத்தனங்களே நிரூபித்துக் காட்டுகின்றன. மோச
டியில் ஈடுபட்டுள்ள இந்நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுத்தால்,
அவை இந்தியாவில் முதலீடு செய்யாமல் வெளியேறிவிடும்; நடவ
டிக்கை எடுக்காவிட்டால் மற்ற நிறுவனங்களும் இதே வழியில் உரி
மையோடு புதிய மோசடிகளில் ஈடுபடும் என்பதால் என்ன செய்வது
என்று புரியாமல் துரோக ஆட்சியாளர்கள் கையைப் பிசைந்து
கொண்டு நிற்கின்றனர்.

## மேடைக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு பிழைப்புக்கு தரகுத் தொழில்

மேடைகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு வீர வசனம் பேசிவரும்
போலிக் கம்யூனிஸ்டுகள், இப்போது வெளிப்படையாகவே பன்
னாட்டு நிறுவனத்தின் ஏஜெண்டுகளாக மாறிவிட்டனர். ''யுனிலிவர்''
எனும் பன்னாட்டு நிறுவனம், ''இந்துஸ்தான் லிவர்'' என்ற பெயரில்
இந்தியாவில் சோப்பு, பற்பசை, அழகுசாதனப் பொருட்களை உற்
பத்தி செய்து இந்திய மக்களிடமே விற்றுக் கொழுத்த இலாபத்தைப்
பல்லாண்டுகளாகச் சுரண்டிச் செல்கிறது. கேரளாவில் இந்நிறுவனத்
தின் விநியோக - விற்பனை முகமை உரிமத்தை கடந்த ஜூன் 30
முதலாக 'மார்க்சிஸ்டு' அரசு பெற்றுள்ளது. இதற்காக, 'மார்க்சிஸ்டு'
நாயனார் அரசு, ''லிவர்'' நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து
கொண்டுள்ளது. இதன்படி, ''லிவர்'' நிறுவனத்தின் உற்பத்திப்
பொருட்களை கேரள அரசு நிறுவனங்கள் மட்டுமே விற்பனை செய்
யும். இவற்றுக்கு 25% முதல் 33% வரை கமிஷன் தரப்படும். ''லிவர்''
நிறுவனம் கேரளாவில் மட்டும் ஆண்டுக்கு ரூ. 600 கோடிக்கு மேல்
தனது பொருட்களை விற்பனை செய்கிறது. இதன்படி, கமிஷன் மூலம்
மட்டும் ஆண்டுக்கு ரூ. 150 கோடிக்கு மேல் அரசுக்கு வருவாய்


படிப்பகம்

www.padippakam.com



கிடைக்கும் என்கிறார். 'மார்க்சிஸ்டு' முதல்வர் நாயனார். விற்பனையை தீவிரப்படுத்தி கூடுதல் கமிஷன் பெறும் நோக்கத்துடன் மாநிலம் முழுவதும் புதிதாக 1000 கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யப் போவதாக போலிகளின் அரசு அறிவித்துள்ளது.



ஏற்கனவே லீவர் நிறுவன உற்பத்திப் பொருட்களின் விநியோக - முகமையாளர்களாக இருந்த வியாபாரிகள், அந்நிறுவனத்திடம் கூடுதல் கமிஷன் கேட்டு வந்தனர். லீவர் நிர்வாகம் இதை ஏற்க மறுத்து விட்டதால், கடந்த ஜூன் முதலாக இனி லீவர் பொருட்களை விற்பதில்லை என்று அவர்கள் தீர்மானித்தபோதுதான், நாயனார் அரசு தலையிட்டு தானே விற்பனை செய்யக் கிளம்பியது. ஒரு பன்னாட்டு நிறுவனத்துக்குப் பாதிப்பு என்றவுடன் மிகக் கீழ்த்தரமான முறையில் சென்று உதவி செய்யும் மிகக் கேவலமான செயல் இதைவிட வேறொன்றும் இருக்க முடியாது.

''நாங்கள்தான் உண்மையான சுதேசிகள். எங்களது சுதேசியம் பாரதிய ஜனதாவின் சுதேசியத்திலிருந்து முற்றிலும் வேறானது. நாங்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பெரு முதலாளிகளுக்கும் எதிராக நிற்பவர்கள்'' என்று 'மார்க்சிஸ்டு'களின் சித்தாந்த குருவான நம்பூதிரிபாடு மார்தட்டிக் கொண்டு அணிகளையும் மக்களையும் ஏய்த்து வந்தார். இப்போது நம்பூதிரியாரின் நம்பகமான சீடரான கேரள முதல்வர் நாயனார், வெளிப் படையாகவே பன்னாட்டு நிறுவனத்தின் விற்பனையாளராக மாறி, இதர ஓட்டுக் கட்சிகளைப் போல தங்களது ஏகாதிபத்திய எதிர்ப்பும் வெறும் வாய்ச்சவடால் தான் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டார். நல்ல முன்னேற்றம்தான்!



## நச்சுக் கோதுமை விநியோகம் ஆட்சியாளர்களின் அயோக்கியத்தனம்

சென்ற ஆண்டின் இறுதியில் மத்திய விவசாய அமைச்சகம் ஆஸ்திரேலியாவிலிருந்து 11 லட்சம் டன் கோதுமையை இறக்குமதி செய்தது. சோதனையின் போது அந்த கோதுமையில் நச்சுத் தன்மை கொண்ட வேறு விதைகள் கலந்திருப்பது தெரிய வந்ததால் அதை மக்களுக்கு விநியோகிக்க வேண்டாம் என்று விவசாய அமைச்சகம் நிறுத்தி வைத்தது. பின்னர் இந்த கோதுமையை என்ன செய்வது என்று விவசாய அமைச்சகம் மற்றும் இந்திய உணவுக் கழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கூடிப் பேசினர். ஒரு கிலோ கோதுமை ரூ. 5 என்று வைத்துக் கொண்டாலும் 11 லட்சம் டன் கோதுமை ரூ. 550 கோடியாகிறது. இந்த நட்டத்தை இந்திய அரசால் தாங்க முடியாது என்று அதிகார வர்க்க கும்பலும் போலிக் கம்யூனிஸ்ட் விவசாய அமைச்சர் சதுரணன் மிஸ்ராவும் சேர்ந்து எப்படியாவது இந்த நச்சுக் கோதுமையை விநியோகித்து விட வேண்டும் என்று முடிவு செய்தனர்.

நாட்டு மக்களை ஆட்டு மந்தைகளாகக் கருதும் இச்சதிகாரர்கள், தமது அயோக்கியத்தனத்தை மறைக்க உணவுப் பொருள் தரக்கட்டுப்

பாட்டு நிறுவனத்திடம் சான்றிதழ்
கோதுமை விளையாத மாநிலங்களில்
விநியோகிக்கத் தீர்மானித்தனர். அத
ஒரு கிலோ கோதுமையில் 10 எண்ணி
அளவில்தான் நச்சு விதைகள் உள்ளன
றும், இதை உண்பதால் மனித உடலுக்
தத் தீங்கும் நேராது என்றும் தரக் க
பாட்டு நிறுவனம் சான்றிதழ் வழங்கியுள்
இதை ஆதாரமாகக் காட்டி, தமிழ்
கேரளா, ஆந்திரா, கர்நாடகா, ஒரிசா, மே
கம் ஆகிய கோதுமை விளையாத மாநி
ளில் ரேஷன் கடைகள் மூலமும், தனி
வியாபாரிகள் மூலம் வெளிச்சந்தையி
விநியோகிப்பதென இந்திய உணவுக் கழ
உத்திரவிட்டது.

இந்திய உணவுக் கழகத்தின் தென் பி
தியக் கிளை 7.5 லட்சம் டன் கோதுமையைப் பெற்று கடந்த பிப்ர
முதலாக நான்கு மாதங்களில் 5.5 லட்சம் டன் கோதுமையை
பனை செய்து விட்டது. இதன் பிறகே சில பத்திரிகைகள் இ
அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தி, சம்பந்தப்பட்ட அதிகா
ளிடம் கேள்வி எழுப்பின. ஒவ்வொரு துறையின் அதிகாரிகளும் ம
துறையினர் மீது பழிபோட்டு, தப்பித்துக் கொள்ளும் வகையில்தா
பதிலளிக்கின்றனர்
அதிகாரத் தி
கொண்ட சிலர், இ
நச்சு விதைகள் வே
னவை என்பதா
காற்றில் தூற்றினா
பிரிந்து விடும் எ
றும் அவ்வாறு பிரி
துவிட்டு பயன்படு
துமாறு தனியா
வியாபாரிகளுக்கு
உத்திரவிட்டுள்ள
தாகவும் கூறுகின்
னர். இலாப வெ
கொண்ட எந்
வொரு பெரு விய
பாரியும், மக்கள் நல
னில் அக்கறை
கொண்டு இப்படி
செய்வானா?

ரேஷன் கடைகளில் கோதுமை வாங்கிய ஏழைகள் மட்டுமல்ல;
அணில், ராமலிங்கா பூரி - சப்பாத்தி மாவு வாங்கிய நடுத்தர வர்க்கத்தி
னரும், அன்னபூர்ணா, கிசான் நிறுவனங்களின் பாக்கெட் கோதுமை
மாவு வாங்கிய மேட்டுக் குடியினரும் கூட இந்நச்சுக் கோதுமையால்
பாதிக்கப்பட்டுள்ளனர். எத்தகைய நோய்களும் பாதிப்புகளும் ஏற்
பட்டுள்ளது என்பது இனிமேல்தான் தெரிய வரும். நாடெங்கும் ஏகா
திபத்திய நச்சுக் கழிவு ஆலைகள், இறால் பண்ணைகளை நிறுவியது
போதாது என்று நச்சுக் கோதுமை மூலம் நாட்டு மக்களை சீக்காளியாக்
கவும் மனிதத்தன்மையற்ற, மக்கள் விரோத ஆட்சியாளர்கள் துணிந்து
விட்டதையே இது மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

நாடு மீண்டும் காலனியாவதை எதிர்த்து 9.8.97-இல் மாரநேரியிலும், 12.8.97-இல் குருங்குளத்திலும் பொதுக்கூட்டங்கள் நடந்தன. மாரநேரியில் தோழர் ஆண்ட்ருஸ்ும், குருங்குளத்தில் தோழர் குருமூர்த்தியும் தலைமை தாங்கினர். இரு இடங்களிலும் ஆண்டிபட்டி வி.வி.மு. தோழர் செல்வராசும், ம.க.இ.க. தோழர் காளியப்பனும் சிறப்புரையாற்றினர். மையக் கலைக் குழுவின் எழுச்சிமிகு கலை நிகழ்ச்சிகள் மக்களைத் தட்டி எழுப்பின.

ஓட்டுக் கட்சிகள் செயலற்றுப் போயுள்ள நிலையில் - மாரநேரியில் நமது பிரச்சாரம் மக்கள் கவனத்தை ஈர்க்கும் வண்ணமிருந்தது.

ம.க.இ.க., தஞ்சை.



படிப்பகம்

www.padippakam.com



# போலி சுதந்திரத்திற்குப் பொன்விழா ஒரு கேடா?

போலி சுதந்திரம் என்பதற்கு இன்னுமொரு சான்று. கருத்தை வெளிப்படுத்தக்கூட நமக்கு உரிமையில்லை. ம.க.இ.க. பொதுச் செயலாளர் மருதையன் 13.8.97 தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி கோரி உயர்நீதி மன்றத்தில் 1.8.97, 7.8.97 என இருமுறை விண்ணப்பித்த பின்னரே 12.8.97-ல் ஒரு தீர்ப்பு வந்தது.

ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு. சார்பாக பகுதிகள் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி கோரி விண்ணப்பித்தால், அனுமதி வழங்கக் கூடிய அதிகாரி 48 மணி நேரத்திற்குள் பரிசீலித்து முடிவு வழங்க வேண்டும். அதை பொதுச் செயலர் மருதையனுக்கும் தெரியப்படுத்த வேண்டும் எனத் தீர்ப்பு வந்துள்ளது.

அனுமதி கேட்டால் ஒன்று அனுமதி தரவேண்டும், இல்லை எனில் மறுக்க வேண்டும். ஆனால் போலீசோ கடைசி நேரம் வரை இழுத்தடித்துச் சட்டபூர்வ நடவடிக்கைக்குக் கூட வாய்ப்பின்றி அனுமதி மறுப்பது என்பது வழமையான ஒன்று. இதை உடைத்தெறியவே முன் கூட்டி வழக்குத் தொடுத்தோம். நீதிமன்றமும் போலீசின் இச்செயலைக் கண்டிக்கும் வண்ணம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதுதான் 'பொன்விழா' ஆண்டில் நமக்குள்ள சுதந்திரத்தின் லட்சணம். இதன்படி போலீசு நடந்ததா என்பது தனிக்கதை.

சென்னையில் 14.8.97 அன்று போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி தோழர் புவண் தலைமையில் சென்னை குறளகம் எதிரில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் ம.க.இ.க. தோழர்கள் ஆதரவாளர்கள் சுமார் 40 பேர் கலந்து கொண்டனர். ம.க.இ.க.வின் மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்றினார். தட்டிகளில் கேலிச் சித்திரங்கள் வரைந்து வைத்தது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

காவல்துறை இறுதி நேரத்தில், அதுவும் இரண்டு மணி நேரம் மட்டுமே அனுமதியளித்தது. இதையும் கூட நீதிமன்றம் சென்றே பெற முடிந்தது.

மதுரையில் ம.க.இ.க., பு.மா.இ.மு. சார்பாக தெற்கு மாசி - மேலமாசி வீதிகள் சந்திப்பில் உள்ள டி.எம். கோர்ட்டில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தித் தொடர் முழக்கப் போராட்டம் காலை 11 முதல் மாலை 6.45 வரை நடந்தது.

பு.மா.இ.மு. தோழர் இரவீந்திரன் தலைமை தாங்கினார். தோழர்கள் செந்தில், ஆறுமுகம், தமிழ்ச் செல்வன் பேசினர். ம.க.இ.க. தோழர் கதிரவன் சிறப்புரையாற்றினார்.

ஆகஸ்ட் 15 அன்று மக்களிடையே துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. மதுரை நேதாஜி சிலையருகே கருப்புக் கொடி குத்தி பிரசுரம் வழங்கிய பு.மா.இ.மு. தோழர் கண்ணன் போலீசால் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுவிக்கப்பட்டார்.

திருச்சியில் ஆகஸ்ட் 15 அன்று போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி கருப்புக் கொடியுடன் ஊர்வலம் சென்ற ம.க.இ.க. - பு.மா.இ.மு. தோழர்கள் 15 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

நெய்வேலியில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி 13.8.97-ல் தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்திற்கும் 14.8.97-ல் பொதுக் கூட்டத்திற்கும் ஒலி பெருக்கி அனுமதி கோரி விண்ணப்பிக்கப் பட்டது.

பலநாள் இழுத்தடித்து கடைசியாக அனுமதி மறுத்தது, போலீசு. இதை அம்பலப்படுத்தி சுவரொட்டி ஒட்டப்பட்டது. ஆர்ப்பாட்டம் - பொதுக் கூட்டத்திற்கு அச்சிட்ட 6000 துண்டுப் பிரசுரங்கள் மக்களிடமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் நடத்திய பொன் விழா வளாகத்திலும் கருப்புக் கொடி அணிந்து விநியோகிக்கப்பட்டது. 'போலி சுதந்திரத்திற்கு பொன் விழா ஒரு கேடா'? என்ற தலைப்பில் 200 சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

ஒரு பகுதியில் சுவரொட்டி ஒட்டும் போது அங்கு வந்த காவல் நிலைய ஆய்வாளர் சங்கரன் 50 சுவரொட்டிகளைப் பறித்துச் சென்றார்.

குடந்தையில், தோழர் சம்புகன் தமது வீட்டில் 'புரட்சியாளன் பகத் சிங் நினைவு செய்தி முரசகம்' எனத் தகவல் பலகை வைத்துள்ளார். ஆகஸ்ட் 15 ஐ அம்பலப்படுத்தி துக்கநாள் என எழுதியதை 5.6 காவல் துறையினர் வந்து செய்தியை அழித்து, பலகையையும் கழற்றி கீழே போட்டனர். கருப்புக் கொடி கட்டியிருந்ததை அறுத்து எடுத்துச் சென்றனர்.

# குடியிருப்புப் பகுதியை விழுங்கக் காத்திருக்கும் நெய்வேலி - நிலக்கரி கழக நிர்வாகம்!

நெய்வேலியில் தாண்டவராயன் குப்பம், வட்டம் 21,30 ஆகிய பகுதிகள் பெரும்பாலும் ஒப்பந்தக் கூலி மற்றும் கூட்டுறவுத் தொழிலாளிகளின் குடியிருப்புப் பகுதி. இத்தொழிலாளிகள் வேலை செய்யவில்லை எனில், தமிழகமே இருளில் மூழ்கும். ஆனால் இவர்களின் வசிப்பிடமோ கழிப்பறைகூட இன்றி இருளில் கிடக்கிறது.

அடிப்படை வசதி கோரி 17.10.96-ல் ஆர்ப்பாட்டம் செய்த போது, கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி கூறினார், நிலக்கரிச் சுரங்க நிர்வாகப் பொது மேலாளர் கலிய பெருமாள். இன்று வரை வசதிகள் நிறைவேற்றப்படவில்லை.

இதற்கிடையே சுரங்க விரிவாக்கம் எனக் கூறி, பொது மக்கள் கழிப்பிடமாகப் பயன்படுத்தி வந்த பகுதியைச் சுற்றி சுவர் எழுப்பி ஆக்கிரமிக்க முயன்றது நிர்வாகம். அடிப்படை வசதியும் செய்யாமல், இருப்பதையும் தட்டிப் பறித்தால் மக்கள், குறிப்பாக பெண்கள் என்ன செய்வார்கள் என்ற அறிவு கூட அதிகாரிகளுக்குக் கிடையாது.

புரட்சிகர அமைப்பான தொழிலாளர் பிரச்சாரக் குழு நிர்வாகத்தின் இந்த அடாவடித்தனத்திற்கு எதிராக 18.8.97-ல் கண்டன சுவரொட்டிகள் ஒட்டிய பின், 20.8.97-ல் சாலை மறியல் நடத்தியது.

சாலை மறியலை முறியடிக்க மத்திய தொழிற் பாதுகாப்புப் படையும் நிர்வாகமும் செய்த கூட்டுச் சதி முறியடிக்கப்பட்டது. போக்குவரத்து ஊழியர்கள் உட்பட எல்லா தரப்பினரின் ஆதரவுடன் மறியல் வெற்றிகரமாகத் தொடர்ந்தது.

மறியலுக்கு தலைமை தாங்கிய தோழர்களைக் கைது செய்ய போலீசு முயன்ற பொழுது, பெண்கள் அதை எதிர்த்து முழக்கமிட்டு, தங்களைக் கைது செய்யும்படி கூறவே போலீசு பின்வாங்கியது.

வேறு வழியறியாத நகர நிர்வாக அதிகாரி ஒருவர் வந்து சுவர் எழுப்புவதை கைவிடுவதாகவும், மேற்கொண்டு பேச நகர அலுவலகம் வரச் சொன்னார். மக்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் மக்களில் சிலரும், தொ.பி.கு. தோழர்களில் சிலரும் பேசச் சென்றனர்.

சுவர் கட்டுவதைக் கைவிடுவதாகவும் குடிநீரில் சாக்கடை கலப்பதைச் சீர் செய்வதாகவும் ஏற்றுக் கொண்டனர். குடியிருப்புகளை அகற்றக் கூடாது எனப் பேசும் போது, 'அது பற்றி முதல்வருக்கு தகவல் தந்துவிட்டோம். குடியிருப்பை அகற்ற உத்தரவு வந்தால், அகற்றுவோம்' என அக்கோரிக்கையை நிராகரித்தது. கடந்த பேச்சு வார்த்தையின் போது "இப்படி செய்ய மாட்டோம்" என உறுதி கூறியதை சுட்டிக் காட்டி மறுத்த போது, வெளியே போகச் சொல்லி அவமானப்படுத்தினர்.

தற்போதுள்ள குடியிருப்பை அகற்றுவது என்றால் நகரிலேயே எல்லா அடிப்படை வசதிகளுடன் மாற்று குடியிருப்பு வழங்கினால் மட்டுமே இது சாத்தியம். இல்லை எனில் சுரங்க உற்பத்தியே நிலைகுலையும் படியான மாபெரும் போராட்டம் வெடிக்கும்.

தகவல்:
தொழிலாளர் பிரச்சாரக் குழு, நெய்வேலி.



படிப்பகம்

# தீனி போதவில்லையென யானை குமுறுகிறது

மைய அரசு ஊழியர்களின் சம்பள உயர்வுக்குப் பரிந்துரைத்த ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கையினை குஜ்ரால் அரசாங்கம் ஏற்றுக் கொண்டு விட்டது. மேலும், இவ்வூதிய உயர்வினை, பின் தேதியிட்டு, '96 சனவரி 1 தொடங்கியே நடைமுறைப்படுத்தவும் ஐ.மு. அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது. வழமை போலவே ஐந்தாவது ஊதியக் குழுவும் உயர் அதிகாரிகளுக்கு — குறிப்பாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு வாரிக் கொடுத்துவிட்டு, அடிமட்ட ஊழியர்களுக்குப் பட்டை நாமம் சாத்தியுள்ளது.

ஐந்தாவது ஊதியக் குழுவின் சிபாரிசின்படி, மைய அரசின் கீழ் மட்ட ஊழியர்களுக்கு 20 முதல் 40 சதவீதம் வரை ஊதிய உயர்வு கிடைக்கும். அதே பொழுதில், அரசுத் துறைச் செயலாளர் மற்றும் இணை - துணைச் செயலாளர் தகுதியில் பணிபுரியும் 'ஏ' பிரிவு அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு 130 சதவீதம்.

உதாரணமாக, 18,600 ரூபாய் மாதச் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்த அரசுத்துறைச் செயலாளர், ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி இனி ரூ. 26,000/- அடிப்படை ஊதியமாகப் பெறுவார்; ரூ. 10,280/- படிகளாக வழங்கப்படும். இதோடு, இவருக்கு அரசினால் வழங்கப்படும் ஐந்து படுக்கை அறை கொண்ட வீடு, தனிச் செயலாளர்கள், கார், அதன் ஓட்டுநர், வீட்டு வேலையாட்கள், தொலைபேசி, மருத்துவ வசதி, உல்லாசப் பயணச் செலவு போன்ற சலுகைகளையும் சேர்த்தால், இவரது மாதச் சம்பளத்தின் மதிப்பு தோரயமாக ரூ. 1,25,000/-ஐத் தொட்டுவிடும். ரூ. 22,400/- சம்பளம் பெறப்போகும் கூடுதல் செயலாளர், சலுகைகளையும் சேர்த்து ரூ. 55,250/- பெறுவார். இணைச் செயலாளர்கள் சம்பளம் (ரூ. 10,400) மற்றும் சலுகைகளைச் சேர்த்து ரூ. 44,250/- பெறுவர்.

மத்திய அரசின் கீழ் பணியாற்றும் 38.7 இலட்சம் ஊழியர்களில், 1.5 சதவீதம் உள்ள 'ஏ' பிரிவு அதிகாரிகள்தான், இவ்வூதிய உயர்வுக்காக மைய அரசு கூடுதலாகச் செலவிடவுள்ள 11,250 கோடி ரூபாயில் மிகப் பெரும் பங்கை விழுங்கப் போகிறவர்கள். பன்னாட்டு மற்றும் தேசங்கடந்த தொழிற்கழகங்களின் அதிகாரிகளுக்கு இணையாக, இந்த உயர் அதிகாரிகளின் சம்பளத்தையும், சலுகைகளையும் கூட்டியுள்ளது, மைய அரசு.

முதலாளித்துவ பொருளாதாரத்தின் கீழ் பண வீக்கம், விலைவாசி உயர்வு காரணமாக ஊதிய உயர்வு தவிர்க்க முடியாதெனினும், அரசு இயந்திரம் தேவையற்ற விதத்தில் ஊதிப் பெருக்கப்பட்டிருப்பதும், அதிகார வர்க்கத்தின் ஊதாரிச் செலவுகளும் இந்திய மக்களின் மீது மிகப்பெரும் சுமையாக அழுந்தி நிற்கிறது.

தாராளமயமாக்கலைத் தொடங்கி வைத்த பொழுது, இனி அரசு இயந்திரம் ஊதிப்பெருப்பது தேவையற்றதாகிவிடும் என்றார்கள். ஆனால், இலாபத்தோடு நடந்த உற்பத்தி சார்ந்த தொழில்களைத்தான் அரசு கைகழுவியதே தவிர, இந்த வெள்ளை யானையைத் தொடவில்லை. ஐந்தாவது ஊதியக் குழு 3.5 இலட்சம் பதவிகளை ஒழிக்கப் பரிந்துரைத்துள்ளது. இதை ஏற்றுக் கொண்டுள்ள மைய அரசு ரெயில்வே, தொலைபேசித் துறை போன்ற உற்பத்தி சார்ந்த தொழிலகங்களிலும், அரசு அலுவலகங்களிலும் உள்ள கீழ்நிலைப் பதவிகளைத் தான் ஒழிக்கப் போகிறதேயன்றி, அதிகார வர்க்கப் பதவிகளையல்ல.

நிதித்துறையின் பிரதானப் பணியே வரவு-செலவு அறிக்கையைத் தயாரிப்பதுதான். கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக உலக வங்கியின் உத்தரவுப்படிதான் நமது நாட்டின் வரவு-செலவு அறிக்கை தயாரிக்கப்படுகிறது. அவன் சொல்லுவதைக் குறிப்பெடுத்துக் கொள்ளுவதைத் தவிர, மூளையைக் கசக்கிப் பிழியும் வேலை எதுவும் இங்கு கிடையாது. கணனி யுகத்தில் குறிப்பெடுப்பது கூடத் தேவையற்றதாகிவிட்டது. ஆனாலும் நிதித்துறையில் செயலாளர் தகுதியில் 25 அதிகாரிகள் குப்பை கொட்டுகின்றனர்.

• கடந்த இரு மாதங்களுக்கு முன்பு "உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம்" என்ற புதிய அமைச்சகத்தைத் துவங்கியது, மைய அரசு. இந்த அமைச்சக அதிகாரிகளுக்கு தினமும் பதினைந்து நிமிட நேரத்திற்குக் கூட வேலை இருப்பதில்லை.

• தகவல் - ஒளிபரப்புத் துறை அமைச்சகத்தில் பாட்டு மற்றும் நாடகப் பிரிவு ஒன்று உள்ளது. இதன் முழு நேரப் பணியே இராணுவ அதிகாரிகளின் முன் ஆடிப்பாடி, அவர்களை மகிழ்விப்பதுதான். இதற்காக 10 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. இப்படி மக்களின் வரிப்பணம் ஊதாரித்தனமாகச் செலவழிக்கப்படுவதற்கு அநேக உதாரணங்களைக் கூறலாம்.

புதிய அமைச்சகங்கள், துறைகள், மாவட்டங்கள், நிர்வாகக் கமிட்டிகளை அமைத்து, புதிய புதிய அதிகார வர்க்கப் பதவிகளை உருவாக்குவது, தான் விரும்பும் அதிகாரிக்கு பதவி உயர்வு தர வேண்டும் என்பதற்காகவே ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளை உருவாக்குவது - இப்படித்தான் அதிகார வர்க்கம் ஊதிப் பெருக்கிறது. 1962-ல் மைய அரசில் 35 அமைச்சகங்கள் இருந்தன; இன்று அமைச்சகங்களின் எண்ணிக்கை 81. 1948-ல் எட்டாக இருந்த அரசுத் துறைச் செயலாளர்களின் எண்ணிக்கை இன்று 170.

இன்னொருபுறம் அரசு இயந்திரத்தின் நேரடி அடக்குமுறைக் கருவிகளான இராணுவம் மற்றும் போலீசின் 'வளர்ச்சி'. இந்த ஆண்டு இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு 27,798 கோடி ரூபாய்; இத்தொகை கடந்த ஆண்டைவிட 919 கோடி ரூபாய் கூடுதலாகும். அண்டை நாடான பாகிஸ்தானின் அச்சுறுத்தல், வடகிழக்கு மற்றும் காஷ்மீரில் நடந்துவரும் தேசிய இனப் போராட்டங்களைக் காட்டி இவ்வளர்ச்சி நியாயப்படுத்தப்படுகிறது.

மதக் கலவரங்கள், சாதி மோதல்கள் போன்ற உள்நாட்டுப் பிரச்சினைகளை அரசியல் ரீதியாகத் தீர்த்திட வக்கற்றுப் போய், இதை ஒடுக்க அதிரடிப் படைகளையும், கமோண்டா படைகளையும் உருவாக்கி வருகின்றனர். ஓட்டுக்கட்சித் தலைவர்களின் வெல்லக்கட்டி உயிரைப் பாதுகாக்கும் சிறப்புப் பாதுகாப்புப் படையும், தேசியப் பாதுகாப்புப் படையும் 100 கோடி ரூபாயை விழுங்கி வருகின்றன. "ரா" என்ற உளவுத் துறையின் செலவுகளைப் பாராளுமன்றம்கூடக் கேட்க முடியாது. சுருக்கமாகச் சொன்னால், மக்களின் வரிப்பணத்தில் கணிசமான பகுதியை இராணுவம், போலீசு, அதிகார வர்க்கம் மூன்றும் தின்று தீர்த்து விடுகின்றன.

அரசு இயந்திரம் ஊதிப் பெருத்து வருவதை எதிர்ப்பது கீழ்மட்ட ஊழியர்களின் நலனுக்கு விரோதமானதல்ல. மைய அரசு, தனது ஊழியர்களின் சம்பளத்திற்காக இந்த ஆண்டின் வரவு-செலவு கணக்கில் 19,810 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. ஐந்தாம் ஊதியக் குழுவின் பரிந்துரைகளால் இது மேலும் 11,250 கோடி உயரப் போகிறது. வரவு-செலவுப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி மக்கள் நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை குறைத்துக் கொள்ளும் அரசு, தனது ஊழியர்கள் விசயத்தில் மட்டும் தாராளமாக நடந்து கொள்கிறதே! ஏன் இந்த முரண்நிலை? சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பதன் மூலம், நுகர் பொருளுக்கான பரந்து விரிந்த சந்தையினைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளுகிறார்கள் என்பதுதான் உண்மை.

அதே பொழுதில் இக்கூடுதல் செலவை மீண்டும் வரி விதித்தும், அத்தியாவசியப் பொருட்களின்/சேவைகளின் விலைகளையும்/கட்டணங்களையும் உயர்த்திதான் ஈடு செய்து கொள்வார்கள். அரசு இயந்திரம் மக்களை ஒட்டச் சுரண்டும் கோடிக்கால் பூதமாக எழுந்து நிற்கிறது. கீழ்மட்ட அரசு ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரிப் போராடுவதால் மட்டும், இச்சுரண்டல் - ஒடுக்கு முறையில் இருந்து தப்பிவிட முடியாது.

• ரஹீம்

www.padippakam.com

## சுற்றுச்சூழல் பிரச்சினை

# கழிப்பறைத் தாள்களாக நீதிமன்றத் தீர்ப்புகள்



**சின்னப்பன்** வட ஆற்காடு வேலூர் மாவட்டம் வன்னிவேடு கிராமத்தைச் சேர்ந்த சிறு விவசாயி. 15 ஆண்டுகளுக்கு முன்பு அவர் தனது 3 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்து வந்தார். அவரது குடும்பமும் கிராமமும் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வந்தன. தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்து வந்த சின்னப்பன் குடும்பத்தாருக்கும், வன்னிவேடு கிராமத்தினருக்கும் விவசாயம் என்பது இன்று வேதனை நிறைந்த பழைய நினைவாகி விட்டது. வன்னிவேடு கிராமத்திற்கு அருகே இராணிப்பேட்டையில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தோல் பதனிடும் ஆலைகளின் நச்சுக் கழிவு நீரால், இக்கிராமத்தின் நிலங்கள் விவசாயம் செய்ய முடியாதபடி பாழ்பட்டு, இரசாயன உப்பு பூத்துக் கிடக்கின்றன. ''எங்கள் கிராமத்தில் மட்டும் 145 ஹெக்டேர் நிலங்கள் பாழாகி விட்டன'' என்று வேதனையுடன் கூறுகிறார், 70 வயதாகும் சின்னப்பன்.

இராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி, வாலாஜாபாத், பேர்ணாம்பட்டு முதலான ஊர்களில் உள்ள 500-க்கும் மேற்பட்ட தோல் பதனிடும் நிறுவனங்களால், வன்னிவேடு கிராமத்தைப் போலவே நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பிராந்தியத்தில் விவசாயம் செய்ய முடியாமல் நிலம் பாழானதோடு நிலத்தடி நீரும் நஞ்சாகி, இப்பகுதியின் ஊடே செல்லும் பாலாறும் கழிவு நீரோடையாகி விட்டது. இப்பிராந்தியத்தில் மட்டும் 35,000 ஹெக்டேர் நிலங்கள் பாழாகியுள்ளதாக மாவட்ட நிர்வாகமே ஒப்புக் கொண்டுள்ளது.

விவசாய நிலங்களைப் பாழாக்கி, விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறித்து, சுற்றுச் சூழலையும் நஞ்சாக்கி வரும் தோல் பதனிடும் நிறுவனங்களுக்கு எதிராக, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக வேலூர் குடிமக்கள் நல்வாழ்வுச் சங்கம் வழக்கு தொடுத்து நீதிமன்றங்களில் போராடி வந்தது. இதையடுத்து, கடந்த 1995-ஆம் ஆண்டு மே-1-ந்தேதியன்று 57 தோல் பதனிடும் நிறுவனங்களை மூடிவிடுமாறு உச்சநீதி மன்றம் உத்திரவிட்டது. மற்ற நிறுவனங்கள் நச்சுக் கழிவுநீரை பதப்படுத்தியும், சுத்திகரித்தும் வெளியேற்ற வேண்டும் என காலக்கெடு விதித்தது.

அதன்படி, குறிப்பிட்ட 57 நிறுவனங்கள் மூடப்பட்டன. ஆனால் நச்சுக் கழிவு நீரைப் பதப்படுத்தி வெளியேற்ற வேண்டுமென போடப்பட்ட உத்தரவு கிடப்பில் போடப்பட்டது. ஒரு சில தோல் பதனிடும் நிறுவனங்களைத் தவிர, பெரும்பாலான நிறுவனங்கள் சுத்திகரிப்பு நிலையங்களையே அமைக்கவில்லை. அப்படி சுத்திகரிப்பு நிலையம் அமைத்தாலும் அவற்றை இயக்குவதுமில்லை. சில நிறுவனங்கள், நச்சுக் கழிவு நீரை லாரிகளில் ஏற்றிச் சென்று கடலில் கொட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்களை நியமித்துள்ளதாகக் கணக்கு காட்டுகின்றன. அரைகுறையாக சுத்திகரித்து அவற்றோடு நச்சுக் கழிவு நீரையும் சேர்த்து வெளியேற்றுவது, மழைக் காலங்களில் நச்சுக் கழிவு நீரை மழைத் தண்ணீரோடு சேர்த்து வெளியேற்றுவிடுவது என்பதாகத் தோல் பதனிடும் நிறுவனங்களின் அடாவடித்தனங்கள் தொடரவே செய்கின்றன.

தண்ணீர் மாசு தடுப்புச் சட்டம், காற்று நஞ்சாவதைத் தடுக்கும் சட்டம், சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம், தமிழக அரசின் ஆலைகள் குறித்த சட்டம், நகராட்சி - பஞ்சாயத்துகளின் கட்டுப்பாடு - நெறிமுறைகள் எனக் கணக்கற்ற சட்டங்கள் இருந்த போதிலும், அவை வெறும் காகிதச் சட்டங்களாகவே நீடிக்கின்றன. தோல் நிறுவன அதிபர்களிடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு, அதிகார வர்க்கம், சட்டங்களைக் கிடப்பில் போடுவதுதான் தொடர்கிறது. கடைசியில், போராடிப் பெற்ற உச்சநீதி மன்றத் தீர்ப்பு இன்று செல்லாக் காசாகி விட்டது.

★☆★

சென்னை விமான நிலையம் அருகிலுள்ள திரிசூலம் பாறைக் குன்றுப் பகுதியின் பின்புறத்தில் கல் உடைக்கும் குவாரிகள் ஏராளமாக உள்ளன. ஏறத்தாழ 80-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளன. ஏராளமான வருமானமுள்ள தொழில் என்பதால் பல பெரிய அரசியல் புள்ளிகளும், அதிகாரிகளும் இதில் பினாமியாக உள்ளனர்.

கல் உடைத்தல், சிறு ஜல்லிகளாக்குதல், லாரிகளில் ஏற்றுதல் முதலானவற்றால் தூசும் புழுதியும் பெருகி இப்பகுதியின் சுற்றுச் சூழல் கெடுவதோடு, அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளிலுள்ள மக்களும் பாதிக்கப்பபட்டனர். பகுதிவாழ் மக்களும், சுற்றுச் சூழல் அமைப்புகளும் நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்த பிறகு, இப்பகுதியில் கல் உடைப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கடந்த ஜனவரியில் உச்சநீதி மன்றம் உத்திரவிட்டது. அதன்படி, குவாரிகள் அனைத்தும் மூடப்பட்டன.

ஆனால், அடுத்த சில மாதங்களிலேயே நீதிமன்ற உத்திரவு காற்றில் பறக்கவிடப்பட்டது. மீண்டும் குவாரிகள் செயல்படத் தொடங்கின. பகலில் வேலைகள் நடந்தால் அம்பலமாகிவிடும் என்பதால், இரவு நேரங்களில் குவாரிகள் இயங்கின. இதை சில பத்திரிகைகள் அம்பலப்படுத்திய பிறகு, தற்காலிகமாக இயந்திரங்களின் இயக்கம் நிறுத்தப்பட்டது. பின்னர் மீண்டும் இப்போது இத்தொழில் கள்ளத்தனமாகத் தொடர்கிறது. கிரஷர்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கான கொட்டகைகள் இப்பகுதியிலேயே உள்ளதால், அவற்றுக்கான மின் இணைப்பைக் கொண்டே கல் உடைக்கும் இயந்திரங்களை முதலாளிகள் இரகசியமாக இயக்குகின்றனர். நீதிமன்றத் தீர்ப்புப்படி, இயந்திரங்களுக்கான மின் இணைப்பைத் தான் துண்டிக்க முடியும்; தொழிலாளர் கொட்டகையின் மின் இணைப்பைத் துண்டிக்க உத்தரவு ஏதுப் கிடையாது என்று அதிகாரிகள் இந்த அயோக்கியத்தனத்துக்குத் துணை நிற்கிறார்கள்.

கடைசியில் உச்நீதி மன்றத் தீர்ப்பு கு
பைக் கூடையில் வீ
யெறியப்பட்டு, அ
கார வர்க்கத்தின் ஆத
வோடு மீண்டும் இரக

வன்னிவேடு கிராமத்தில் தோல் பதனிடும் நிறுவனங்களின் நச்சுக் கழிவு நீரால் பாழான விளை நிலங்கள்







படிப்பகம்

www.padippakam.com



யமாகக் கல் குவாரிகள் செயல்படவே செய்கின்றன. இப்போது மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்களுடன் கூடிய கல் உடைக்கும் எந்திரங்களை நிறுவியுள்ளதாகக் கூறிக் கொண்டு, குவாரி முதலாளிகள் குழு ஆட்சியாளர்களுடன் பேரங்கள்-பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது. நாளை இந்நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

★☆★

ஆகஸ்டு 15, போலிச் சுதந்திரத்தின் பொன்விழாவை ஆட்சியாளர்கள் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். அந்நாளை, கிழக்குக் கடற்கரையை ஒட்டியுள்ள மீனவர்களும் விவசாயிகளும் வித்தியாசமாகக் கொண்டாடினார். மே.வங்கம், ஒரிசா, ஆந்திரா மற்றும் தமிழக விவசாயிகளும் மீனவர்களும் அந்நாளில் இறால் பண்ணைகளை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்ததோடு, சில இடங்களில் அழிக்கவும் செய்தனர். ''விவசாயிகளின் மீனவர்களின் வாழ்வுரிமையைப் பறிக்காதே! இறால் பண்ணைகளை அனுமதிக்காதே!'' என்ற முழக்கத்துடன் அவர்களது போராட்டம் தொடர்கிறது.

இறால் பண்ணைகளால் காவிரியின் கடைமடைப் பகுதியான நாகை மாவட்டம் நாசமாகியது. நெல் உற்பத்திக்குப் பேர் போன ஆந்திராவின் நெல்லூர் வட்டாரம் இன்று இறால் பண்ணைகளால் பாலைவனமாகி வருகிறது. ஒரிசாவின் கடற்கரையோர கிராமங்களில் இறால் பண்ணைகளால் நிலத்தடி நீர் உப்பாக மாறி, குடிநீர் தட்டுப்பாடு தீவிரமாகி, ஒரு குடம் தண்ணீரை ரூ. 2-க்கு வாங்க வேண்டிய அவலம் நீடிக்கிறது. விவசாயிகளோ பிழைக்க வழியின்றி கிராமங்களை விட்டு வெளியேறுகின்றனர்.

இத்தனைக்கும், கடற்கரையிலிருந்து அலை ஓங்கி வீசும் கரையிலிருந்து) 500 ீட்டர் தொலைவுக்குள் உள்ள இறால் பண்ணைகள் அனைத்தையும் மூட வேண்டுமன்று உச்சநீதி மன்றம் கடந்த ஆண்டு டிசம்ர் 11-ந் தேதி உத்திரவிட்டுள்ளது. தமிழகத்ல் இறால் பண்ணைகளுக்கு எதிரான ாாராட்டங்கள் முன்னேறியபோது, சர்வோ ப இயக்கத் தலைவ ன செகன்னாதன் ாடுத்த பொது நல ழக்கின் அடிப்படை ் நீதிமன்றம் இவ் று உத்திரவிட்டது. னால் இறால் ணை முதலாளிக ளும், அதிகார வர்க் காலும் நீதிமன்ற உத் வு கழிப்பறைக் காகி கி, இன்று செகன் தன் தலைமையிலான இயக்கத்தினரும் விவசாயிகளும் இறால் பண்ணைகளை அழிக்கும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.



திரிசூலம் கல்குவாரியில் சட்ட விரோதமாக நடக்கும் கல் உடைப்புத் தொழில்

அலை ஓங்கி வீசும் கரையைத் தெளிவாக வரையறுக்க முடியாது என்று கூறிக் கொண்டு, விவசாய நிலங்களுக்கு அருகிலேயே இறால் பண்ணைகளை அமைப்பதாக நிலைமை மாறிவிட்டது. தமிழகத்தைவிட மூன்று மடங்கு அதிகமாக இறால் பண்ணைகள் ஆந்திராவில் இவ்வாறு நிறுவப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றுவதிலோ, விவசாயத்தை நாசமாக்கும் இறால் பண்ணைகளை ஒழிப்பதிலோ ஆட்சியாளர்களுக்கு எள்ளளவும் அக்கறை கிடையாது. நீதிமன்றப் பரிந்துரையைத் தொடர்ந்து, இறால் பண்ணை ஆணையக மசோதா அவசரமாக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு, இரு அவைகளிலும் உடனே நிறைவேற்றப்பட்டது. எத்தனையோ முக்கியமான மசோதாக்கள் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் காத்திருக்கும் போது, ஓட்டுப் பொறுக்கிகள் இறால் பண்ணை மசோதாவை நிறைவேற்றுவதில் மட்டும் தீவிரம் காட்டினர். அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையிலேயே, இறால் பண்ணை ஆணையகம் இன்னமும் ஆய்வு, களப்பரிசோதனை என்று இழுத்தடிக்கிறதே தவிர, எந்தவொரு பண்ணை மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதற்கிடையே, இந்திய இறால் பண்ணை நிதி ஏற்பாட்டு மையம் எனும் அமைப்பு, ஆணையக அதிகாரிகளுடன் பேரங்கள்-பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது. இறால் பண்ணைகளால் எந்த ஆபத்தும் இல்லை என்று பொய்யான ஆதாரங்களுடன் ஓயாமல் பிரச்சாரம் செய்து வருகிறது. அதன் பசப்பு மொழிக்கும், நிர்பந்தங்களுக்கும் பணிந்து போகும் வகையில் தான் அதிகார வர்க்கம் உள்ளது. ஏனெனில், பன்னாட்டு நிறுவனங்களும், தரகுப் பெரு முதலாளிகளும் கையில் பணப் பெட்டியுடன் அலைந்து கொண்டிருக்கின்றன. ஓட்டுப் பொறுக்கிகளையும், அதிகாரிகளையும் விலைபேசி சட்டத்தை தமக்குச் சாதகமாக மாற்றுவதில் குறியாக உள்ளன. சுற்றுச் சூழலை நஞ்சாக்குவது மட்டுமல்ல; அரசியல் வாழ்வே ஊழல் மலிந்ததாக மாறிவிட்டதற்கு இறால் பண்ணைகளும் ஒரு காரணமாகிவிட்டன.

★☆★

சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான நீதிமன்ற உத்தரவுகள் குப்பைக் கூடையில் வீசப்பட்டதற்கு இவை சில உதாரணங்கள்தான். இன்னும் திருப்பூர் சாயப்பட்டறைகள், புகலூர் காகித ஆலைக் கழிவுகள், ஆலைப் புகை, இரசாயன ஆலைகள், ஆற்று மணல் அள்ளிச் செல்லுதல், கிரானைட் கல் வெட்டுதல், காடுகளில் மரம் வெட்டுதல் முதலான பல்வேறு விவகாரங்களில் நீதிமன்றங்கள் அளித்த உத்தரவுகள் அனைத்தும் இன்று செல்லாக் காசாகி நிற்கின்றன.

**சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்காகப் போராடிப் பெற்ற நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர்களின் வாழ்வில் பாதகமான எதிர் விளைவுகளைத்தான் ஏற்படுத்தியுள்ளன; இதற்கு முதலாளிகளும் அதிகாரிகளும்தான் பொறுப்பேற்க வேண்டும்.**

மறுபுறம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு விவகாரத்தில் தாங்கள் மிகவும் அக்கறை கொண்டவர்களாக காட்டிக் கொண்டு ஆட்சியாளர்கள் நாடகமாடத் தவறுவதில்லை. 1992-ல் ரியோவில் நடந்த புவியியல் - சுற்றுச்சூழல் உச்சி மாநாட்டுக்குப் பிறகு, நச்சு ஆலைகளை

www.padippakam.com



1993-க்குள் மூட வேண்டுமெனச் சுற்றுச்சூழல் அமைச்சகம் பரபரப்பாக உத்திரவிட்டது. 1995-ல் தேசிய சுற்றுச்சூழல் நடுவர் மன்றம் அமைக்கும் மசோதா நிறைவேற்றப்பட்டது. இது தவிர, மாவட்டந்தோறும் மாசு கட்டுப்பாடு வாரியங்கள் அமைக்க மத்திய-மாநில அரசுகள் தீர்மானித்தன. மக்களிடம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளிக் குழந்தைகளைக் கொண்டு பல மாநிலங்களில் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

இன்னொருபுறம், மகேஷ்சந்தர் மேத்தா என்ற சுற்றுச்சூழல் செயல்வீரருக்கு பிலிப்பைன்ஸ் நாட்டின் மகசேசே விருது அளிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அரசும் பத்திரிகைகளும் பாராட்டு மழை பொழிகின்றன. இவர் ஆலைப் புகையால் தாஜ்மஹால் பாதிக்கப்படுவதற்கு எதிராகவும், கங்கை-யமுனை ஆறுகளில் நச்சுக் கழிவுகளைக் கலப்பதற்கு எதிராகவும் போராடியவர். அண்மையில் டெல்லியிலுள்ள 164 நச்சுக் கழிவு ஆலைகளை மூடச் செய்வதில் வெற்றி கண்டவர். ஆலைகள் மூடப்பட்டனவே தவிர, அவற்றில் பணியாற்றிய 30,000 தொழிலாளர்களுக்கு நீதிமன்ற உத்திரவுப்படி ஊதியமோ, நிவாரணமோ தரப்படவில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் பட்டினியால் தற்கொலை செய்து கொள்வதுதான் தொடர்கிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காகப் போராடிப் பெற்ற நீதிமன்ற உத்தரவு, இப்படி எதிர்விளைவுகளை ஏற்படுத்தியதற்கு முதலாளிகளும் அதிகாரிகளும் தான் காரணம். சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான போராட்டத்தையே இது கொச்சைப்படுத்தி, சிறுமைப்படுத்தி விட்டதோடு, தொழிலாளர்களின் வாழ்வையும் சூறையாடி விட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து, இந்தியாவில் படையெடுத்து வரும் பன்னாட்டு நிறுவனங்கள் இயற்கை வளங்களைச் சூறையாடுவது, நச்சுக் கழிவு ஆலைகளை நிறுவுவது, இந்தியாவை ஏகாதிபத்தியங்களின் குப்பைத் தொட்டியாக்குவது என்பதாக அவற்றின் ஆதிக்கமும், சுற்றுச்சூழல் நஞ்சாவதும் தீவிரமாகி வருகிறது. ஸ்டெர்லைட், டூபாண்ட் முதலான நச்சு ஆலைகளுக்கு அரசே ஆதரவாக நிற்கிறது. இந்நிலையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த உச்சநீதி மன்றத் தீர்ப்புகளும், உத்தரவுகளும் வளைத்து முறுக்கப்பட்டு அதிகார வர்க்கத்தாலும் முதலாளிகளாலும் கிழித்தெறியப்படுகின்றன. உச்சநீதி மன்ற உத்தரவுக்கே இந்தக் கதியென்றால், இதற்கு மேல் எங்கே போய் முறையீடு செய்ய முடியும்? சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காகவும் தமது வாழ்வுரிமைக்காகவும் போராடிவரும் உழைக்கும் மக்கள், தாங்களே புதிய தீர்ப்பு எழுதுவதும் அதை தாங்களே நடைமுறைப்படுத்துவதையும் தவிர இனி வேறு வழியில்லை.

• மாரி

## தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளில் பிளவு - பிழைப்புவாதம் - சீர்குலைவு

# மீள்வது எப்போது?

நாடு 'சுதந்திர'மடைந்து பொன்விழா கொண்டாடவிருந்த தருணத்தில், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கே.ஆர். நாராயணன் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுதில், தமிழ்நாட்டில் மதுரைக்கு அருகே மேலவளவு கிராமத்தில், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த அக்கிராம பஞ்சாயத்துத் தலைவர் முருகேசன், மேல்சாதி வெறியர்களால் தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

• மகாராஷ்டிரா மாநிலம் - மும்பை நகரில் அம்பேத்கர் சிலைக்குச் செருப்பு மாலை அணிவித்து அவமதித்ததை எதிர்த்துப் போராட்டத்தில் குதித்த தாழ்த்தப்பட்டோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, பத்து பேரைக் காவு கொண்டது, பா.ஜ.க. - சிவசேனா அரசு.

• 'சுதந்திர' தினத்துக்கு இரு நாட்கள் முன்னதாக ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத் நகரில் தாழ்த்தப்பட்ட மாலா சாதியினர் நடத்திய ஊர்வலத்தின் மீது போலீசார் நடத்திய தாக்குதலில் இருவர் மாண்டு போயினர்.

• உ.பி.யில் ''தலித்'' தலைமையில் ஆட்சி நடந்தாலும், மே - ஜூன் இரு மாதங்களுக்குள் ஆறு தாழ்த்தப்பட்ட பெண்கள் கும்பலாகக் கற்பழிக்கப்பட்டனர்; தாழ்த்தப்பட்டவர்களுக்கு மாயாவதி அரசு வழங்கி வரும் நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்ள மேல் சாதி குடும்பமொன்று முயன்ற பொழுது நடந்த மோதலில், இரு தாழ்த்தப்பட்ட பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மற்றொரு பெண்ணின் இரு கைகளும் வெட்டி வீசியெறியப்பட்டன.

தாழ்த்தப்பட்டோர் மத்தியில் ஓரளவு விழிப்புணர்ச்சியும், அமைப்பு ரீதியாகவும் அணி திரட்டப்பட்டிருக்கும் இம்மாநிலங்களிலேயே இதுதான் நிலைமை என்றால், சமூக - பொருளாதார - அரசியல் ரீதியாக மிகவும் பின் தங்கியுள்ள பீகார், குஜராத், ம.பி., இராசஸ்தான் போன்ற மாநிலங்களில் நிலவும் மேல்சாதி ஒடுக்குமுறையைச் சொல்லி மாள முடியாது என்பது நிச்சயம்.

அதேபொழுதில் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் உருவாகிவரும் விழிப்புணர்வின் காரணமாக, இவ்வொடுக்குமுறைகளை அவர்கள் முன்பு போல மௌனமாகச் சகித்து வாழ விரும்பவில்லை. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் தேவர் சாதியினர் மீது பள்ளர் சாதியினர் தொடுத்து வரும் எதிர்த் தாக்குதலும், மும்பை நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டை அடுத்து, அம்மாநிலத்தில் மட்டுமல்லாது குஜராத் - கர்நாடகாவிலும் வெடித்து எழுந்த போராட்டங்களும் இதை நிரூபிக்கின்றன. தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் பலவாறு சிதறுண்டு கிடந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் இந்த எதிர்த் தாக்குதலுக்கு ஆதரவாகவும், அரசின், மேல் சாதி வெறியர்களின் தாக்குதல்களை அம்பலப்படுத்தியும் இயக்கங்களை எடுத்து வருகின்றன.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் மேல்சாதி வெறியர்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நியாயம் - நிவாரணம் கோரியும், தி.மு.க. அரசால் குண்டர் தடுப்புச் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரியும் 23.07.97 அன்று விடுதலைச் சிறுத்தைகளும், 06.08.97 அன்று தலித் கூட்டமைப்பும் பேரணி நடத்தின; இதே கோரிக்கைகளை வலியுறுத்தி 31.07.97 அன்று அம்பேத்கர் மக்கள் இயக்கம் உண்ணாவிரதம் இருந்தது; 14.08.97 அன்று இந்தியக் குடியரசுக் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இவ்வமைப்புகளிடையே பல முரண்பாடுகள் - வேறுபாடுகள் இருப்பினும், இக்குறிப்பான பிரச்சினைக்காகத் தங்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் தவறுகின்றன என்பது கசப்பான உண்மை. அரசு - அதிகார வர்க்கம் - போலீசின் துணையோடு தாக்குதல் நடத்தி வரும் எதிரியை, இப்படிச் சிதறுண்ட எதிர்ப்பு இயக்கங்களால் வீழ்த்தி விடலாம் என தாழ்த்தப்பட்டோர் இயக்கங்கள் நம்புமேயானால், அது பேதமையாகும்.

★☆★

தாழ்த்தப் பட்டோர் அமைப்புரீதியாக அணி திரட்டப்பட்டிருக்கும் இடங்களில் எல்லாம் சிறு சிறு குழுக்களாகப் பிளவுண்டு கிடப்பதும், புதுப்புது அமைப்புகளும், தலைவர்களும் தோன்றி மறைவதும் காணக் கிடைப்பது தான். இன்னும் சற்று நுணுக்கிப் பார்த்தோமேயானால், இவ்வமைப்புகளுள் ஒவ்வொன்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளுள் ஒன்றை மட்டுமே தம் பின்னே அணி திரட்டியிருப்பதையும், ஒரு சாதிக்கே ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகளும், தலைவர்களும் இருப்பதையும் காணலாம்.

அம்பேத்கரினாலும்கூட, மகாராஷ்டிராவில் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பல்வேறு பிரிவினரையும் ஒரே தலைமையில்



படிப்பகம்

www.padippakam.com



*மும்பை துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூற வந்த அத்வாலே, தாழ்த்தப்பட்ட இளைஞர்களால் ஓட ஓட விரட்டித் தாக்கப்பட்டார்: தாழ்த்தப்பட்ட மக்களை வெறும் ஏணியாகக் கருதும் தாழ்த்தப்பட்ட தலைவர்கள் உஷார்!*

கீழ் ஒன்று திரட்ட முடியவில்லை. தனது அமைப்பின் சமூக அடித்தளத்தை விரிவாக்கிக் கொள்ளவே, அம்பேத்கர் இந்தியக் குடியரசுக் கட்சியைத் துவக்கினார். ஆனாலும், மகாராஷ்டிராவில் வாழும் சம்பர், மாதங்க் சாதியினர் அம்பேத்கரைப் பின்பற்றவில்லை. மகர் சாதியினரிலும் புத்த மதத்துக்கு மாறிச் சென்றவர்களும், நடுத்தரவர்க்கப் பிரிவினரும்தான் அக்கட்சியில் பெரும்பாலும் உறுப்பினர்களாக ஆதரவாளர்களாக இருந்து வருகின்றனர். இன்று அக்கட்சி, தலைவர்களின் சுயநலன் - பதவி ஆசையால் நான்காகப் பிளவுபட்டுப் போயுள்ளது.

உ.பி.யில் அதிகாரத்தில் அமர்ந்துள்ள கன்சிராமின் பகுஜன் சமாஜ் கட்சியிலும், அம்மாநிலத்தைச் சேர்ந்த ஜாதவ் சாதியினர்தான் பெரும்பான்மையாக அணி திரட்டப்பட்டுள்ளனர். அம்மாநிலத்திலேயும் காங்கிரசு மற்றும் முலயம் சிங்கின் சமாஜ் வாதிக் கட்சியோடும் கூட்டணி வைத்துக் கொண்டுதான், கன்சிராம் தனது தேர்தல் வெற்றிகளைச் சாதித்துள்ளார்.

தமிழ்நாட்டில் கிருஷ்ணசாமி தலைமையில் இயங்கும் தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு, பல பள்ளர் சாதி சங்கங்கள் இணைந்து உருவானதாகும். இக்கூட்டமைப்பு தவிர, ஜான் பாண்டியன் (அகில இந்திய தேவேந்திர குல வேளாளர் இயக்கம்), பசுபதி பாண்டியன், குருசாமி சித்தரும் தென் மாவட்டப் பள்ளர்களின் தலைமையாகக் கூறிக் கொண்டு இயங்கி வருகின்றனர்.

தமிழ்நாட்டின் வடபகுதியில் வாழும் பறையர்களுக்கு இளைய பெருமாள் (அகில இந்திய மனித உரிமைக் கட்சி), வை. பாலசுந்தரம் (அம்பேத்கர் மக்கள் இயக்கம்), பூவை. மூர்த்தி (அம்பேத்கர் சிறுத்தைகள் விடுதலை முன்னணி), திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள்), சுந்தரராசன், சக்திதாசன், செ.கு. தமிழரசன் எனப் பல தலைவர்கள் உண்டு.

இவ்வமைப்புகள் தவிர, அகில இந்திய அம்பேத்கர் மக்கள் பேரவை, தலித் மக்கள் முன்னணி, இம்மானுவேல் இளைஞர் பேரவை, தலித் பெண்கள் கூட்டமைப்பு, தியாகி இம்மானுவேல் பேரவை, தமிழ்நாடு அருந்ததியர் ஜனநாயக முன்னணி எனப் பல அமைப்புகள் தாழ்த்தப்பட்டோரின் சமூக விடுதலைக்காக இயங்கி வருவதாகக் கூறி வருகின்றன.

★☆★

இவற்றுள் பெயர்ப் பலகை அமைப்புகள் தவிர்த்து, பிறவற்றின் பொதுவான நடைமுறை என்பது இட ஒதுக்கீடு போன்ற அரசு சலுகைகள் - கோரியும், தாழ்த்தப்பட்டோர் மேல்சாதி வெறியர்களால் தாக்கப்படும் பொழுதும் பேரணி - ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதுதான். தேர்தல் சமயத்திலோ பெரும்பாலான தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் எதிர் எதிரான ஓட்டுக் கட்சிகளின் கூட்டணியில் சங்கமமாகி விடுகின்றன.

அம்பேத்கர் சிறுத்தைகள் விடுதலை முன்னணி தலைவர் பூவை. மூர்த்தி, ஜெயாவின் காலில் விழுந்து எழுந்தது அவரது தொண்டர்களையே முகம் சுளிக்க வைத்தது. அம்பேத்கர் மக்கள் இயக்கத் தலைவர் வை. பாலசுந்தரம் தி.மு.க. கூட்டணியோடு உறவு வைத்துக் கொண்டுள்ளார். தாழ்த்தப்பட்ட மக்கள் நக்சல்பாரி அமைப்பில் இணைவதைத் தடுப்பதற்காகவே, எம்.ஜி.ஆர். - தேவாரம் கும்பலால் ஜான் பாண்டியன் தலைவராக உருவாக்கப்பட்டார்.

''தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் தங்களுக்குள் ஐக்கியப்பட்டு, தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த அடித்தட்டு மக்கள் மத்தியிலும் அமைப்பு கட்டி, அம்மக்களின் சமூக விடுதலைக்குக் கீழிருந்து போராடுவது என்பதற்குப் பதிலாக, மேலிருந்து கொண்டு வரப்படும் சட்டபூர்வ சீர்திருத்தங்களினாலேயே சமூக விடுதலையைச் சாதித்து விடலாம்'' எனப் பெரும்பாலான அமைப்புகள் நம்புவதுதான், அவற்றை ஓட்டுக் கட்சிகளின் வாலாகச் சீரழித்து விடுகிறது.

★☆★

எனினும், ஓட்டுச் சீட்டு அரசியல், தேர்தல், சட்டபூர்வ சீர்திருத்தங்களில் நம்பிக்கை கொள்ளாது, தாழ்த்தப்பட்டோர் தலைமையில் சாதி ஒழிப்புப் போராட்டம் / வர்க்கப் போராட்டம் நடத்துவதைத் தங்களது முதன்மையான திட்டமாகக் கொண்டு இயங்கும் அமைப்புகளும் உண்டு. விடுதலைச் சிறுத்தைகள், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் போன்ற அமைப்புகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

''இந்தியப் பார்ப்பனிய சாதிய வல்லரசியக் கட்டமைப்பை'' வீழ்த்துவதற்கு தாழ்த்தப்பட்டோர் தலைமைக்கு அறைகூவல் விடுக்கிறது, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம். ''இத்தலைமை தனிநபர் தலைமை அல்ல; இக்கட்டமைப்பை வீழ்த்துகிற அரசியல் தலைமை'' எனப் பொதுவான சுய விளக்கத்தைத் தருகிறது, அவ்வமைப்பு. ஆனால், இந்த அரசியலை வழி நடத்துகின்ற சித்தாந்தம் - கண்ணோட்டம் பற்றி மௌனம் சாதிப்பதன் மூலம், அவ்வமைப்பு தனிநபர் தலைமையைத் தான் முன் வைக்கிறது. பல்வகையான முதலாளித்துவ சித்தாந்தங்களால் வழி நடத்தப் பெறும் இந்தத் தனிநபர் தலைமை தோல்வியைத் தழுவியதற்கு அம்பேத்கர் தொடங்கி பலரையும் உதாரணம் காட்டலாம்.

திருமாவளவனின் தலைமையில் இயங்கும் தலித் சிறுத்தைகள் அமைப்பு, ''தலித் விடுதலைப் போராட்டத்தை தலித் தலைமையில் முதன்மையாகக் கொண்டு நடத்திய பின்தான் வர்க்கப் போராட்டம் நடத்த வேண்டும்'' எனக் கூறுகிறது. தீண்டாமை - சாதி ஒழிப்பிற்கும், இந்தியப் புரட்சிக்கும் இடையேயான இயங்கியல் உறவைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளதாகவே இதைக் கருதமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com

''தலித் விடுதலை'' பற்றி பல்வேறு தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும், பாட்டாளி வர்க்கப் புரட்சிகரத் தத்துவமான மார்க்சியத்தையும், அம்பேத்கர் - பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களையும் இடத்திற்குத் தகுந்தாற் போல் பேசிக் கொண்டு, தாழ்த்தப்பட்டோரின் சமூக விடுதலைக்கு ஒரு கலவையான பார்வையை முன் வைக்கின்றன.

★☆★

தாழ்த்தப் பட்டோர் அமைப்புகள் சாதி அடிப்படையிலும், தலைவர்களின் சுயநலன் - கௌரவம் காரணமாகவும் பிளவுண்டு கிடக்கும் வரை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒருங்கிணைந்த தலைமையாகப் பரிணமிக்க முடியாது. இந்த வெற்றிடத்தைப் பயன்படுத்திக் கொள்ள தன்னார்வக் குழுக்கள் பல வழிகளிலும் தொடர்ந்து முயன்று வருவது, தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமல்ல, இந்தியப் புரட்சியும் எதிர் கொள்ள வேண்டிய பேரபாயமாகும்.

''தலித் தலைமை'', ''தலித் அரசியல்'', ''தலித் பண்பாடு'', ''தலித்தியம்'' என்ற கோட்பாடு முழக்கங்களை முன் வைத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் அமைப்பு கட்டியும், தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளில் ஆலோசகர்கள் என்ற போர்வையிலும் ஊடுருவி வருகின்றன, அவை. தி.மு.க. - விலிருந்து வெளியேறி, இன்று தமிழகமெங்கும் பிரபலமாக அறியப்படும் கிருஷ்ணசாமியின் மந்திராலோசனைக் குழுவில் டி.எஸ்.எஸ். மணி போன்ற தன்னார்வக் குழுவின் தலைவர்களுக்கு இடமுண்டு. சில தலித் அமைப்புகள் தன்னார்வக் குழுக்களின் ''தலித் விடுதலை இயல்'' சித்தாந்தத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்றுக் கொள்கின்றன.

மதுரை அரசரடியில் உள்ள இறையியற் கல்லூரியை மையமாகக் கொண்டு இயங்கும் போலந்து நாட்டின் பாஸ்டின் - விளங்கோ தம்பதியினர், பாதிரிகள் சபையில் இருந்து விலகிய அந்தோணி சேவியர், இந்திய மக்கள் முன்னணியின் தலைவர் ஐ. பால்ராஜ் மற்றும் உழைக்கும் மக்கள் பெயரால் ஓய். டேவிட் - இவர்கள்தான் தலித்தியத்தின் முன்னோடிகள்.

இவர்களோடு, மார்க்சிய - லெனினியப் புரட்சிகர இயக்கத்தில் இருந்து விலகி, பின் நவீனத்துவத்தைத் தூக்கிக் கொண்டு வரும் அறிவு ஜீவிக் கும்பல், தங்களுக்கு சமூக ஆதரவைத் தேடிக் கொள்ள, பின் நவீனத்துவத்தோடு தலித் விடுதலை இயல் சித்தாந்தத்தை இணைத்து தலித்தியத்தை உருவாக்கியுள்ளனர்.

''தலித் அரசியல்'' எனும் நூலை வெளியிட்டுள்ள நிறப்பிரிகை கும்பல், அந்நூலில், ''தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் - சிறுபான்மையோர் ஒன்றிணைந்த சமூகப் புரட்சியே நமது இறுதி இலக்கு'' எனக் கூறுகின்றனர். மண்டல் ஆதரவாளர்களின் இந்த செயல் தந்திரம் கருவிலேயே கருகி விட்டது என்பது ஒருபுறமிருக்க, ''ஒருங்கிணைந்த, ஒட்டு மொத்தமான, சாராம்சமான கண்ணோட்டம் கூடாது; இதற்கேற்ப பெருந்தள அமைப்புகளும் கூடாது'' என்பதுதான் பின் நவீனத்துவம். பின் எப்படி நிலவுகின்ற அரசு அமைப்பைத் தூக்கியெறிந்து விட்டு, சமூகப் புரட்சியைச் சாதிக்கப் போகிறார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

★☆★

அமைப்புரீதியாகத் திரட்டப்பட்ட மேல்சாதி வெறியர்களின் தாக்குதல்; அதை எதிர்த்து முறியடிக்க தாழ்த்தப்பட்டோர் அணிதிரளும் போது, அதை சாதிக் கலவரம் என முத்திரை குத்தி, போலீசு பட்டாளத்தை ஏவி ஒடுக்கி, மேல் சாதி வெறியர்களுக்குத் துணை போகும் அரசு இயந்திரம்; ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்களின் ஊடுருவல் இத்தகைய சூழலில் தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் ஐக்கியப்படாமல் சிதறுண்டு - பிளவுண்டு இருப்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் விரும்புவதில்லை.

மும்பை நகரில் நடந்த துப்பாக்கி சூட்டில் பலியான தாழ்த்தப்பட்டவர்களின் சவ அடக்கத்திற்குச் சென்று திரும்பிய விலாஸ் கோக்ரே என்ற தாழ்த்தப்பட்ட கவிஞர், தனது வீட்டிலேயே தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். கோக்ரே தனது இறுதிச் செய்தியாக, ''அம்பேத்கரியவாதிகளின் ஒற்றுமை வாழ்க'' என வீட்டுச் சுவற்றில் எழுதி வைத்துவிட்டு இறந்து போனார்.

புறவயமாக எழுந்து வரும் இந்த நிர்பந்தங்கள் காரணமாக தாழ்த்தப்பட்ட அமைப்புகள் தங்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் ஏராளமுண்டு. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான போராட்டத்தைச் சீரழிக்கக் காத்திருக்கும் ஏகாதிபத்திய சித்தாந்தமான தலித் அரசியலை எப்படி முறியடிப்பது? மேல்சாதி வெறியர்களுக்கே சேவை செய்து வரும் 'தேசிய'க் கட்சிகளையும், இந்திய அரசு அமைப்பையும் எப்படி தூக்கியெறிவது? சாதிய இருத்தலுக்கும், தீண்டாமைக்கும் உயிர்நாடியான நமது நாட்டு பொருளுற்பத்தியை எப்படி மாற்றியமைப்பது?

தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் கொண்டுள்ள முதலாளித்துவ சீர்திருத்தக் கண்ணோட்டத்தாலும், பெரியார் - அம்பேத்கர் கருத்துக்களாலும் இதைச் சாதிக்க முடியாது. பாட்டாளி வர்க்கத் தத்துவமான மார்க்சிய - லெனினியத்தால் மட்டுமே இதைச் சாதிக்க முடியும்; அதனால் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் மட்டுமல்ல, அம்மக்களோடு பிற சாதிகளிலுள்ள உழைக்கும் மக்களையும் ஒன்றிணைத்து, தாழ்த்தப்பட்டவர்களின் சமூக விடுதலைக்கு வழிகாட்ட முடியும்.

• செல்வம்



ஆந்திர மாநிலத்திலுள்ள தாழ்த்தப்பட்ட சாதிகளை மக்கட் தொகைக்கு ஏற்பப் பிரித்து, இட ஒதுக்கீடு - அரசு சலுகைகளை வழங்குமாறு கோரி ஹைதராபாத் நகரில் மாதிகா சாதியினர் நடத்திய பேரணி: வெளிப்படையான பிளவு



படிப்பகம்

www.padippakam.com

# நவீன விவசாயத்தை எதிர்த்து 'மார்க்சிஸ்டு'களின் விநோதப் போராட்டம்

நெல் உற்பத்திக்குப் பதிலாக நன்செய் நிலங்களில் பணப் பயிரிடுவது மற்றும் பண்ணை நிலங்களாக மாற்றுவதை எதிர்த்து, கேரளாவில் அண்மையில் 'மார்க்சிஸ்டு' கட்சியின் அச்சுதானந்தன் கோஷ்டியினர் நடத்திய போராட்டம், தெனாலிராமன் பூனைக்குப் பால் வைத்த கதையாகி விட்டது.

கடந்த 15 ஆண்டுகளாக கேரளாவின் நன்செய் நிலங்கள் படிப்படியாகக் குறைந்து இன்று வெறும் 5 லட்சம் ஹெக்டேர்களாகச் சுருங்கிவிட்டன. முன்பு அரிசி உற்பத்தியில் சுயசார்புடன் இருந்த கேரளா, இன்று அரிசிக்கு வெளி மாநிலங்களிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. உரம், பூச்சிமருந்து மற்றும் பிற செலவுகள் அதிகரித்து நெல் சாகுபடி லாபகரமான தொழிலாக இல்லாமல் போய் விவசாயிகள் படிப்படியாக பணப்பயிர் உற்பத்திக்கு மாறி வருகிறார்கள். நன்செய் நிலங்களில் தேக்கு, தென்னை, பாக்கு, வாழை மற்றும் பழப்பண்ணைகள் அமைப்பது, மீன்பிடி குளங்களாக மாற்றுவது அல்லது நிலத்தைச் சமப்படுத்தி வீட்டுமனைகளாக்குவது என்பதாக நிலைமை மாறிவருகிறது.

இதன் விளைவாக நிலத்தடி நீர் குறைதல், கொசுக்கள் பெருக்கம், நுண்ணுயிர்கள் அழிதல் என சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதோடு, உணவு தானிய உற்பத்திக் குறைவும் ஏற்படுகிறது. இந்நிலைமைக்கு ஆட்சியாளர்களின் கேடுகெட்ட விவசாயக் கொள்கையே காரணம். உணவு தானிய உற்பத்திக்கு முன்னுரிமையும் சலுகையும் அளிக்காமல் புறக்கணித்து, அன்னிய ஏகாதிபத்தியங்களிடம் கையேந்த வைப்பது, பன்னாட்டு நிறுவனங்களின் பகற்கொள்ளைக்காக விவசாயத்தைப் பாழடிப்பது எனும் மறுகாலனியக் கொள்கையின் விளைவுதான் இது.

கேரளாவில் கடந்த 15 ஆண்டுகளாக பாசிசி காங்கிரசும் போலிக் கம்யூனிஸ்டுகளும்தான் மாறி மாறி ஆட்சி செய்துள்ளனர். ஆளுங்கட்சியாக இருநத போதும், எதிர்க்கட்சியாக இருந்த போதும் இக்கேடுகெட்ட கொள்கைக்கு எதிராக 'மார்க்சிஸ்டு'கள் சிறு முணுமுணுப்பைக் கூட காட்டியதில்லை. விசுவாசமாக நடைமுறைப்படுத்தயே வுந்துள்ளனர். இந்நிலையில், இப்போது திடீரென இக்கொள்கைகளை எதிர்த்து சவடால் அடித்து, 'மார்க்சிஸ்டு' கட்சியின் அச்சுதானந்தன் கோஷ்டி போராட்டம் நடத்தக் கிளம்பியிருப்பது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்.

அதிலும், அரசுக்கும் நிலப்பிரபுக்களின் பண்ணைகளுக்கும் எதிராகப் போராடுவதை விடுத்து, இக்கோமாளிகள் சிறு விவசாயிகளின் பண்ணைகளையே அழித்தொழிக்கும் போராட்டத்தில் இறங்கினர். கடந்த ஜூலை இறுதியிலிருந்து ஆகஸ்டு முதல் வாரம் வரை, ''கர்ஷக தொழிலாளி யூனியன்'' எனும் 'மார்க்சிஸ்டு' கட்சியின் விவசாய சங்கத்தினர் ஆலப்புழா மாவட்டத்திலுள்ள நெடுமுடி கிராமத்திலும், குட்டநாடு பகுதியிலும் சிறு விவசாயப் பண்ணைகளிலுள்ள வாழை, தென்னங்கன்றுகளைப் பிடுங்கிப் போட்டனர். மீன் குட்டைகளை நாசப்படுத்தினர். அங்கெல்லாம் செங்கொடிகளை நட்டு வைத்தனர். தமது துண்டு நிலங்களின் வாழை, தென்னை பயிரிட்டிருந்த சிறு, நடுத்தர விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து 'மார்க்சிஸ்டு' முதல்வர் நாயனாரும், மூத்த தலைவர் நம்பூதிரிபாடும் போராட்டம் திசை விலகிச் சென்றதால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு மிகவும் வருந்துவதாகக் கூறியுள்ளனர்.

இப்போராட்டத்தைத் திட்டமிட்டு வழி நடத்தியவர், பிரபல 'மார்க்சிஸ்டு' தலைவரான அச்சுதானந்தன் ஆவார். முதல்வர் நாயனாருக்கும் இவருக்கும் உள்ள பதவிவெறி கோஷ்டிச் சண்டையின் விளைவாக, கட்சியில் செல்வாக்கு பெறும் நோக்கத்தோடுதான் இப்போராட்டத்தை அச்சுதானந்தன் கோஷ்டி நடத்தியுள்ளது. அடுத்த ஆண்டில் நடைபெற உள்ள கட்சி மாநாட்டையொட்டி வரப்போகும் கட்சி அமைப்புத் தேர்தல்களில் செல்வாக்குப் பெற்று தலைமையைக் கைப்பற்றும் நோக்கத்தோடுதான் அச்சுதானந்தன் கோஷ்டி இப்போராட்டத்தை நடத்தியது.

மேலும் 'மார்க்சிஸ்டு' கட்சித் தலைவர்களின் உறவிர்களே இப்படி நன்செய் நிலங்களைப் பண்ணைகளாக மாற்றியதில் முன்னணியில் உள்ளனர். அச்சுதானந்தனின் போராட்டம் இப்பண்ணைகள் மீது கைவைக்கவேயில்லை.

ஆலப்புழா மாவட்ட 'மார்க்சிஸ்டு' கட்சிச் செயலாளரான சுதாகரனின் 50 செண்டு நிலம் பரணிக்காவு கிராமத்தில் பண்ணையாக மாற்றப்பட்டுள்ளது. மான்கொம்பு கிராமத்தில் அச்சுதானந்தனின் மருமகனாகிய தங்கராஜின் நிலம் பண்ணையாக மாறியுள்ளது. தொழிலமைச்சர் சுசீலா கோபாலனின் மகள் லீலாவின் 2 ஏக்கர் நிலம் தென்னை பண்ணையாக்கப்பட்டுள்ளது. மீன்வளத்துறை அமைச்சர் ராமகிருஷ்ணனின் மருமகனாகிய மோகனன், நன்செய் நிலத்தை சமப்படுத்தி குஞ்சிரா மட்டத்தில் சீமைச்சாராய விடுதியைக் கட்டியுள்ளார். 'மார்க்சிஸ்டு' எம்.எல்.ஏ.வான கணாரன், நடப்புரம் கிராமத்தில் நன்செய் நிலத்தில் அடுக்குமாடி பங்களா கட்டியுள்ளார்.

இப்படி அடுக்கடுக்கான ஆதாரங்களை கேரள பத்திரிகைகள் வெளியிட்டு அச்சுதானந்தன் போராட்டத்தின் யோக்கியதையை நாறடித்து வருகின்றன.

கடைசியில், நன்செய் நிலங்களை மீட்கப் போவதாகக் கூறிக்கொண்டு தமது குறுகிய ஆதாயங்களுக்காக அச்சுதானந்தன் கோஷ்டி நடத்திய போராட்டம் அம்பலப்பட்டு பிசுபிசுத்துப் போனதோடு, 'மார்க்சிஸ்ட்' கட்சியும் மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போயுள்ளது. அது மட்டுமல்ல; ஊருக்கு உபதேசம் செய்யும் போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர்களும் அவர்களின் வாரிசுகளும் எளிமையான வாழ்க்கையை மேற்கொள்ளவில்லை; பண்ணை, பங்களா, சொத்து, சுகம் என மேட்டுக் குடியினராகத்தான் வாழ்கிறார்கள் என்பதையும் இப்போராட்டம் நிரூபித்துக் காட்டிவிட்டது. 'மார்க்சிஸ்டு' துரோகிகள் தொடர்ந்து இப்படி சில 'புரட்சி'களைச் செய்து வந்தால், அவர்கள் மீது மக்கள் கொண்டுள்ள மாயைகள் விலக உதவியாக அமையும்.

'மார்க்சிஸ்டு'களால் பிடுங்கி எறியப்பட்ட தென்னை, வாழைக் கன்றுகள்; நாசமாக்கப்பட்ட மீன் குட்டை





படிப்பகம்

www.padippakam.com

## தன்னுரிமைவாதிகளின் பொதுமைக் கொள்கை

# “பாட்டாளிகள் சர்வாதிகாரம் ஒழிக! பிரபாகரனின் சர்வாதிகாரம் வாழ்க!”

பெ.மணியரசன் என்பவரை அரசியல் - சித்தாந்த, நிறுவனத் தலைவராகக் கொண்டுள்ள தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் மாதப் பத்திரிக்கை "தமிழர் கண்ணோட்டம்". இது தனது '97 ஜூலை இதழில், "புதிய ஜனநாயகம் ஏட்டின் புரட்டல் வேலை" என்ற மேதாவிலாச மிகு அவதூறுக் கட்டுரையை வெளியிட்டுள்ளது.

புரட்டுவதையே பூர்வீகப் பரம்பரைச் சொத்தாகப் போலி மார்க்சியக் கட்சியிடமிருந்து பெற்று வந்த கும்பல்தான் இப்படிச் சொல்கிறது. பின்வரும் ஒரு எடுத்துக்காட்டைப் படியுங்கள், யார் புரட்டுக்காரர்கள் என்பதற்குச் சான்றாக.

"தமிழ்நாட்டில் ரொம்பவும் மலிவுபடுத்தப்பட்ட சொல் புரட்சி. நடிகர், நடிகை, தேங்கிப்போன துணிகளை தள்ளுபடி விலையில் விற்கும் துணிக்கடை எல்லாமே இங்கு 'புரட்சிகரமானவை'.

"உண்மையில் புரட்சி என்றால் என்ன?"

"சமூகப் புரட்சி: அரசு எந்திரத்தைக் கையில் வைத்திருக்கும் ஆதிக்க சமூக வர்க்கத்தை வீழ்த்தி, அதனிடமுள்ள அரசு எந்திரத்தை ஒடுக்கப்பட்ட சமூக வர்க்கம் கைப்பற்றும் நிகழ்ச்சி அடிப்படையான சமூக மாற்றம்" (தமிழ்த் தேசியம்: புதிய கேள்விகள், பெ. மணியரசன் பக்: 42)

எப்படி இருக்கிறது, மேதை மணியரசன் சமூகப் புரட்சிக்குச் சொல்லும் வரையறுப்பு?

புலிகளின் தயவில் மேற்குலகப் பயணம் போன போது, ஜெர்மனியில் துரோகி காவுட்ஸ்கியின் கல்லறைக்குப் போயிருந்தால், "வாடா என் எள்ளுப் பேராண்டி" என்று அவர் உச்சிமோந்து இதற்காகவே பாராட்டியிருப்பார்.

நாம் அறிந்தவரை, ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தைக் கைப்பற்றி ஒடுக்கப்படும் வர்க்கம் தன் நலனுக்குப் பயன்படுத்த முடியாது. அதற்கு மாறாக, ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தை அடித்து நொறுக்கித் தகர்த்துவிட்டு, ஒடுக்கப்படும் வர்க்கம் தனக்கெனப் புதிய அரசு எந்திரத்தை நிறுவிக் கொள்வதுதான் புரட்சி!

இதுவும் கூட அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரு அரசியல் புரட்சியைக் குறிக்கிறது; இதைத் தொடர்ந்து சமூதாய - வர்க்க உறவுகளை, தலைகீழாகப் புரட்டிப் போடும் மாற்றங்களைச் செய்வதுதான் சமூகப் புரட்சி.

இந்த இரண்டையும், இவற்றுக்கு இடையிலான உறவையும் கறாராக, சரியாக வரையறுத்துச் செயல்படாமல் ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தைக் கைப்பற்றுவது என்று புரட்டல்வாத வரையறுப்புக் கொடுத்தும், பின்னர் புரட்சி என்பது பண்பு நிலை மாற்றம் என்ற பொதுவான விளக்கமளித்தும் துரோகம் செய்தவர்கள், போலிக் கம்யூனிஸ்டுகள்.

இந்தப் பாரம்பரியம், மரபு மாறாத மணியரசன், பு.ஜ. வைப் பார்த்து புரட்டல் வேலை செய்வதாக அவதூறு செய்வது வியப்பில்லை.

முன்னுக்குப் பின் முரணாகப் புரட்டிப் பேசுவது இன்னொருவகை புரட்டல் வேலை. இதற்கும் மணியரசனே சொந்தக்காரர் என்பதற்கு ஒரு சான்றைப் பாருங்கள்!

"நிலக்கிழாரியத்தை ஒழிப்பதுபோல முதலாளியத்தை ஒழிப்பது போல சாதியத்தை நாள் குறித்து ஒழித்து விட முடியாது."

"நிலக்கிழார்களிடம் இருந்து நிலத்தை எடுத்து விட்டால் நிலக்கிழாரியத்தை ஒழித்து விடலாம். முதலாளிகளிடம் இருந்து ஆலைகளை எடுத்து விட்டால் முதலாளியத்தை ஒழிக்கலாம். அதுபோல் எதை எடுத்து சாதியை ஒழிக்க முடியும்?"

"சாதி ஒரு பௌதீக உடைமையைச் சார்ந்தது இல்லை. அது கருத்து நிலையைச் சார்ந்து உள்ளது. மனித மூளையை சார்ந்து உள்ளது. அதற்கு பௌதீக இயக்கம் உண்டு. ஆனால் அது பௌதீகப் பொருள் மீது சார்ந்ததாக இல்லை." (மேற்படி நூல் பக்: 43)

நிலக்கிழாரியம், முதலாளியம் ஆகியவற்றை ஒழிப்பது பற்றி எவ்வளவு பாமரத்தனமாக மணியரசன் பிதற்றுகிறார்! நிலக்கிழார்களிடம் இருந்து நிலத்தையும், முதலாளிகளிடம் இருந்து ஆலைகளையும் பர்மிய (இன்றைய மியான்மார்) அரசு எடுத்துக் கொண்டு விட்டது; அங்கே அதனால் நிலக்கிழாரியமும் முதலாளியமும் ஒழிந்து விட்டனவா? — இந்தக் கேள்வி ஒருபுறம் இருக்கட்டும்.

1997 பிப்ரவரியில் சாதி ஒரு பௌதிக உடமையைச் சார்ந்தது இல்லை, கருத்து நிலையை, மனித மூளையைச் சார்ந்தது என்று நூல் வெளியிட்டார், மணியரசன். அதேநாளில், அந்நூல் வெளியிட்ட அதே மாநாட்டின் தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது.

"சாதியானது உற்பத்தி ஒழுங்கமைப்பு என்ற முறையில் சமூகக் கட்டமைப்பின் அடித்தளத்திலும், பண்பாட்டு வடிவம் என்ற வகையில், சமூகக் கட்டமைப்பின் வடிவம் என்ற வகையில் சமூகக் கட்டமைப்பின் மேல் தளத்திலும் ஒரே நேரத்தில் இயங்குகிறது. வர்க்கத்தின் வடிவமாகவும் சாதி இருக்கிறது." (தமிழ்த் தேசியப் புரட்சியில் தீண்டாமை ஒழிப்பு, பக்: 6)

தீண்டாமை ஒழிப்புக்கான வழிகளில் ஒன்றாக நிலக்கிழாரியத்தை ஒழித்து, நிலமற்ற ஏழைகளுள் தாழ்த்தப்பட்டோர்க்கு முன்னுரிமை கொடுத்து நிலங்களை வழங்க வேண்டும் என்றும், நவீன வேளாண் பண்ணைகளை அமைத்து சாதிய ஒடுக்கலின் வேகத்தைக் குறைக்க முடியும் என்றும் இதனால் உள்ளூர் நிலஉடைமையாளர் மூலம் வரும் கொடிய சாதி ஆதிக்கம் ஒப்பீட்டளவில் குறைய வாய்ப்புள்ளது என்றும் தீர்மானம் போட்டுள்ளார்.

இப்படி ஒரே நாளில் இரட்டை நாக்குப் பேச்சுகள் பேசும் மணியரசன்தான், பு.ஜ. புரட்டல் வேலை செய்வதாகப் புளுகுகிறார், அப்படி அவர் குறிப்பிடும் புரட்டல் வேலைகள்தாம் என்ன?

"1956-க்குப்பின் தமிழகத்தில் நுழைந்த மார்வாரி - குஜராத்தி சேட்டுக்களை வெளியேற்றும்" போராட்டத்தை தன்னுரிமை முன்னணி சார்பாக மணியரசன் குழு உட்பட சில அமைப்புகள் மூன்றாண்டுகளுக்கு முன்பு நடத்தின. அந்த இயக்கத்தில் கண்ட இரண்டு முக்கியத் தவறுகளை பு.ஜ. சுட்டிக் காட்டி எழுதியது. இந்த முன்னணியினரே அடைய எண்ணும் தன்னுரிமைக்குத் தடையாக நிற்கும் மார்வாரி - குஜராத்தி சேட்டுக்களுடனும் ஏகாதிபத்தியத்துடனும் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ்த் தரகு - அதிகார வர்க்க முதலாளிகளையே தமிழ்த் தேசிய இன முதலாளிகள் என சித்தரித்து அவர்களுக்காக வக்காலத்து வாங்குவதைத் தான் பு.ஜ. சுட்டிக் காட்டியது. இதற்கு பதில் சொல்ல முடியாத மணியரசன் கும்பல் "தமிழன் மட்டும் சுரண்டவில்லையா?" என்று கேட்பதாக புளுகுகிறது.

"தமிழ்நாட்டில் பரம்பரை பரம்பரையாக நாட்டுக் கோட்டை நகரத்தார் நடத்தி வந்த லேவாதேவித் தொழிலை மார்வாடி - குஜராத்திகள் அடியோடு நசுக்கி விட்டனர். முழுமையாக கைப்

மார்வாடி - குஜராத்தி சேட்டுகளை எதிர்க்கும் தமிழ் முதலாளிகளைத் தேடி...





படிப்பகம்

www.padippakam.com

பற்றியும் விட்டனர்'' என்றும், ''வெளிநாடுகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் குடியேறிய தமிழர்கள் அனைவரும் அந்தந்த நாடுகளின் வளத்தைத் தம் உழைப்பால் பெருக்கினர்; வட்டிக் கடை,தொழில் - வணிக நிலையங்கள் வைத்து கோடி கோடியாக சம்பாதிக்க சென்றவர்களில்லை'' என்று மணியரசனின் கூட்டாளி நெடுமாறன் பிற்போக்குத்தனமாக, புளுகியதையே பு.ஜ. விமர்சித்தது. இது தவறா? திசை திருப்புவதா?

★☆★

எழுப்பிய எல்லா மண்டல்வாதிகளும் அவதூறு செய்வதைப் போல, ''பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு கூடாது'' என்று பேசுவதாக மணியரசன் குழு புளுகியிருக்கிறது. அப்படி எங்கேயும் பு.ஜ. எழுதவில்லை. மண்டல் அறிக்கையின் பரிந்துரையில் உள்ள பிற்படுத்தப்பட்ட சாதிகள் அனைத்திற்கும் இட ஒதுக்கீடு செய்வது அவசியம் என்று பெரியாரிய - அம்பேத்கரிய - லோகியாவாதிகள் வாதிடுகின்றனர். பட்டியலில் கண்ட சாதிகளுக்குள்ளாகவே பொருளாதார ரீதியில் முன்னேறியவர்களுக்கு இட ஒதுக்கீடு அவசியமில்லை; மற்றவர்களுக்கு இட ஒதுக்கீடு அவசியம் என்பது போலிக் கம்யூனிஸ்டுகள், பிற மார்க்சிய - லெனினியக் குழுக்கள் நிலைப்பாடு.

ஆனால் பு.ஜ.வோ, மண்டல் அறிக்கையில் கண்டுள்ள 3000-க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதிகளில் பலவும் உண்மையில் முற்பட்டவை, இட ஒதுக்கீட்டிற்குத் தகுதியானவை அல்ல. இட ஒதுக்கீடு போன்ற சலுகைகள் என்று வரும் போது, தாமும் ஒடுக்கப்பட்ட சூத்திர வழி வந்த சாதிகள் என்றும், சமுதாய அமைப்பு என்று வரும்போது தாங்கள் சத்திரிய வழிவந்த ஆண்டைகள் என்று சாதி ஆதிக்கம் புரிவது என்றும் உள்ளன.

மணியரசன் கும்பல் உட்பட பெரியாரியவாதிகள் கூறுவதைத் தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாத சாதி இந்துக்கள் எல்லோரும் சூத்திரர்களாகவே இருந்தனர் என்கிற பித்தலாட்டத்தை பு.ஜ. ஏற்கவில்லை. பு.ஜ. எழுப்பிய கேள்வியே யார் சூத்திரர்கள்? எந்தெந்த சாதிகள் சூத்திர வழிவந்தவை? உண்மையில் எந்தெந்த சாதிகள் இட ஒதுக்கீட்டிற்குத் தகுதியானவை? மண்டல் கமிசன் அறிக்கையிலேயே இந்தக் கேள்விக்குப் பதிலில்லை.


2000 ஆண்டுகளாக சூத்திரர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகளை விளக்கும் மண்டல், தற்போதுள்ள சாதிகளில் எவையெவை அந்த வகைப்பட்டவை என்று நிரூபிக்கவே இல்லை. அரசியல் செல்வாக்கை வைத்து மண்டலிடம் மனுக் கொடுத்த சாதிகளை எல்லாம் பிற்படுத்தப்பட்டவை என்று மண்டல் அறிவித்து விட்டார்.

''சாதி ஆதிக்கம் செலுத்தும் எந்த சாதிக்கும் இட ஒதுக்கீடு உரிமை கிடையாது'' என்பதுதான் பு.ஜ.வின் நிலைப்பாடு. எல்லா பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கும் இட ஒதுக்கீடு கூடாது' என்பதல்ல. பு.ஜ.வின் நிலைப்பாடு தவறென எந்தவொரு மண்டல்வாதியும் இதுவரை விளக்கமளித்திடவில்லை. இதற்குப் பதில் கூற முடியாது என்பதால், பு.ஜ.வின் நிலைப்பாட்டைத் திரித்துச் சொல்லி, அவதூறு செய்து வருகின்றனர். இட ஒதுக்கீடு மூலம் அரசு பதவிக்கு வந்த அதிகாரிகள் தம் சாதியின் பக்கம் நின்று தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்குவதை தென் மாவட்டங்களில் பார்க்கிறோம். இதற்கு மண்டல்வாதிகள் என்ன பதில் கூற முடியும்? அது வேறு, இதுவேறு என்று ஒதுக்கி விட முடியுமா?

★☆★

பார்ப்பனிய பத்திரிகைகள் விடுதலைப் புலிகளைப் ''பயங்கரவாத அமைப்பு'' என்று பிரச்சாரம் செய்வதற்கும், பு.ஜ. புலிகளை ''பாசிஸ்டுகள்'' என்று சொல்வதற்கும் வேறுபாடு ஏதுமில்லை; சந்திரிகாவையும் பாசிஸ்டு, பிரபாகரனையும் பாசிஸ்ட் என்று கூறும் பு.ஜ. தமிழீழத்தை ஆதரிப்பதாக நடிக்கிறது என்கிறது, மணியரசன் குழு.

விடுதலைப் புலிகளைப் பற்றிய பார்ப்பன பத்திரிக்கைகளின் நிலைப்பாட்டில் இருந்து பு.ஜ. எந்தெந்த விதத்தில் மாறுபடுகிறது என்பதை, கடைசியாக நாத்திக நந்தனருக்கு அளித்த பதில் உட்பட பலமுறை எழுதியுள்ளோம். ஒன்றுக்காவது மணியரசன் குழுவோ, வேறு யாருமோ பதில் கொடுத்ததே இல்லை. பார்ப்பனியப் பத்திரிகைகளுடன் பு.ஜ.வை இணை வைத்துப் பேசுவதன் மூலம், புலிகள் மீதான பு.ஜ.வின் விமர்சனங்களுக்கு பதில் கூறுவதில் இருந்து நழுவிக் கொள்ளவே எத்தணித்து வருகின்றனர்.



மண்டல் வகைப்படுத்திய 'பிற்படுத்தப்பட்ட' சாதிகளைப் பற்றிய பிரச்சினையில் மணியரசன் குழுவின் கொள்கை

''ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி, ஆயிரக்கணக்கான விவசாயிகளைக் கொன்றார்'' என்று அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கைக்கூலிகளும் பிரச்சாரம் செய்வதையும், அவ்வாறே மணியரசன் கும்பல் உட்பட போலிப் பொதுவுடைமைவாதிகள் பேசுவதையும் ஒன்றென இணைவைத்துப் பேசினால் ஏற்பார்களா? உலக அழகிப் போட்டியை பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். கும்பலும் எதிர்த்தன. பொதுவுடைமைப் புரட்சியாளர்களும் எதிர்த்தனர் - இரண்டும் ஒன்றுதான்; இந்த இரண்டு வகையினருமே ஒழுக்கவாதிகள்தாம் என்று பின் நவீனத்துவவாதிகள் எழுவதை மணியரசன் குழு ஏற்கிறதா? இப்படி இணைவைத்துப் பேசுவதே அரசியல் ஒட்டாண்டித்தனத்தைத்தான் வெளிப்படுத்துகிறது.

சந்திரிகா, பிரபாகரன் இருவரும் எதிரெதிரே நின்று போரிடுவதால், அவர் சிங்களவர், இவர் தமிழர் என்பதால் இருவரையும் பாசிஸ்டுகள் என்று கூறக் கூடாதா? இருவரின் நடவடிக்கைகளும் கொஞ்சமும் ஜனநாயக, மனித உரிமைகளை மதியாத வன்கொடுமைத் தன்மையுடையன. சந்திரிகா மாற்று இனத்தைக் கொன்று குவிக்கிறார். பிரபாகரன் தன்னினத்தையே கொன்று குவிக்கிறார்.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்பதே ஜனநாயக விரோதமானது, நிராகரிக்கப்படவேண்டியது என்று வாதிடும் மணியரசன் குழுவைப் போன்றவர்கள், எவ்வித விமர்சனமுமின்றி பிரபாகரனை ஏற்பதும், புகழுவதும் அவர்களுடைய இரட்டை வேடத்தைக் காட்டவில்லையா? ஈழ துரோகக் குழுக்களை அடையாளப்படுத்தி எதிர்த்து வருவதுடன், பத்மநாபா, பிளாட் முகுந்தன் போன்றவர்களது கொலையைக் கூடத் துரோகத்துக்கு அவர்கள் பெற்ற தண்டனை என்றே பு.ஜ. எழுதியது. அதுவும் மணியரசன் குழு வாய் மூடிக் கிடந்த போது; இருந்தும் ஈழ துரோகக் கும்பலைப் பட்டியலிட்டு இவர்களுடனா புலிகள் ஐக்கியப்படுவது என்று கேட்டு மாய்மாலம் போடுகிறது. மணியரசன் குழு.

விடுதலைப் புலிகளைத் தவிர வேறெந்தக் குழுக்களும் ஈழத்தில் இயங்கக் கூடாது என்று தடை விதித்ததோடு, ரஜனி திரணகம, செல்வி, மணி அண்ணாச்சி உட்பட பல ஜனநாயக சக்திகளைக் கூடப் படுகொலை செய்தனர். ஈழத்தில் வாழ்வதற்கு இசுலாமியருக்கு உரிமை இல்லை என உத்திரவு போட்டதோடு, மசூதிக்குள் புகுந்து தொழுகை நடத்திக் கொண்டிருந்தவர்களை சுட்டுக் கொல்லவில்லையா? இதை ஆண்டன் பாலசிங்கமே ஒப்புக் கொள்ளவில்லையா? சிங்கள கிராமங்களில் புகுந்து பெண்கள், முதியோர், குழந்தைகளைப் புலிகள் வெட்டிப் போடவில்லையா? தமிழர்களுக்கெதிராக இதே போல சிங்கள இராணுவமும் தான் கொலை வெறியாட்டம் நடத்துகிறது என்பது புலிகளின் செயலை நியாயப்படுத்தி விடுமா?

இப்படிப் படுகொலைகளும், தடைகளும் விதிப்பது சரியென்று வாதிடும் மணியரசன் குழுவினர், நாளை தமிழகத்தில் ஆயுத வலுப்பெறும் எந்தவொரு குழுவும் இதைப் போல செய்வதை ஏற்பார்களா? செய்வார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தான் சகித்துக் கொள்ள முடியாது. இன சர்வாதிகாரம் மட்டும் இனிக்குமல்லவா?

இவ்வாறு சுயசிந்தனை சிறிதும் இல்லாமல், விடுதலைப் புலிகளின் செயல்களை எல்லாம் விமர்சனமின்றி ஆதரிப்பவர்களையும், நெடுமாறன் போன்று புலிகள் ஆதரவையே முழு நேரப் பணியாகக் கொண்டுள்ளவர்களையும் தாம் புலிகளின் பினாமிகள் என்கிறோம். இதிலென்ன தவறு? மேலும் மணியரசன், நெடுமாறன் போன்றவர்கள் தமது அமைப்புகள் அறிவித்துள்ள தமிழினத் தன்னுரிமைக்கான திட்டத்தை நிறைவேற்ற எந்த வித முயற்சியையும் மேற்கொள்வதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

பிரபாகரனின் வீரப்பிரதாபங்களைப் போற்றும் இவர்கள், அதைப்போன்றோ, வேறு மாதிரியோ தமிழின விடுதலைப் போரைத் தொடுப்பதற்கு எப்போதாவது. தயாரிப்பாவது செய்யத் துணிவார்களா? ஈழ விடுதலையை ஆதரிப்பது சரிதான்! ஆனால் அதுவே முழுமுதற் பணியாகக் கொள்வது சரியா? வீரச் சவடாலும் அடிக்க வேண்டும்; தமது தோலுக்கும் சிராய்ப்பு ஏற்படாமல் காத்துக் கொள்ள வேண்டும் என்பதுதானே இவர்கள் கொள்கை. "ஈழ விடுதலை சரி! இங்கே என்ன கிழிச்சாய்" என்ற இந்த தேசத் தமிழினது கேள்விக்கு என்ன பதில் சொல்வார்கள்.

இராணுவ ரீதியில் புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவையும், தி.க. வீரமணி தலைமையில் புலிகள் ஆதரவு முழு அடைப்பு தமிழகத்தில் தோல்வி அடைந்ததையும் பற்றி பு.ஜ. எழுதியது பற்றி மணியரசன் குழுவிற்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. கொரில்லாப் போரில் பின் வாங்கித் தாக்கும் புலிகளின் உத்தியை நாம் பின்னடைவு என்று சித்தரிக்கிறோமாம்! கொரில்லாப் போரில் பின் வாங்குவது இறுதிச் சரிவைக் குறிக்காது என்றும், யாழ் மக்கள் வெளியேறியது அரசியல் ரீதியில் சந்திரிகாவுக்கு தோல்விதான் என்றும் அப்போதே பு.ஜ. எழுதியுள்ளது. ஆனால் மணியரசன் குழுதான் முன்பு "ஈழம் வேதனை மிகுந்த பாதை" "சூரியக் கதிர் தாக்குதல் சுட்டெரிக்க முடியுமா எம்மை?" என்று இரண்டு அட்டைப்படங்கள் போட்டது; ஆனால் இதற்குரிய விளக்கம் / கட்டுரை எதுவுமே உள்ளே கிடையாது. இது மறைமுகமாக புலிகளின் பின்னடைவை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறென்ன?




தொடர்ந்து நடந்த இரண்டாண்டுப் போரில் புலிகள் பின்வாங்கியது தந்திரோபாய ரீதியிலானது அல்ல. (Not Tactical Retreat) போர்த்தந்திர ரீதியிலான (Strategic Defence) தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதுதான் புலிகளின் இராணுவத் திறமையைப் பாராட்டிய இராணுவ வல்லுநர்களின் கணிப்புமாகும். ஒரு இலட்சம் பேர் கொண்ட இந்திய இராணுவத்திடமிருந்தே ஈழ பகுதிகளைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்த புலிகளின் இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் இது புரியும். மேலும் அனுபவம் வாய்ந்த தளபதிகளையெல்லாம் புலிகள் இழந்து விட்டார்கள். கடற்புலிகள், பெண் புலிகளின் இராணுவத் தாக்குதல் வலிமை குறைந்திருக்கிறது. அரசியல் ரீதியிலான சவடாலை இராணுவத் துறைக்கும் பிரயோகித்த புலிகளின் பினாமிகள் நீட்டிக்கிறார்கள் என்பதுதான் உண்மை!

தமிழ்நாட்டில் முழு அடைப்புக்கு அறை கூவல் விட்ட சர்வ கட்சிக் கூட்டம் இலங்கையில் இந்திய அரசின் தலையீட்டையே கோரியது. அதில் போய் ஒட்டிக் கொண்ட மணியரசன் குழு, தன்னைப் பொறுத்தவரை "சிங்கள அரசிடம் இந்திய அரசு போர் நிறுத்தம் கோர வேண்டும்" என வலியுறுத்தி மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தவே முயன்றதாக விளக்கமளிக்கிறது.

இப்படியேகூட எடுத்துக் கொள்வோம். இப்போது இல்லாவிட்டாலும் பின்னாளில் ஏதாவது ஒரு காரணத்தை முன் வைத்து, இலங்கைப் பிரச்சினையில் தலையீடு செய்யவே தெற்கு ஆசிய பிராந்திய விரிவாக்கப் பேரரசை பிடிக்க இந்திய அரசு விரும்புகிறது. ஏற்கனவே இப்படிப் பட்ட கோரிக்கையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. இதை மறைத்து விட்டு அம்பலப்படுத்தும் நோக்கத்துக்காக கையாண்ட உத்தி என மழுப்புகிறது மணியரசன் குழு.

ஈழத் தமிழருக்கு ஆதரவாக அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு தேதிகள் அறிவித்து முழு அடைப்பு நடத்தின; தமிழக மக்கள் தன்னியல்பாக முழு ஆதரவளித்தனர். இப்போது பல கட்சிகளும் முழு அடைப்பை நிராகரித்து ஓரிரு இடங்களில் நடந்ததையே பெரிதாகக்கூறி கொள்ளும் நிலையோடு அதை ஒப்பிடும் போது முழு தோல்வி என்று ஏன் கூறக் கூடாது.

புலிகளுக்கு ஆதரவாக நடந்த முழு அடைப்பு தமிழ்நாட்டில் ஐந்து மாவட்டங்களிலும் புதுவையிலும் முழு வெற்றி அடைந்தது; மற்ற மாவட்டங்களிலும் பெரும்பகுதி வெற்றிகரமாகவே நடைபெற்றது என்று தனிக் கட்டுரை எழுதியுள்ளது தமிழர் கண்ணோட்டம். பு.ஜ.வுக்கு எழுதிய பதிலிலோ, "தி.மு.க. நடத்திய கெடுபிடி நடவடிக்கைகள், முழு அடைப்புக்கு ஆதரவாக ஒரு துண்டு அறிக்கை கொடுத்து விட்டு அ.தி.மு.க. ஒரு சுண்டு விரலைக் கூட அசைக்காதது முதலான பலவற்றையும் கணக்கில் கொண்டால், இந்த முழு அடைப்பு வெற்றிகரமானதுதான்.." என்று மணியரசன் குழு எழுதியுள்ளது.

"அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பாதான்" ஆனால் முளைக்கவில்லையே! நடக்காததை நடந்ததாகக் கணக்கில் கொண்டால் எதார்த்தத்தில் நடந்ததாகிவிடும் என்கிற மணியரசன் குழுவின் கணக்கு, யாரிடம் ஒப்புவிப்பதற்கு, பிரபாகரனிடமா? பாசிஸ்டுகளுக்கு இப்படிப்பட்ட துதிபாடிகளான இட்லரின் பிரச்சார மந்திரிகள் கோயபல்சுகளும், கோயரிங்குகளும் அவசியம்தான்!

• ஆசிரியர் குழு

## புதிய ரேசன் திட்டத்தில் தில்லுமுல்லுகள்

புதிய ரேசன் திட்டத்தில் மோசடி நடப்பதைக் கடந்த இதழில் அம்பலப்படுத்தியிருந்தோம்.

இந்தப் புதிய ரேசன் திட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே வசிப்போருக்கு சலுகை இல்லை என்பதை தற்போது மத்திய அரசே ஒத்துக் கொண்டது. இதைத் திருத்தி அமைக்கப் போவதாக பிரதமர் பேசியுள்ளார்.

இங்கே தமிழகத்தில் இன்னும் புதிய குடும்ப அட்டை வழங்கப்படவில்லை. செப்டம்பரில் மாநகராட்சிகளிலும் அக்டோபரில் நகராட்சிகளிலும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என அறிவித்துள்ளனர். ஆனால் நாம் செய்தி சேகரித்த வரையில் புதிய அட்டை வழங்குவது மேலும் தாமதமாகும் எனத் தெரிகிறது.

தவிர, இங்கு ஒரு பெரிய மோசடி சத்தமின்றி அரங்கேறி வருகிறது. புதிய குடும்ப அட்டைக்காக விண்ணப்பித்தவர்களில் சுமார் 60 சதவீதம் பேர் வறுமைக் கோட்டின் கீழ் வசிப்பவராகப் பதிவு செய்துள்ளனர். இது பற்றி நேரே சென்று சோதித்தறிவதற்குப் பதிலாக, பொருள் வழங்கு துறை அலுவலகங்களில் மேசையில் இருந்தபடியே வருமானத்தைக் கூட்டி எழுதி, வறுமைக் கோட்டின் கீழே வசிப்போர் எண்ணிக்கையைப் பாதிக்கும் கீழாகக் குறைத்து வருகின்றனர்.

பொதுக் கணக்கெடுப்பு நடத்த மறுத்த அதிகார வர்க்கச் சோம்பேறிக் கூட்டம் தற்போது அலுவலக மேசையிலிருந்தபடியே பொய்யான புள்ளி விவரக் கணக்கு காட்ட திட்டமிட்டு நடைமுறைப்படுத்துகிறது. இதிலும் பாதிப்படையப் போவது வறுமைக் கோட்டின் கீழே வசிக்கும் ஏழை எளியவர்கள் தான்.

தென் மாவட்டங்களில் ஆதிக்க சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளைக் கண்டித்து ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் சீனிவாசன் தலைமையில் 26.7.97 அன்று சென்னை சேத்துப்பட்டு அம்பேத்கர் திடலில் ம.க.இ.க. பொதுக் கூட்டம் நடந்தது.

ஆதிக்க சாதியினரின் கொலைவெறியைக் கண்டித்து தோழர் காளியப்பன் சிறப்புரை ஆற்றினார். ஆண்டிப்பட்டி வி.வி.மு. தோழர் செல்வராசு சிறப்புரையின்போது மேலவளவு கொலைகள் உட்பட, கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் அன்றாடம் படும் அவலங்களைத் தோலுரித்தார். வி.வி.மு. அமைப்பு இருக்குமிடங்களில் சாதிவெறியை எதிர்த்துப் போராடி வருவதைக் குறிப்பிட்டு, மக்கள் புரட்சிகர அமைப்புகளில் அணி திரள வேண்டிய தேவையை வலியுறுத்தினார். மக்கள் திரளாக வந்து ஆதரவளித்து, ரூ. 500 நிதியுதவியும் செய்தனர்.

ம.க.இ.க., சென்னை.


படிப்பகம்

www.padippakam.com



# இறால் பண்ணை அழிப்பு

## – வாய்மேடு விவசாயிகளின் போர்க் கோலம்

**வா**ய்மேடு, அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் வளவனாறு நதியிலிருந்து பாசன வசதி கிடைக்கிறது. இந்த ஆற்றின் கரைகளில் சுமார் 30 இறால் பண்ணைகள் உள்ளன.

கடந்த ஆண்டு டிசம்பரில் பெருமழை பெய்த போது, இறால் பண்ணைகளின் உயர்ந்த கரைகளால் மழை நீர் வடிவதற்கு வழியின்றிக் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. வயலில் பயிர்களும் அழுகி, பெரும் இழப்பு ஏற்பட்டது. இறால் பண்ணைகளின் பாதிப்புகளை உணர்ந்த இப்பகுதி மக்கள், கிராமங்கள் அருகே புதிதாக பண்ணைகள் அமைக்கக் கூடாது என இறால் பண்ணை உரிமையாளர்களுடன் ஒரு ஒப்பந்தம் போட்டனர்.

இதை மீறி வாய்மேடு கிராமத்தில் மயிலாடுதுறை த.மா.கா. நாடாளுமன்ற உறுப்பினர் பி.வி. இராசேந்திரன் புதிதாக இறால் பண்ணை அமைத்து வந்தார். இதனால் விவசாயிகள் கோபமடைந்தனர்.

ஜூலை 20-ஆம் தேதி, வாய்மேடு ஊராட்சி மன்றத் தலைவர் பழனியப்பன், கூட்டுறவு சங்கத் தலைவர் சிவசங்கரன் தலைமையில் சுமார் 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் அனைவரும் ஒன்று திரண்டனர்.

விவசாயிகள் திரண்டு வருவதை சட்டை செய்யாமல் புல்டோசரைக் கொண்டு இறால் பண்ணைக்கு கரை உயர்த்தும் வேலை நடைபெற்றது. இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் புல்டோசரைத் தாக்கினர். அமைத்த கரையை மீண்டும் சமப்படுத்த டிரைவரை நிர்ப்பந்தித்தனர். வேறு வழியின்றி புல்டோசர் கரையை அழித்து சமன் செய்யும் வேலையைச் செய்தது.

மேலும் பாசன வாய்க்காலிலிருந்து குழாய்களை அமைக்க வேண்டாம் என முன்பே எச்சரித்திருந்தும் இறால் பண்ணை முதலாளிகள் அதனைப் பொருட்படுத்தாமல் குழாய்களை அமைத்தனர். விவசாயத்திற்கான நீரை பண்ணைக்குத் திருப்பியதால் குருவை சாகுபடி பாதிப்படைந்தது. இதனாலும் ஆத்திரமுற்ற மக்கள் குழாய்களைச் சிதைத்து மண்ணால் மூடி சமன் செய்தனர்.

இதற்கிடையே வேதாரண்யம் டி.எஸ்.பி., தாசில்தார், காவலர்கள் வந்தனர். அடுத்து எஸ்.பி. கோபாலகிருஷ்ணன் வந்தார். 20 பேரைக் கைது செய்ய வேண்டும் எனக் காவல்துறை கேட்டபோது, 50 பேர் முன் வந்தனர். 20 பேரை கைது செய்து வழக்குப் போட, அவர்கள் மறுநாள் பிணையில் வந்தனர். இறால் பண்ணைகளால் பாதிக்கப்பட்ட 7 கிராம விவசாயிகளின் முழு ஆதரவும் இப்போராட்டத்திற்குண்டு.

உச்சநீதி மன்ற உத்தரவையே மதிக்காமல் அத்தீர்ப்புக்கு எதிராக இறால் பண்ணை அமைக்க முயன்ற த.மா.கா - எம்.பி. பி.வி. இராசேந்திரன் மீது எந்த நடவடிக்கையுமில்லை. கலவரம் செய்யவென்றே அவனால் அனுப்பப்பட்ட 200 ரவுடிகளையும் போலீசு கைது செய்யாமல் பாதுகாப்புடன் திருப்பி அனுப்பியது.

வாய்மேடு போராட்டத்தை ஆதரித்து ம.க.இ.க. சார்பில் 300 சுவரொட்டிகள் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் ஒட்டப்பட்டன.

விவசாயிகளின் வீரமிக்க போராட்டத்தை ஆதரித்து 23.07.97 அன்று வேதாரண்யத்தில் நடந்த ம.க.இ.க. பொதுக் கூட்டத்தில் தோழர் காளியப்பன், பி.வி. இராசேந்திரனின் மக்கள் விரோதப் போக்குகளைத் திரைகிழித்தார். தலைமை தாங்கிய தோழர் கே. கிருஷ்ணமூர்த்தி தாழ்த்தப்பட்டவர் என்பதாலும், சமூக விரோதி, கடத்தல் பேர்வழி, சாதி ஆதிக்க வெறியன் பி.வி. இராசேந்திரனைப் பெயர் குறிப்பிட்டு பேசியதாலும் (யாரும் பெயர் கூறி பேசமாட்டார்களாம்) அவனது எடுபிடிகள் கூட்டத்தில் சலசலப்பு செய்தனர். போலீசோ அவர்களின் செயல்களைக் கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தது.

இப்படிப்பட்ட சாதிவெறியர்களை எம்.பி.க்களாகக் கொண்டுள்ள த.மா.கா. தான் சாதிவெறிக்கு எதிராகக் குரல் கொடுப்பதாகப் பம்மாத்து வேலைகள் செய்கிறது.

ஊழலற்ற, நேர்மையான ஆட்சி என மேடைக்கு மேடை முழங்கி வரும் த.மா.கா. கட்சியின் எம்.பி.யான பி.வி. இராசேந்திரன் இறால் பண்ணை அமைக்க வாங்கிய விளை நிலம் 4 ஹெக்டேர். இதுவே சட்டவிரோதமானது. மேலும் 7 ஹெக்டேர் புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து வளைத்து 11 ஹெக்டேர் நிலத்தில் கல் ஊன்றியுள்ளான், இந்த 'யோக்கியவான்'.

இதில் இன்னும் கொடுமை என்னவென்றால் கடந்த பொதுத் தேர்தலின் போது 'மயிலாடுதுறை, தொகுதியில் இறால் பண்ணைகளைத் தடுத்து நிறுத்துவேன்' என்று வாக்குறுதியளித்து ஓட்டுப் பொறுக்கினான் என்பது தான்.

இந்த 'யோக்கிய சிகாமணி' இறால் பண்ணைகளை எதிர்த்து போராடிய விவசாயிகளை கிரிமினல்கள் என வசை பாடி, ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு, சொகுசுக் காரில் போய்க் கொண்டே ஊர் ஊராக வீதிகளில் வீசி வருகிறது. மக்களிடம் நின்று பேசி வினியோகித்தால் செருப்படி விழும் என்ற பயம் போலும்.

இதற்குப் பதிலடியாக ம.க.இ.க. சார்பில் இவர்களின் சட்ட விரோதச் செயல்களை அம்பலப்படுத்திய துண்டுப் பிரசுரங்கள் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட மக்களிடையே வினியோகிக்கப்பட்டது. உச்சநீதி மன்றம் தடை செய்த பின்பும் இறால் பண்ணை அமைக்க முயன்றது நீதிமன்ற அவமதிப்பு. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்தல்) சட்டப் பிரிவு 3, உட்பிரிவு (7), (2,சி)யின் படி பயிரிடும் நிலங்களை பயன்படுத்தக் கூடாது என்பது மீறப்பட்டுள்ளது.

வாய்மேடு விவசாயிகளால் அடித்து நொறுக்கப்பட்ட இறால் பண்ணைக் கொட்டகை.



www.padippakam.com



மேலும் (2,டி)யின்படி நிலத்தடி நீரைப் பயன் படுத்தக் கூடாது என்பதையும் மீறி நிலத்தடி நீருடன் ஆற்று நீரையும் சேர்த்துப் பயன்ப டுத்தி விவசாயத்திற்கு நீரே இல்லாமல் செய் துள்ளனர்.

மேலும் இறால் பண்ணைகளால் வரும் பாதிப்புகளைப் பட்டியலிட்டு, நமது வாழ்வை, விவசாயத்தை, மீன் வளத்தை கரு கச் செய்யும் இப்பண்ணைகளை ஒழித்துக் கட்ட அறை கூவிய துண்டுப் பிரசுரங்கள் மக்களின் போர்க் குணத்தை மேலும் தட்டி எழுப்பியுள்ளன.

'இனி உச்சநீதி மன்றமே இறால் பண் ணைகளுக்கு அனுமதி கொடுத்தால்கூட அவற்றை விரட்டுவதில் உறுதியாக இருப் போம்' என அப்பகுதி விவசாயிகளும் மீன வர்களும் கூறுகின்றனர்.

தகவல்:
ம.க.இ.க.,
தஞ்சை மற்றும் வேதாரண்யம்.

# ஆண்டி மடம் ஆயுதக் கொள்ளையும் புரட்சிகர அமைப்புகள் மீது அடக்குமுறையும்

ஆண்டிமடம் காவல் நிலையத்தைச் குறையாடி ஆயுதங்க ளைக் கைப்பற்றிச் சென்றுள்ளது ஒரு கும்பல். அதைக் கண்டுபி டிக்க துப்புக்கெட்ட காவல் துறையினர் இதைச் சாக்காக வைத்து புரட்சிகர அமைப்புகளின் மீது ஒரு சுற்று அடக்குமுறையை ஏவி விட முயற்சித்தது. தான் சுறுசுறுப்பாகச் செயல்படுவதாகவும் காட் டிக் கொள்ள முயன்றுள்ளது.

கடந்த 19.7.97 மாலை 4 மணியளவில் கடலூர், விழுப்புரம் கண்காணிப்பாளர்கள் சைலேந்திர பாபு, இரவி தலைமையில் 150க்கும் மேற்பட்ட அதிரடிப் படையினர் காரப்பட்டு கிராமத்தில் புகுந்தனர்.

விவசாயிகள் விடுதலை முன்னணியின் பகுதி அமைப்பாளர் தோழர் ஏழுமலை வீட்டில் புகுந்து சூறையாடினர். இதைப் பார்த்த தோழரின் 14 வயது மகள் வள்ளி, 'ஏன் இப்படி கலாட்டா செய்கிறீ கள்?' எனக் கேட்டதும், துப்பாக்கியின் அடிக்கட்டையால் மார்பில் தாக்கி மயக்கமடையச் செய்தனர்.

இதைக் கண்ட வள்ளியின் தாய் ஓடி வந்து, 'ஏன் அநியாயமாய் அடிக்கிறீர்கள்?' எனக் கேட்டதும், அவரையும் தாக்கினர். இதைப் பார்த்த கிராமப் பொது மக்கள் கேள்வி கேட்கவே, போலீசு வெறி நாய்கள் மக்கள் மீதும் பாய்ந்து, ஓட ஓட விரட்டி அடித்தனர். அதன் பின் விவிமு அலுவலகத்திலிருந்த புத்தகங்களையும் கொடிகளை யும் போலீசு நாய்கள் அள்ளிச் சென்றன.

என்ன காரணத்திற்காக இத்தனை அராஜகம் அரங்கேறியது எனப் புரியாத காரப்பட்டு மக்கள் ஓரணி சேர்ந்தனர். இந்த அராஜகத் தைக் கண்டித்தும், நீதி விசாரணை கோரியும் திருச்சி - சென்னை நெடுஞ்சாலையில் அரசூர் கூட்டு ரோடில் சாலை மறியல் செய்த னர்.

சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து நின்றது. விழுப்புரம் கண் காணிப்பாளர் இரவி தலைமையில் மீண்டும் வந்த அதிரடிப்படை எவ்வித பேச்சு வார்த்தையுமின்றி பெண்கள், குழந்தைகள் எனக் கூடப் பார்க்காது, வேடிக்கை பார்த்த பொதுமக்கள் உட்பட அனைவ ரின் மீதும் கண்மூடித்தனமாக தடியடி நடத்தி விரட்டியது.

இதில் வி.வி.மு. மாநில அமைப்பாளர் தோழர் நாராயணனின் கை முறிந்தது. மேலும் 7 தோழர்களுக்கும் இரத்தக் காயம் ஏற்பட் டது. இவர்கள் எட்டுப் பேர் மீதும் கொலை முயற்சி உட்பட பல பிரிவுகளில் வழக்குப் போட்டு, கடலூர் மத்திய சிறையில் அடைத் தது. சென்னை உயர்நீதி மன்றத்தின் உத்தரவின் பேரில் நிபந்தனை பிணையில் வந்து, திருச்சியில் தங்கி கையெழுத்து போட்டு வந்த னர்.

இந்த 'சுதந்திர' தினப் பொன்விழா ஆண்டில் எக்காரணமு மின்றி, முன்னறிவிப்பின்றி, தேடுவதற்கான நீதிமன்ற உத்தரவு மின்றி போலீசு நாய்கள் வெறியாட்டம் போட்டன. மறுநாள் காலை யில் செய்தித் தாளின் மூலம் தான் காரணமே மக்களுக்குத் தெரிய வந்தது.

ஆண்டிமடம் ஆயுதக் கொள்ளையர்களைத் தேடிப் பிடிப்பதற் காக போலீசு காரப்பட்டு வந்ததாம். வி.வி.மு.வோ, ம.க.இ.க. - பு.மா.இ.மு. போன்ற தோழமை அமைப்புகளோ இப்படிப்பட்ட இரக சிய பயங்கரவாத பரபரப்பு வேலைகளில் இறங்காது என இந்தக் காக்கிச் சட்டைக் கயவர்களுக்கு நன்றாகவே தெரியும். அவர்கள் எடுத்துச் சென்றதோ கொடிகளும் புத்தகங்களும் தான்.

கடந்த பாசிச ஜெயாவின் ஆட்சியில் ஜனநாயகமே இல்லை என காட்டுக் கூச்சல் போட்ட கருணாநிதியின் காட்டு தர்பார் தொடங்கி விட்டது. எக்காரணமுமின்றி வெறியாட்டம் போட்ட போலீசு நாய்களை தட்டிக் கேட்க சாலை மறியல் செய்தது கொலைக் குற்றமாம். 'கருணா'நிதியின் 'ஜனநாயக' ஆட்சியில் அக்கிரமத்திற்கு எதிரான சாலை மறியலுக்குக் கூடத் தடை.

இளைஞர்களைச் சீரழிக்கும் ஆபாச, வக்கிரப் படமெடுக்கும் 'படைப்பாளிகள்' பெஃப்சி உறுப்பினர்களை தாக்கிய பின் சாலை மறியல் செய்த போது பதறித் துடித்த வசனகர்த்தா கருணாநிதி அமைச்சர் பொன்முடியை விரைந்தனுப்பினார். அமைச்சரோ 'படைப்பாளி'களுடன் சாலையிலமர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி னார். அவர்கள் கருப்புப் பண கனவான்களாயிற்றே. ஆள் வைத்து அடிக்கலாம். சாலை மறியலும் செய்யலாம். ஆனால் அரசூர் கூட்டு ரோடில் அநியாயத்திற்கெதிராக சாலை மறியல் செய்தவர்கள் உழைக்கும் மக்கள் தானே! அதனால் தடியடிதான் பதில்.

காவல் நாய்களின் காட்டு தர்பாரை எதிர்த்தும் பொய் வழக் கிற்கு எதிராகவும் விழுப்புரம் நகரில் ஊர்வலமும் ஆட்சியர் அலுவ லகம் எதிரே ஆர்ப்பாட்டமும் 7.8.97-ல் நடந்தது. 250 பேர் கலந்து கொண்ட இந்த ஊர்வலத்திற்கு நூற்றுக்கணக்கான போலீசாரைக் குவித்து, பீதியூட்ட முனைந்தது போலீசு.

ஆட்சியர் அலுவலகமெதிரே ஆர்ப்பாட்டம் முடிந்த பின் (விருத்தாசலம்) பு.மா.இ.மு. தோழர் ஜெயகாந்த் சிங் காவல் துறை யின் மக்கள் விரோதப் போக்குகளைத் தோலுரித்தார். மக்கள் அடக் குமுறை கண்டு அஞ்சமாட்டார்கள் என்பதை ஊர்வலமும் ஆர்ப் பாட்டமும் தெளிவு படுத்தின.

காரப்பட்டு வேட்டையை முடித்த பின், நெய்வேலி தொ.பி.கு. தோழர் பகத்சிங் வீட்டிற்கு 25.7.97 நள்ளிரவு 1 மணியளவில் திருடனைப் போல் நுழைந்த காவல் துறை நாய்கள், பெட்டியை உடைத்து புத்தகங்களையும், வீட்டிற்கு வந்த கடிதங்களின் தொகுப் பையும் வாரிச் சென்றன. தோழர் வேலையாக வெளியே போயிருந் ததால், தோழரின் வயதான தாயாரிடம் 'என்ன பிள்ள பெத்து வச்சி ருக்க?' என இழிவாகப் பேசிச் சென்றனர்.

காலையில் தோழர் வந்து விவரமறிந்ததும், தெர்மல் காவல் நிலையம் சென்று, ஏன் இப்படி நடந்து கொண்டீர்கள் என விசா ரித்த போது, அங்கிருந்த ஏட்டு 'நாங்கள் வரவில்லை' என்று கூறி னார். அப்படியானால் போலீசு உடையில் வந்தது யார்? என்றதற்கு 'தனக்குத் தெரியாது' என்றார். 'உங்கள் காவல் எல்லைக்குள் உங்க ளுக்கே தெரியாமல் யார் வந்தது? புகார் எழுதித் தருகிறேன். நடவ டிக்கை எடுங்கள்' என்று கூறிய பின், பெரம்பலூர் கியூ பிரிவு போலீசு வந்ததாகக் கூறினார்.

இதே போல கும்பகோணத்திலுள்ள தோழர் சம்புகன் வீட்டிற் குள் 10 போலீசார் புகுந்து சில புத்தகங்களை வாரிச் சென்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## யாருக்குச் சுதந்திரம்?

உ.பி. மாநிலம் மீரட் பகுதியைச் சேர்ந்த ரீத்தா - பல்பிர் என்ற இளம் காதலர்கள், பெற்றோர்களின் விருப்பதற்கும், சாதிக் கட்டுமானத்திற்கும் எதிராகக் கலப்பு மணம் செய்து கொண்டதால், கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். ''ரீத்தாவின் பெற்றோர்கள், தங்கள் விருப்பப்படி அவர்கள் இருவருக்கும் என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம்'' என அனுமதி வழங்கியது கிராம பஞ்சாயத்து. ரீத்தா, அவரது குடும்பத்தாரால் கழுத்து நெறிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். ரீத்தாவின் உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் பொழுது, பல்பிரின் வீட்டினுள் நிதானமாக நுழைந்த அக்கும்பல், அவரைச் சரமாரியாகச் சுட்டுக் கொன்றது.

## ஆருடம் கூறுபவர்களின் தயவை வேண்டி...

தாய்லாந்து நாட்டு நாணயமான 'பாத்'தின் மதிப்பு 15 சதவீதம் வீழ்ந்து போனதால், மெக்சிகோவைப் போன்று அந்நாட்டுப் பொருளாதாரமும் சின்னாபின்னமாகி விட்டது. மக்கள் மத்தியில் எழுந்து வரும் அதிருப்தியைச் சமாளிக்க அந்நாட்டு அரசு புதிய மோசடித் திட்டம் ஒன்றையும் வகுத்து வருகிறது. ஜாதகம் கணிப்போர், கைரேகை பார்ப்போர், எண் கணித ஜோதிடர்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான ஆருடம் கூறுபவர்களை ஊக்குவிப்பதுதான் அந்தத் திட்டம். எதிர்காலம் குறித்து அச்சமுற்று வருபவர்களிடம், ''இருள் விலகி ஒளி பிறக்கும்'' என்பதை எடுத்துக் கூறுவதற்காக, இந்த ஜோதிடர்களுக்குத் தனிப்பயிற்சி வகுப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளது, அந்நாட்டு அரசு.

## அபலை என்றால் அத்துணை இளக்காரமா?

ஒரிஸ்ஸா மாநில அரசின் தலைமை வழக்கறிஞர் இந்திரஜித் ரே, அஞ்சனா மிஸ்ரா என்ற இளம் பெண்ணைப் பாலியல் பலாத்காரப்படுத்த முயன்ற வழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம். கணவரால் கைவிடப்பட்டுத் தனித்து வாழும் அஞ்சனா மிஸ்ராவின் வழக்கு பற்றி விவாதிக்க அப்பெண்ணைத் தனது வீட்டிற்கு அழைத்த ரே, மிஸ்ராவைத் தந்திரமாகத் தனது படுக்கையறைக்கு அழைத்துச் சென்று பலாத்காரப்படுத்த முயன்றுள்ளார். ரேயின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டாலும், ஒரிஸ்ஸா மாநில காங்கிரசு அரசு அவரைப் பதவியில் இருந்து நீக்கவில்லை.

## ஏகாதிபத்திய உலகின் 'சாதனை'!

உலகில் கிட்டத்தட்ட 290 கோடி மக்கள் கழிப்பிட வசதியில்லாததால், திறந்த வெளியில் மலம் கழிக்கும் அவலத்தில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் இவர்கள் காலரா போன்ற தொற்று வியாதிகளுக்குப் பலியாகிவிடும் அபாயமுள்ளது. உலகின் மொத்த இராணுவச் செலவில் பத்து சதவீதத்தை ஒதுக்கினால், அனைவருக்கும் கழிப்பிடம் கட்டிக் கொடுத்து விடலாம் என ஐ.நா. நிறுவனம் கூறுகிறது. ஆனால், 1990-ம் ஆண்டு 260 கோடியாக இருந்த கழிப்பிட வசதியற்றோரின் எண்ணிக்கை, கடந்த ஆறு ஆண்டுகளில் மேலும் 30 கோடி அதிகரித்திருப்பதுதான் ஒற்றைத் துருவ உலகின் சாதனை!



அஞ்சனா மிஸ்ரா

## வெந்த புண்ணில் வேல்

ஜெர்மனி, கனடா நாடுகளில் வேலை வாங்கித் தருவதாக ஆசை காட்டி ஏமாற்றப்பட்ட பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த 90 இளைஞர்களை, காம்பியா நாட்டில் இருந்து இந்தியாவிற்கு சென்ற ஆண்டு திரும்ப அழைத்து வந்தது மைய அரசு. கிரீஸ் நாட்டு கடலில் 170 பஞ்சாப் இளைஞர்கள் மூழ்கி இறக்கக் காரணமான மோசடிக் கும்பல்தான் இவ்விளைஞர்களையும் ஏமாற்றியுள்ளது. இருந்த அனைத்தையும் இழந்து நிற்கும் இவ்விளைஞர்களிடம், திரும்ப அழைத்து வந்ததற்குக் கட்டணமாக ரூ. 46,000/- கேட்டு, தற்பொழுது நோட்டீஸ் அனுப்பியுள்ளது வெளியுறவுத் துறை. பணம் கட்டத் தவறினால் சிறைத் தண்டனையாம்!

## மருத்துவத்திலும் இந்து மதவாதம்

''ஓம்... கிரீம்'' என மந்திரங்களைச் சொல்லி, விபூதியை முகத்தில் அடித்து நோயாளிகளைக் குணப்படுத்தும் சிகிச்சைப் பிரிவொன்றை, மௌலானா ஆசாத் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொடங்கி வைத்துள்ளது தில்லி பா.ஜ.க அரசு. விஞ்ஞானத்திற்குப் புறம்பான இம்மதவாத மூடத்தனத்திற்கு இந்திய மருத்துவக் கழகம் தெரிவித்து வரும் எதிர்ப்பை முறியடிக்க, இந்து மத வெறி அமைப்புகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு நிற்கின்றன.

## தலைவர்களா? தரகர்களா?

பம்பாய் இரகசிய உலகப் பேர்வழியான அருண்காவ்லி, தனது கட்சிக்கு (அகில பாரதீய சேனா) ஆள் பிடிக்கும் விதமே அலாதியானது. இக்கட்சியின் பயிற்சி வகுப்பின் (ஷாகா) பொறுப்பாளருக்கு மாதச் சம்பளம் ரூ. 5000/- இது தவிர தினப்படி ரூ. 50/- இப்பொறுப்பாளர் தனது வகுப்பில் 50 உறுப்பினர்களைச் சேர்த்து விட்டால் ஊக்கப் பரிசாக கார் அல்லது ஜீப்; பொறுப்பாளருக்குக் கீழ் இயங்கும் அமைப்பாளருக்கு மாதச் சம்பளம் ரூ. 3000/- இப்பணமழையைக் கண்டு பா.ஜ.க.வும், சிவசேனாவும் விக்கித்து நிற்கின்றன.

## பா.ஜ.க - சிவசேனாவின் மேல்சாதி வெறி

பம்பாய் நகரில் தாழ்த்தப்பட்டோர் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டினைக் கண்டித்து ஜூலை 14 அன்று நடந்த முழு அடைப்பு போராட்டத்தின் பொழுது, கரஞ்ஜா கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண் ஒருவரை பா.ஜ.க - சிவசேனா குண்டர்கள் நிர்வாணப்படுத்தி, அக்கிராமம் எங்கும் இழுத்துச் சென்று அவமானப்படுத்தினர். அப்பெண்ணிற்குப் போர்வையொன்றைக் கொடுத்து உதவி, அவரை போலீசு நிலையத்திற்குக் கூட்டிச் சென்று விட்டதாகக் கூறி வந்த போலீசு, இப்பொழுது அப்படியொரு சம்பவமே நடைபெறவில்லை என மறுத்து விட்டனர். மேலும், அப்பெண்ணை யாரும் சந்தித்து விடக்கூடாது எனும் நோக்கில், பொய் வழக்கொன்றை ஜோடித்துச் சிறையிலும் அடைத்து விட்டது மதவெறி அரசு.

## பகடைக் காய்கள்

இரு பன்னாட்டு மருந்து தொழிற்கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் சந்தைக்கான போட்டியில் பம்பாய் பள்ளி மாணவர்கள் பகடைக் காயாகப் பயன்படுத்தப்படுகின்றனர். மஞ்சள் காமாலை நோய் பற்றிய பீதியை மாணவர்கள் மத்தியில் உருவாக்கி, இந்நோய்க்கு உடனே தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் எனப் பள்ளிகளின் அறிவிப்பு பலகைகளிலேயே விளம்பரம் செய்து வருகின்றன, இந்நிறுவனங்கள். பள்ளி நிர்வாகம் மூலம் மாணவர்களைக் கட்டாயப்படுத்தி, தடுப்பூசி மருந்துகளை வாங்கச் செய்து, தங்கள் பணப் பெட்டியை நிரப்பி வருகின்றன, அவை.


Published and Owned by A. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083
Printed by him at EZHIL PRINTS

படிப்பகம்

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ இந்தப் படத்திலுள்ள பங்களாவில்தான் முன்னாள் சனாதிபதி சங்கர் தயாள் சர்மா குடியேறியுள்ளார். பங்களாவின் வெளியே தெரியும் நேர்த்தியைப் பார்த்தே, உள்ளே வசதிக் கொன்றும் குறை இருக்காது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் சர்மாவுக்கு வசதியற்றதாகத் தெரிந்தது. "ராஷ்டிரபதி பவன்" என்னும் உல்லாசபுரியில் ஐந்து வருடகாலம் மகாராஜாவைப் போல வாழ்ந்தவர் அல்லவா அவர். பங்களாவைப் புதுப்பிக்கவும், புதிய அறைகள் கட்டவும், கலைப் பொருட்கள் - தரை விரிப்புகளால் அழகூட்டவும் 40 இலட்சம் ரூபாய் தரக் கோரி, பதவி இறங்குமுன் மைய அரசுக்குக் கடிதம் எழுதினார். சட்டப்படி 2.5 லட்சம் ரூபாய்தான் தர முடியும் எனப் பதில் அளித்தது குஜ்ரால் அரசு. சர்மா, காந்தியின் வாரிசு அல்லவா? .... "ராஷ்டிரபதி பவனை விட்டு வெளியேற மாட்டேன்" என்று ஒத்துழையாமை போராட்டத்தை அறிவித்தார். அரண்டு போனது மைய அரசு. "கொஞ்சம் குறைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று கெஞ்சிப் பார்த்தது. "இதுவே கொஞ்சம் தான்; இன்னும் பங்களா முழுவதும் குளிர் சாதன வசதி வேண்டும்; இலவசமாக மின்சாரம் வேண்டும்" என அடுக்கினார் சர்மா. விட்டால் இன்னும் என்னென்ன கேட்பாரோ என ஆடிப் போன குஜ்ரால், மந்திரி சபையின் ஒத்துழைப்போடு நாற்பது இலட்ச ரூபாயை அள்ளிக் கொடுத்து விட்டார்.



இதோ இங்கே உண்ணாவிரதம் இருப்பவர்கள் சென்னை - ஊரூர் ஆல்காட்டு குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள். தங்கள் தொழிலுக்கு வசதியாக, கடற்கரைக்கு அருகிலேயே அரசாங்கம் குடியிருப்புகளை அமைத்துத் தர வேண்டும் என்பதுதான் இவர்களின் கோரிக்கை. இந்த ஆண்டு கோடையில் கடல் அரிப்பு அதிகமாகி, இவர்களின் குடிசைகள் எல்லாம் சின்னாபின்னமாகி விட்டது. இதனால் எலியட்ஸ் கடற்கரையில் குடிசை போட்டுக் கொண்டனர் இம்மீனவர்கள். "ஆக்கிரமிப்பு" எனக் குற்றஞ் சுமத்தி போலீசு பட்டாளத்தைக் குவித்தது, தி.மு.க. அரசு. "ஒரு வாரத்திற்குள் குடிசைகளை அகற்றா விட்டால் துப்பாக்கிச் சூடு நடத்துவேன்" என மிரட்டிச் சென்றுள்ளார் மாவட்ட ஆட்சியாளர். "காலம் காலமாக இங்கே வசித்து வரும் நாங்கள் எங்கே போவது?" என்ற மீனவர்களின் நியாயமான கேள்விக்கு அதிகார வர்க்கத்தின் பதில்: "எங்கோ போய்த் தொலையுங்கள்."

சட்டத்தை மீறி சலுகைகளை அனுபவிக்கும் சர்மா போன்ற ஆளும் கும்பல்கள் ஒருபுறம்; நியாயமான வசதிக்காக அமைதியாகப் போராடினாலும் அடித்துத் துரத்தப்படும் உழைக்கும் மக்கள் மறுபுறம். இந்த அநீதி தொடர இன்னுமா நாம் அனுமதிப்பது?